விலை : 20.00
பக்கங்கள் : இருபத்து நான்கு
website : www.valampurii.lk
Viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
# Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

சங்கு 18 வள்ளுவர் ஆண்டு 2048 சித்திரை 13 புதன்கிழமை (26.04.2017) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 128

தரம் - 5
புலமைப் பரிசில் பரீட்சை மாதிரி வினாத்தாள் இன்றைய வலம்புரியில்...

# வடக்கு, கிழக்கு தழுவிய ஹர்த்தால் நாளை

## காணாமல்போனோரின் உறவுகள் ஏற்பாடு; பொது அமைப்புகள் பூரண ஆதரவு

(யாழ்ப்பாணம்)

வலி சுமந்த பல போராட்டங்கள் வடக்கு - கிழக்கு எங்கும் பரவலாக முன்னெடுக்கப்பட்டு வரும் நிலையில், காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகளின் ஏற்பாட்டில் நாளை 27ஆம் திகதி வியாழக்கிழமை வடக்கு - கிழக்கு தழுவிய ரீதியில் பூரண ஹர்த்தால் அனுஷ்டிக்கப் படவுள்ளது. மேற்படி ஹர்த்தாலுக்கு அரசியல் கட்சிகள், பொது அமைப்புக்கள், மாணவர்கள், வர்த்தகர்கள் என பல தரப்பட்டவர்களும் போராட்டத்துக்கு அழைப்பையும், ஆதரவினையும் வலுச்சேர்க்கும் வகையில் வெளியிட்டு வருகின்றனர். (செ)

## பொது வேலை நிறுத்தம்; தமிழரசுக் கட்சி ஆதரவு

(யாழ்ப்பாணம்)

காணாமல் ஆக்கப்பட்டோர் மற்றும் நில விடுவிப்பு போராட்டங்களுக்கு தமிழரசுக் கட்சி தனது ஆதரவினை தெரிவித்துள்ளதாக குறிப்பிட்ட அக்கட்சியின் தலைவரும், பாராளு மன்ற உறுப்பினருமான மாவை.சேனாதி ராசா, நாளை 27-ம் திகதி இடம்பெறும் பொது வேலை நிறுத்தத்துக்கு அனைவரும் ஒத்துழைக்க வேண்டும் எனவும் கேட்டுக்கொண்டுள்ளார்.

போர்க் காலங்களிலும் போர் 23☛

## ஒன்றிணைவோம்; த.தே.ம முன்னணி

(யாழ்ப்பாணம்)

வேதனைகளைச் சுமந்தவாறு நாளாந்தம் வீதிகளில் உறங்கி எழுந்து போராடி வருகின்ற மக்களின் துயர் துடைக்க ஒன்றிணைந்த போராட்டங்கள் வலுப்பெற வேண்டும் என தெரிவித்துள்ள தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி, நாளை 27-ம் திகதி வடக்கு - கிழக்கு தழுவிய ரீதியில் காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகளால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள ஹர்த்தால் போராட்டம் 23☛

## போராட்டத்துக்கு ஆதரவு தாருங்கள்
### மருதங்கேணி உறவுகள்

(கரணவாய்)

நாளை வியாழக்கிழமை வடக்கு - கிழக்கு பகுதிகளில் நடைபெறும் பூரண கதவடைப்பு போராட்டத்துக்கு யாழ்.மாவட்டத்தில் உள்ள பொது அமைப்புக்கள், நிறுவனங்கள் போராட்டத்தில் கலந்து கொண்டு ஆதரவினைத் தருமாறு மருதங்கேணியில் உள்ள காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளைத் தேடியறியும் அமைப்பு கோரிக்கை விடுத்துள்ளது. 23☛

## பலம் மிக்க போராட்டமாக ஒருமித்து போராடுவோம்
### தமிழ் மக்கள் பேரவை வலியுறுத்து

(யாழ்ப்பாணம்)

தமிழர் தாயகமெங்கும் கருக்கொண்டிருக்கும் மக்கள் போராட்டங்கள் ஒருங்கிணைக்கப்பட்டு தாயகம் தழுவிய மக்கள் போராட்டமாக பரிணமிக்கவேண்டும் என தமிழ் மக்கள் பேரவை கேட்டுக்கொண்டுள்ளது.

நாளை 27-ம் திகதி வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகளால் வடக்கு - கிழக்கு ரீதியில் ஏற்பாடு செய்யப்பட்ட ஹர்த்தாலினை வலுச்சேர்க்கும் வகையில் பேரவை இந்த அறிக்கையை நேற்று வெளியிட்டுள்ளது.

அதில் பலவந்தமாக காணாமல் போகச் செய்யப்படவர்களின் உறவுகளும், இராணுவ ஆக்கிரமிப்பால் தமது காணிகளை 23☛

## ஈ.பி.ஆர்.எல்.எவ் பூரண ஆதரவு

(யாழ்ப்பாணம்)

வடக்கு கிழக்கில் இடம்பெறவுள்ள கடையடைப்பு போராட்டத்திற்கு தமது கட்சி பூரண ஆதரவை வழங்குவதாக ஈ.பி.ஆர்.எல்.எவ். கட்சியின் தலைவரும் தமிழ் தேசிய கூட்டமைப்பின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினருமாகிய சுரேஸ் பிரேமச்சந்திரன் தெரிவித்துள்ளார்.

நேற்றைய தினம் யாழ்.ஊடக அமையத்தில் இடம்பெற்ற பத்திரிகையாளர் சந்திப்பின் போதே அவர் மேற்கண்டவாறு 04☛

## சம்பந்தன் - இஷா சந்திப்பு



23☛

## வவுனியா வர்த்தக சங்கம் ஆதரவு

(குருமன்காடு)

வடக்கு கிழக்கு பிரதேசத்தில் நாளை 27 ஆம் திகதி நடைபெறவுள்ள பூரண கடையடைப்பு போராட்டத்திற்கு வவுனியா வர்த்தக சங்கம் தமது பூரண ஆதரவை வழங்கியுள்ளதாக அதன் தலைவர் ரி.கே.இராஜலிங்கம் தெரிவித்தார்.

வடக்கு, கிழக்கு பகுதிகளில் நிலமீட்புக்காகவும், காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளுக்கு நீதி வேண்டியும் ஆரம்பிக்கப்பட்ட மக்கள் போராட்டங்கள் இரண்டு மாதங் 23☛

## முல்லை வர்த்தக சங்கங்கள் ஆதரவு

(பனிக்கன்குளம்)

முல்லைத்தீவு மாவட்ட செயலகத்திற்கு முன்பாக கூடாரம் அமைத்துள்ள காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் முன்னெடுத்து வரும் போராட்டம் நேற்றுடன் நாற்பத்து ஒன்பதாவது நாளாக முன்னெடுக்கப்பட்டுள்ளது.

அதேவேளை கேப்பாப்பிலவு மக்களின் நிலமீட்பு போராட்டம் நேற்று 56 ஆவது நாளாக இடம்பெற்று வருகின்றது. கடந்த மார்ச் மாதம் முதலாம் திகதி தொடக்கம் முன்னெடுக்கப்பட்ட கவனயீர்ப்பு போராட்டம், 23☛

## வவுனியா இ.போ.ச ஆதரவு

(குருமன்காடு)

நாளை 27 ஆம் திகதி வடக்கு, கிழக்கு 24☛

## பேருந்து மீது கல்வீச்சு

(மல்லாவி)

தலைமன்னாரில் இருந்து கொழும்பு நோக்கி பயணித்த மன்னார் இ.போ.ச சாலைக்குச் 04☛

## கடலில் மூழ்கி வயோதிபர் பலி

(கோப்பாய்)

கீரிமலை கடற்பகுதியில் இருந்து வயோதிபர் ஒருவர் நேற்றுக் காலை சடலமாக மீட்கப்பட்டு 24☛

## உணவகத்தில் தீ விபத்து

(குருமன்காடு)

வவுனியா செட்டிக்குளம் வைத்தியசாலைக்கு முன்பாக உள்ள உணவகம் ஒன்றில் நேற்றிரவு 8 மணியளவில் ஏற்பட்ட தீயின் காரணமாக உணவகம் கடும் சேதத்துக்கு 23☛

# யாழ்.பல்கலை சமூகம் பூரண ஆதரவு

## மாணவர் ஒன்றியம்

(யாழ்ப்பாணம்)

காணாமல் ஆக்கப்பட்டவர்களது உறவுகளின் ஹர்த்தால் போராட்டத்துக்கு யாழ்.பல்கலை மாணவர் ஒன்றியம் தனது ஆதரவை வெளியிட்டுள்ளது.

இதுதொடர்பில் அவ் அமைப்பு நேற்றிரவு அனுப்பி வைத்த ஊடக அறிக்கை வருமாறு,

மேற்படி விடயம் தொடர்பாக கடந்த காலங்களில் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் நிலை தொடர்பாக அரசாங்கமானது 23☛

## ஆசிரியர் சங்கம்

(யாழ்ப்பாணம்)

நீண்டகாலமாக தீர்க்கப்படாமல் இருக்கும் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் போராட்டத்துக்கு விரைந்து தீர்வு காணப்பட வேண்டும் என வலியுறுத்தியுள்ள யாழ்.பல்கலைக்கழக ஆசிரியர் சங்கம், நாளை முன்னெடுக்கப்படுகின்ற பூரண ஹர்த்தாலுக்கு அனைவரும் ஒத்துழைப்பையும் ஆதரவை வழங்க வேண்டும் எனவும் கோரிக்கை விடுத்துள்ளது. 23☛

## ஊழியர் சங்கம்

(யாழ்ப்பாணம்)

நாளை 27-ம் திகதி வடக்கு - கிழக்கு தழுவிய முழுஅடைப்பு போராட்டத்துக்கு யாழ். பல்கலைக்கழக ஊழியர் சங்கம் ஆதரவு வெளியிட்டுள்ளது.

வடக்கு கிழக்கில் பொதுமக்களால் கடந்த சில மாதங்களாக பல காரணங்களை முன்னிட்டு நடத்தப்படுகின்ற தொடர் போராட்டங்களினை அரசு கவனத்தில் எடுக்கவில்லை.

எனவே அரசின் கவனத்தையும் 23☛

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சேவிஸ் வேலையாள் தேவை

வாகன சேவிஸ் வேலைகள் தெரிந்தவர்களும் பழக விரும்புபவர்களும் தொடர்பு கொள்ளவும். (8836)

தொடர்புகளுக்கு:- 077 790 2427

## இறைச்சிக் கோழிகள் விற்பனைக்கு

2 Kg இற்கு மேல் நிறையுடைய புறொயிலர் கோழிகள் விற்பனைக்கு உண்டு.(8837)

077 245 3673


# தமிழர் விடுதலைக் கூட்டணி ஆதரவு

(யாழ்ப்பாணம்)

காணாமல்போனோர் சம்பந்தமாகவும் தனிப்பட்டவர்களின் காணிகளை திருப்பி கொடுப்பதில் தாமதம் ஏற்படுவதையும் ஆட்சேபித்து வடக்கு - கிழக்கு மாகாணத்தில் நாளை 27ஆம் திகதி நடத்தப்படவிருக்கின்ற ஹர்த்தாலுக்கு தமிழர் விடுதலைக் கூட்டணி தனது முழு ஆதரவையும் வழங்கும்.

இந்த இரு விடயங்கள் சம்பந்தமாக உடனடி நடவடிக்கை எடுக்குமாறு தமிழர் விடுதலைக் கூட்டணி, அரசாங்கத்தை தொடர்ந்தும் வலியுறுத்தி வருகின்றது எனவும் தமிழர் விடுதலைக் கூட்டணியின் செயலாளர் வீ. ஆனந்தசங்கரி தெரிவித்துள்ளார். (செ-1)

## மரண அறிவித்தல்

### திருமதி கனகம்மா வீரகத்தி



பிறப்பு 17.06.1924 இறப்பு 24.04.2017

சுழிபுரத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி கனகம்மா வீரகத்தி 24.04.2017 திங்கட்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற சபாபதிப்பிள்ளை - தெய்வானை தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்ற தம்பையா - சின்னக்குட்டி தம்பதியரின் அன்பு மருமகளும் வீரகத்தியின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற வேலாயுதம் மற்றும் இராஜவல்லவன் ஆகியோரின் அருமைச் சகோதரியும் காலஞ்சென்ற தங்கரத்தினம் மற்றும் சற்குணவல்லி ஆகியோரின் மைத்துனியும் நாகராசா (பிரான்ஸ்), காலஞ்சென்ற சிவராசா மற்றும் கேந்திரராசா (பிரான்ஸ்) ஆகியோரின் அருமைத் தாயும் தவமலர் (பிரான்ஸ்), நாகவிஜி (பிரான்ஸ்), சபாநாதன் (லண்டன்), இரவீந்திரன் (லண்டன்), ஜீவா, சிவலிங்கம் (லண்டன்), சிவநேசன், சிவநாதன் ஆகியோரின் மாமியும் வாகிசர், திலகா, திவாகர், தேவகி, திவ்யா (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரது இல்லத்தில் இன்று (26.04.2017) புதன்கிழமை காலை 8.00 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக திருவடிநிலை இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும். (C-8264)

சுழிபுரம் மத்தி,
சுழிபுரம்

தகவல்:
குடும்பத்தினர்
076 921 0743, 021 205 1703, 077 922 8809


## வேலையாட்கள் தேவை

நக்காவீதி, பொஸ்கோ பாடசாலைக்கு அருகிலுள்ள பாடசாலை உபகரணங்கள், Fancy item விற்கும் கடைக்கு பொறுப்பாக நடத்தக்கூடிய திறமையுள்ள நம்பிக்கையான பெண்பிள்ளை உடனடியாக தேவை.

தொடர்புக்கு:-0770476236, 0779978332

(8845)

WESTERN UNION WU

moving money for better

உலகெங்குமுள்ள நாடுங்கள்

உறவுகளுக்கு துரித தபால்கள், பொதிகள் சேவை உடனுக்குடன் அனுப்ப

உறவுகளிடமிருந்து WESTERN UNION மூலம் அனுப்பிய பணத்தை ஒருசில நிமிடங்களில் நீங்கள் பெற்றுக்கொள்ள.

இவையனைத்தையும் ஒரே கூரையின் கீழ் அதிவிரைவு, பாதுகாப்பு, நம்பகத்தன்மை

(தி-8260)

Authorised Agent
SRI MURUGAN
TELE COMMUNICATION & AGENCY POST OFFICE
# 303, K.K.S.ROAD, JAFFNA.
TEL: 021 222 5392, 021 222 2670, FAX: 021 222 3214
E-mail:srimurugan303@gmail.com, E-mail:srimurugan09@gmail.com


## 31ம் நாள் நினைவு அஞ்சலி



கலாபூஷணம்
அமரர்
### நா. செல்லத்துரை

(C-8265)

கலாபூஷணம் அமரர் நா. செல்லத்துரை அவர்கள் பூதத்தம்பி திரைப்படத்தின்போது எம்மோடு இணைந்து நடித்துள்ளார். இந்தப் படத்தில் வரும் நடனப் பாடல்கள் இவருடைய ஆக்கங்களே, எனவே இவரின் இழப்பு எமக்கு எல்லாம் பேரிழப்பாகும். அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனை வேண்டி நிற்கின்றோம்.

55/1, டேவிட் றோட், யாழ்ப்பாணம்.

நகைச்சுவை மணி
பூதத்தம்பி புகழ் மு. முருகானந்தம்

## மரண அறிவித்தல்



### நாகமுத்து சோமலிங்கம்

புங்குடுதீவு 3ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் புங்குடுதீவு 11ஆம் வட்டாரத்தை வசிப்பிடமாகவும் தற்போது கோப்பாய் வடக்கு மார்க்கம்பரையில் வசித்து வந்தவருமாகிய நாகமுத்து சோமலிங்கம் நேற்று (25.04.2017) இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற நாகமுத்து - அன்னலட்சுமி தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்ற சோதிராசா - தில்லையம்மா தம்பதியரின் அன்பு மருமகனும் சிவஞானேஸ்வரியின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற சண்முகலிங்கம், ராசலிங்கம் (பிரான்ஸ்), திலகவதி (பிரான்ஸ்), தட்சணாமூர்த்தி (லண்டன்) ஆகியோரின் அன்புச் சகோதரனும் சுபதினி (சுவிஸ்), சுபேந்திரன் (பணியாளர் - ஸ்ரீமுத்துமாரி ரேடேர்ஸ்), சுபதர்சினி (ஆசிரியர் - யா/வேம்படி மகளிர் உயர்தர பாடசாலை), சுபாஸ்கரன் (காவலாளி - NSB நெல்லியடி), சுபறாஜினி (ஆசிரியர் - கிளி/புனித திரேசா பெண்கள் பாடசாலை) ஆகியோரின் அன்புத் தந்தையும் விக்னேஸ்வரன் (சுவிஸ்), சுகந்தி (நுணாவில்), சோதிரூபன் (கணக்காளர் - RVG), தருசினி, சிறிதரன் ஆகியோரின் மாமனாரும் விசால், வித்தியார்த், விசாலி, பகிர்த்தனன், ஆகாஸ், கிருசாந்தன், திவ்வியன், சாத்விகா, ஆரபி, சாகித்தியா, கஸ்வின் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் நாளை (27.04.2017) வியாழக்கிழமை காலை 10.00 மணிக்கு நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோப்பாய் கந்தன்காடு மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும். (8839)

மார்க்கம்பரை,
கோப்பாய் வடக்கு,
கோப்பாய்.

தகவல்:
குடும்பத்தினர்
021 492 3933, 077 368 6752

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மீதொட்டமுல்ல குப்பைமேடு சரிவினால் உயிரிழந்தவர்களுக்கு அஞ்சலி செலுத்தும் நிகழ்வு நேற்றைய தினம் யாழ். பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் நடைபெற்றது. கலைப்பீட மாணவர் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் நடைபெற்ற இந்த அஞ்சலி நிகழ்வில் விரிவுரையாளர்கள், யாழ். பல்கலையின் அனைத்து பீடங்களின் மாணவர்கள் கலந்து கொண்டு மலர் தூவி, தீபம் ஏற்றி அஞ்சலி செலுத்தினர். (படங்கள்:-பொ.சோபிகா)

# கிழக்கு மாகாண பட்டதாரிகளின் போராட்டத்தில் நீதிமன்ற உத்தரவு கிழித்து வீசப்பட்டதால் பரபரப்பு







கிழக்கு மாகாண சபையின் அமர்வு நேற்று செவ்வாய்க்கிழமை நடைபெற்றுக் கொண்டிருந்த போது மாகாண சபைக்கு முன்பு பிரதான வீதியை வழிமறித்து பட்டதாரிகள் கூச்சலிட்டு ஆர்ப்பாட்டம் மேற்கொண்டனர்.

இந்தப் போராட்டத்தை அமைதியான முறையிலும் எவருக்கும் அசௌகரியத்தை ஏற்படுத்தாத வண்ணமும் முன்னெடுக்குமாறு திருகோணமலை நீதவான் நீதிமன்ற நீதிபதி எம். எச்.எம். ஹம்ஸா பிறப்பித்த உத்தரவின் பிரதியை போராட்டத்தில் ஈடுபட்டிருந்த தென்னே ஞானானந்த தேரர் கிழித்து காலால் மிதித்த செயலால் பரபரப்பு ஏற்பட்டது.

இதனால் அவ்விடத்தில் அதிகளவான கலகம் அடக்கும் பொலிஸாரும் சாதாரண பொலிஸ் உத்தியோகத்தர்களும் குவிக்கப்பட்டிருந்தனர்.

கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்த 4500 இற்கும் அதிகமான பட்டதாரிகள் தமக்கான அரச தொழில் வாய்ப்பைக் கோரி இரண்டு மாதங்களுக்கு மேலாக தெருவோரங்களில் வந்தமர்ந்து போராட்டம் நடத்தி வருகின்றனர்.

அதன் ஒரு கட்டமாக கிழக்கு மாகாணத்தின் மூன்று மாவட்டங்களையும் சேர்ந்த பட்டதாரிகள் இணைந்து நேற்று செவ்வாய்க்கிழமை திருகோணமலையிலுள்ள மாகாண சபைக்கு முன்பு போராட்டத்தில் ஈடுபட்டனர் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-3)

## கடையடைப்புப் போராட்டத்திற்கு வீணாகான குருமார்பீடம் ஆதரவு

(யாழ்ப்பாணம்)

காணாமற் போனோரின் உறவினர்களால் நாளை வியாழக்கிழமை நடத்தத் திட்டமிடப்பட்டுள்ள கடையடைப்புப் போராட்டத்திற்கு தமிழ் பேசும் வடக்கு-கிழக்கு தாயக மக்கள் அனைவரும் தமது மேலான ஆதரவினை வழங்குமாறு குருமார் சந்நிதானம் வேண்டுகின்றோம்.

அரசினுடைய கவனிப்பு அற்று நீண்ட நாட்களாக போராடிக் கொண்டிருக்கின்ற காணாமல் ஆக்கப் பட்டவர்களுக்கு நீதி கிடைக்க நடத்தப்படுகின்ற இப் போராட்டத்திற்கு வலுச்சேர்க்கும் வகையில் அனைத்துத் தரப்பினரும் கருத்து முரண்பாடுகள் அற்ற வகையில் ஒன்று சேர்ந்து ஒத்துழைப்புகளை வழங்க வேண்டும்.

இச்சந்தர்ப்பத்தில் இந்துக் குருமார்களும் ஆலய சமூகத்தினரும் ஆன்மீக வலுச் சேர்க்க தமது ஒத்து ழைப்புக்களை வழங்கும் முகமாக அன்றையதினம் இறை சந்நிதானங்களில் பிரார்த்தனைகளில் ஈடுபடுமாறும் வேண்டுகின்றோம்.

ஒரு சாராராகிய நாம் ஒருபுறம் சந்தோசத்தினையும் கொண்டாட்டங்களையும் நடத்தி வரும் வேளையில் மறுபுறம் எமது சகோதர உறவுகள் யுத்தம் நிறைவடைந்த பிற்பாடும் தொடர்ந்தும் அநாதைகளாக அமைதியின்றி. மகிழ்ச்சியின்றி தமது துன்பங்களுக்கு முற்றுப்புள்ளி கிடைக்காதா? என்ற ஏக்கத்துடன் அவல வாழ்வாக இன்று நீண்ட நாட்களாக தெருக்களில் தமது வாழ்வை நடத்திக்கொண்டு இருக்கின்றார்கள்.

இவர்களது துன்பங்கள் விடுபடவேண்டும். அதற்கு நாம் அனைவரும் முழுமையான ஆதரவு வழங்க வேண்டும். சர்வதேசம் அழுத்தம் கொடுக்க வேண்டும். அரசு உடனடியாக இவர்களது கோரிக்கைகளுக்கு செவி சாய்த்து நடவடிக்கைகள் எடுத்தல் வேண்டும்.

மக்களது சாத்வீகமான போராட்டத்திற்கு இறையருளுடன் இந்துக் குரு மார்களும் ஆலயசமூகத்தினரும்ஆதரவை வழங்கிவலுச்சேர்ப்போம் என வீணாகான குருபீட குருமார் சந்நிதான சிவஸ்ரீ. சபா. வாசுதேவக்குருக்கள் விடுத்துள்ள செய்திக் குறிப்பில் தெரிவித்துள்ளார். (இ)

## உள்ளூராட்சிமன்ற தேர்தல் பற்றிய அமைச்சரவைப் பத்திரம் தாக்கல்

உள்ளூராட்சிமன்றதேர்தலை நடத்துவது தொடர்பிலான விசேட அமைச்சரவை பத்திரத்தை அமைச்சரவையில் தாக்கல் செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

மாகாண மற்றும் உள்ளூராட்சி மன்ற விவகார அமைச்சர் பைஸர் முஸ்தபா இந்த அமைச்சரவை பத்திரத்தை தாக்கல் செய்வார் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

எதிர்வரும் உள்ளூராட்சி மன்ற தேர்தல் நடவடிக்கைகள் தொடர்பில் குறித்த அமைச்சரவை பத்திரம் தாக்கல் செய்யப்பட்ட பின்னர் அது பற்றிய தீர்மானங்கள் எட்டப்படும்.

அதனைத் தொடர்ந்து தேர்தல்கள் எவ்வாறு நடத்தப்படும் என விரிவாக ஆராயப்படவுள்ளதாக தேசிய கலந்துரையாடல்கள் தொடர்பான அமைச்சர் மனோ கணேசன் தெரிவித்துள்ளார். (இ-7)

## பாக். பிரதிநிதிகள் இலங்கைக்கு விஜயம்



பாகிஸ்தானிய தேசிய பாதுகாப்புப் பல்கலைக்கழகத்தின் 18 பேர் அடங்கிய உயர்மட்ட பிரதிநிதிகள் குழு கட்டளைத் தளபதி ஷாஹித் சொஹெலின் தலைமையின் கீழ், வெளிநாட்டு கற்கைகள் தொடர்பான ஆய்வின் நிமித்தம் இம்மாதம் 23 தொடக்கம் 28 வரையில் இலங்கைக்குவிஜயம்மேற்கொண்டுள்ளது.

பாகிஸ்தானியப் பாதுகாப்புப் படைகளின் உயர்மட்ட அதிகாரிகள், பாகிஸ்தானிய தேசிய பாதுகாப்புப் பல்கலைக்கழகத்தில் போர் கற்கை நெறி மற்றும் தேசிய பாதுகாப்பு தொடர்பான கற்கைகளில் ஈடுபடுகின்ற நேபால் மற்றும் ஜேர்மனிய நாட்டு அதிகாரிகள் இக்குழுவில் உள்ளடங்குகின்றனர். இலங்கையின் பாதுகாப்பு, பொருளாதார மற்றும் உள்நாட்டு-வெளிநாட்டு கொள்கைகள் தொடர்பான கற்கையினை இலக்காகக் கொண்டுள்ளது. வெளிநாட்டுக் கொள்கைகள் குறித்த ஆய்வின்பொழுது, இக்குழுவானது இலங்கைப் பாதுகாப்புப் படைகளின் முக்கிய பிரமுகர்கள், பாதுகாப்பு படைகளின் பிரதானி, இலங்கை விமானப்படை மற்றும் கடற்படைகளின் தளபதிகளையும் சந்தித்துக் கலந்துரையாடவுள்ளது. அத்துடன், காலி மற்றும் திருகோணமலைக்கும் இக்குழு விஜயம் செய்யவுள்ளது.

பாகிஸ்தானிய தேசியப் பாதுகாப்பு பல்கலைக்கழகம் நாட்டின் தேசிய அறிஞர்கள் சபையாக செயற்படுவதுடன், உள்நாட்டு மற்றும் சர்வதேச மட்டங்களில் நாட்டின் சிரேஷ்ட தலைமைக்கு பாதுகாப்பு விடயங்கள், கொள்கையாக்கம் மற்றும் மூலோபாய உருவாக்க விடயங்களில் சேவையினை வழங்குகின்ற பாகிஸ்தானின் முன்னணி நிறுவனமாக இயங்கி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

## மாணவர்களை இலக்கு வைத்து போதைப்பொருள் விற்பனை

(கொழும்பு)

கம்பஹா மாவட்டத்துக்குட்பட்ட பிரதான பாடசாலைகளில் படிக்கும் மாணவர்களை இலக்கு வைத்து, போதைப்பொருள் விற்பனை செய்யப்பட்டு வருவதால், பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள் மற்றும் பெற்றோர்கள் மிக் அவதானமாகவும், விழிப்புடனும் இருக்குமாறு, கம்பஹா மாவட்ட தலைமையகப் பொலிஸார் எச்சரிக்கை விடுத்துள்ளனர். கம்பஹா மாவட்ட பொலிஸாருக்குக் கிடைத்த தகவலின் அடிப்படையில், பிரதான பாட சாலைக்கு அருகில், ஹெரோயின் போதைப்பொருள் பக்கெட்டுக்களுடன் நடமாடித்திரிந்த மாணவனை இவ்வாறு கைது செய்ய முடிந்ததாகப் பொலிஸார் தெரிவித்தனர். இம்முறை க.பொ.த. உயர்தரப் பரீட்சை எழுதவுள்ள இம்மாணவனை, ஐந்து போதைப்பொருள் பக்கெட்டுக்களுடன் கைது செய்த பொலிஸார், மாணவனிடம் தொடர்ந்தும் மேற்கொண்ட விசாரணைகளின்போதே, மேற்கண்ட விடயம் அம்பலத்துக்கு வந்துள்ளதாகத் தெரிவித்தனர்.

கம்பஹா சிரேஷ்ட பொலிஸ் அதிகாரி முதித்த புஸ்ஸெல்ல, கம்பஹா தலைமையகப் பிரதான பொலிஸ் பரிசோதகர் ஏ.டபிள்யூ.ஏ. கப்பார் ஆகியோரின் பணிப்பின் பேரில், கம்பஹா பொலிஸ் பிராந்திய விழிப்புப் பிரிவு அதிகாரிகள், இம் மாணவனைக் கைது செய்து, கம்பஹா பிரதான நீதிமன்றில் [illegible] குறிப்பிடத்தக்கது. (இ-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிளி. அனைத்து பல்கலை மாணவர் ஒன்றியம் ஆதரவு

(கிளிநொச்சி)

வலிந்து காணாமல் ஆக்கப் பட்ட எமது உறவுகளை மீட்டெடுப் பதற்கு நாளைய தினம் ஹர்த்தாலி ற்கு ஆதரவளிப்போம் என கிளி நொச்சி மாவட்ட அனைத்து பல்க லைக்கழக மாணவர் ஒன்றியம் தெரிவித்துள்ளது. இது தொடர்பாக அவ் அமைப்பு வெளியிட்டுள்ள அறிக்கையில்.

கடந்த முப்பது ஆண்டுகாலமாக நடைபெற்றுவந்த யுத்தம் முடிவி ற்கு வந்துள்ளபோதிலும் பல உறவு கள் வலிந்து காணாமல் ஆக்கப்பட் டுள்ளமையும் நாம் அறிந்ததே! இவ்வாறு வலிந்து காணாமல் ஆக் கப்பட்டவர்களை மீட்டெடுப்பதற் காக நாளுக்கு நாள் போராட்டங்கள் நடைபெற்ற வண்ணமே இருக் கின்றது.

அந்தவகையில் கடந்த இரு மாதங்களுக்கு மேலாக கிளிநொ ச்சி கந்தசுவாமி ஆலய முன்றலில் போராட்டங்கள் முன்னெடுக்கின்ற போதிலும். அதற்கு சரியான தீர்வு கள் எதுவும் எட்டப்பட வில்லை.

எனவே வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களை மீட்டெடுக் கும் போராட்டத்திற்கு ஆதரவு அளிக்கும் வகையில் நாளைய தினம் வடக்கு. கிழக்கு மாகாண ங்கள் தழுவிய பூரண ஹர்த்தாலு க்கு. கிளிநொச்சி மாவட்ட அனைத் துப் பல்கலைக்கழக மாணவர் ஒன் றியம் தனது பூரண ஆதரவினை வழங்குகின்ற அதேவேளை. பாட சாலை மாணவர்களது ஆதர வினையும். அனைத்து தமிழ் பேசும் மக்களது ஆதரவினையும் வேண்டிநிற்கின்றோம் என அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (செ -11)

## தலா 9 மில்லியன் நிதியில்

# யாழ்., முல்லை., கிளிநொச்சிக்கு 3 நோயாளர் காவு வண்டிகள்



வடமாகாண சுகாதார அமைச் சினால் வடமாகாணத்தில் உள்ள 3 மாவட்டங்களுக்கு வசதிகளு டன் கூடிய நோயாளர் காவு வண்டி கள் வடமாகாண சுகாதார அமைச் சரால் நேற்றைய தினம் அந்தந்த மாவட்டங்களின் சுகாதார சேவை கள் பணிப்பாளர்களிடம் வழங்கி வைக்கப்பட்டது.

இது தொடர்பில் வடமாகாண சுகாதார அமைச்சர் பா.சத்தியலிங் கம் ஊடகங்களிடம் கருத்து தெரி விக்கையில்,

வடமாகாண சுகாதார அமைச் சின் 2016 ஆம் ஆண்டுக்குரிய மாகாண குறித்தொதுக்கப்பட்ட நிதியில் இருந்து யாழ்ப்பாணம். முல்லைத்தீவு. கிளிநொச்சி ஆகிய மாவட்டங்களுக்கு அவசர தேவை யான நோயாளர் காவு வண்டிகள் கொள்வனவு செய்யப்பட்டுள்ளன.

ஒவ்வொன்றும் தலா 9 மில்லி யன் ரூபா நிதியில் கொள்வனவு செய்யப்பட்டுள்ளன.

இவை அவசர சிகிச்சை பிரிவிற் காக மட்டுமே பயன்படுத்தப்படவுள் ளது.

மத்திய அரசாங்கத்தில் இருந் தும் மேலும் 21 நோயாளர் காவு வண்டிகள் கிடைப்பதற்கான ஏற்பா டுகள் செய்யப்பட்டுள்ளன.

அதன் அடிப்படையில் வடமா காணத்தில் உள்ள ஒவ்வொரு மாவட்டங்களிலும் தலா 2 நோயா ளர் காவு வண்டிகள் மேலதிகமாக அவசர சிகிச்சைக்கென பயன்படுத் தப்படவுள்ளது.

வடக்கு மாகாண சுகாதார அமைச்சினால் கடந்த வருடம் அறிமுகம் செய்யப்பட்ட அவசர நோயாளர் காவு வண்டித் திட்டம் சிறப்பாக இடம்பெற்று வருகிறது.

அச் சேவை மேலும் விரிவாக் கப்பட்டு நோயாளர் சேவையினை தரமாக வழங்குவதற்கு வடமாகாண சுகாதார அமைச்சு நடவடிக்கை களை மேற்கொள்ளும் என அவர் மேலும் தெரிவித்தார். (செ-4.9.312)

# மீண்டும் பதான் களத்தில்

ஐ.பி.எல் தொடரில் குஜராத் அணியிலிருந்து காயம் காரண மாக விலகிய பிராவோவுக்கு பதி லாக இந்திய அணியின் முன்னாள் வேகப்பந்து வீச்சாளர் இர்பான் பதான் களமிறங்க உள்ளார்.

10-வது ஐ.பி.எல் கிரிக்கெட் தொடர் நடைபெற்றுவரும் நிலை யில் குஜராத் அணியில் இடம்பெற் றிருந்த மேற்கிந்தியத் தீவுகளைச் சேர்ந்த வெய்ன் பிராவோ காயம் காரணமாக ஒரு போட்டியில் கூட ஆடாமல் இருந்தார். மேலும். காயம் சரியாகாததால் சிகிச்சை மற்றும் ஓய்வுக்காக தன்னுடைய சொந்த நாட்டிற்கு அவர் திரும்பியுள்ளார்.

இந்நிலையில். பிராவோவின் இடத்தை நிரப்ப இந்திய அணியின் முன்னாள் இடது கை பந்து வீச்சா ளர் இர்பான் பதானை தேர்ந்தெடு த்து குஜராத் அணி நிர்வாகம் முடி வெடுத்துள்ளது. கடந்த பெப்ரவரி மாதம் நடைபெற்ற வீரர்களின் ஏலத்தின் போது இரு முறை இடம் பெற்றும் இர்பான் பதானை எடுக்க எந்த அணியும் முன் வரவில்லை.

102 ஐ.பி.எல் போட்டிகளில் விளையாடியுள்ள இர்பான் பதான் 80 விக்கெட்டுகள் மற்றும் 1137 ஓட்டங்களை எடுத்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

## காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள்

# 65 நாளாக தவிப்பு



(பரந்தன்)

கிளிநொச்சி கந்தசுவாமி கோவில் முன்றலில் ஆரம்பிக்கப்பட்ட வலி ந்து காணாமல் ஆக்கப்பட்டவர்க ளின் கவனயீர்ப்பு போராட்டம் நேற்று செவ்வாய்க்கிழமை 65ஆவது நாளா கவும் தீர்வின்றி தொடர்கிறது.

கிளிநொச்சி மாவட்டத்தில் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர் களின் விடுதலையையும் வெளிப் படுத்தலையும் வலியுறுத்தி காணா மல் ஆக்கப்பட்டவர்களின் உறவி னர்களால்

கடந்த பெப்ரவரி மாதம் 20ஆம் திகதி அன்று காலை கிளிநொச்சி கந்தசுவாமி ஆலயம் முன்றலில் ஆரம்பிக்கப்பட்ட தொடர் கவனயீர் ப்பு போராட்டமே இரவு பகலாக தொட ர்ந்து முன்னெடுக்கப்பட்டு வருகின் றமை குறிப்பிடத்தக்கது. (செ-312)

# பேருந்து மீது ...

சொந்தமான பேருந்து ஒன்று, புத்தளம் - சிலாபம் வீதியில் உள்ள பங்கதெனியா என்ற இடத்தில் வைத்து கல்வீச்சுத் தாக்குதலுக்கு உள்ளாகியதில் முன் கண்ணாடி கள். பக்கவாட்டுக் கண்ணாடிகள் உடைந்து சேதமடைந்துள்ளது டன். பேருந்து சாரதியும் காய மடைந்த நிலையில் சிலாபம் வைத் தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக் கப்பட்டுள்ளதாக சிலா பம் பொலிஸ் நிலையத் தகவலில் தெரிவிக்கப் பட்டுள்ளது.

இச்சம்பவம் நேற்று செவ்வா ய்க் கிழமை அதி காலை 01 மணி யளவில் இடம் பெற்றுள்ளது.

இந்த கல்வீச் சுத் தாக்குதலை 03 பேர் மேற் கொண்டு விட் டுத் தப்பிச் சென்று ள்ளதாக. இ.போ.ச பேருந்தின் சாரதி சிலாபம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாட்டினை பதிவு செய்துள்ளார்.

இந்நிலையில் கல்வீச்சு சம்பவத் துடன் தொடர்புடையவர்கள் என்ற சந்தேகத்தின் அடிப்படையில் 03 பேரைக் கைது செய்து விசாரணை களை முன்னெடுத்து வருகின்ற னர். (செ-15).

## ஈ.பி.ஆர்.எல்.எவ் ...

தெரிவித்துள்ளார்.

வடக்கு கிழக்கில் உள்ள மக்கள் தொடர்ச்சியாக போராட் டங்களை முன்னெடுத்து வரு கின்றார்கள்.

காணி மீட்பு தொடர்பாக போராட்டங்களையும் காணா மல்போன உறவுகளை மீட்பதற் கான போராட்டங்களையும் அர சாங்கம் மக்களது காணிகளை அபகரிப்பதற்கு எதிரான போராட் டங்களையும் தமிழர் தாயக பிரதேசத்தில் பௌத்த விகாரை கள் அமைப்பதற்கு எதிரான போராட்டங்களையும் இன மத மொழியினை கடந்து வேலை யில்லா பட்டதாரிகளும் தமக் கான வேலைவாய்ப்புக்களை கோரி தொடர்ச்சியான போராட் டங்களை முன்னெடுத்து வரு கின்றார்கள்.

இவ்வாறான நிலையில் அர சாங்கம் இம்மக்களது எந்த வொரு போராட்டங்களையும் கண்டுகொள்ளாமல் போராட்டங் கள் நடைபெற்றால் அவை நடை பெற்றுவிட்டு போகட்டும் என்ற மனோநிலையில் அக்கறை கொள் ளாது அரசாங்கம் செயற்பட்டு வருகின்றது.


இவ்வாறான நிலையில் வடக்கு கிழக்கு முழுவதும் மக் கள் தமது பல்வேறு கோரிக்கை களை முன்வைத்து மேற்கொண்டு வரும் இப்போராட்டங்களுக்கு தமிழ் பேசும் மக்களாகிய நாம் பூரணமான ஆதரவினை வழ ங்க வேண்டும்.

அந்தவகையில் நாளை வியா ழக்கிழமை அதாவது நாளை வடக்கு கிழக்கு முழுவதும் பூரண மான கடையடைப்புடன் போக்கு வரத்துக்கள் பாடசாலை கள் அனைத்தும் துண்டித்து பூரண மான ஆதரவினை இம் மக்கள் போராட்டங்களுக்கு வழங்க வேண்டும்.

அத்துடன் இப் போராட்டத் திற்கு ஈ.பி.ஆர்.எல்.எவ் கட்சி தனது முழுமையான ஆதரவினை வழங்குகின்றது எனவும் இதன் போது அவர் தெரிவித்தார்.(செ-4)

## மரண அறிவித்தல்

# அருட்தந்தை எஸ்.இ.என்.குணசீலன்



தாயின் மடியில் 04.06.1931 - இறைவன் அடியில் 24.04.2017

யாழ். மறைமாவட்ட மூத்த குருவாகிய அருட்திரு எஸ்.இ.என். குணசிலன் அடிகளார் 24.04.2017 திங்கட்கிழமை காலை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் உசன் மிருசுவிலைச் சேர் ந்த அமரர் சிங்கராயர் தம்பித்துரை - அமரர் மேரி ஏஞ்சல் ஆகியோரின் மூத்த மகனும் அமரர் அருட்சகோதரர் S.E.B.ஜெயசீலன் (யாழ். மறைமா வட்டம்) Dr.S.E.R.இராஜசீலன் ஆகியோரின் அன்பு சகோதரனும் திருமதி இரஞ்சிதா இராஜசீலன் அவர்களின் மைத்துனரும் அருட்பணி R.C.M. அஞ்சலோ (பங்குத்தந்தை AUSTRIA) Rt.Rev.Dr.R.T.M அன்ரோனியோ (Auxiliary Bishop, OLD CATHOLIC CHURCH, LONDON) திரு.R.P.M. நிக்கலோ (பிறின்ஸ்) முகாமைத்துவ பணிப்பாளர் YELLOW WIN MEDIA (PVT)LTD மற்றும் MIX SOLUTIONS INTERNATIONAL (PVT) LTD ஆகியோரின் பெரிய தந்தையுமாவார்.

அன்னாரின் இறுதிச்சடங்குகள் 27.04.2017 வியாழக்கிழமை மாலை 3.30 மணிக்கு யாழ் புனித மரியன்னை பேராலயத்தில் இறுதிக்கூட்டு திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு புனித கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

குருக்கள், துறவியர், உற்றார், உறவினர், நண்பர்கள், இறைமக்கள் அனைவரும் இவ்வறிவித்தலை ஏற்றுக்கொள்ளும்படி 'அன்புடன் வேண்டுகிறோம்.

தகவல் : Dr.S.E.R.இராஜசீலன் (சகோதரன்)
தொலைபேசி : 0777397886

(C - 8266)

# யாழ் மறைமாவட்ட மூத்த குருவான எஸ்.இ.என். குணசீலன் அடிகளார் இறைவனடி சேர்ந்தார்



யாழ். மறைமாவட்ட மூத்த குருவான எஸ்.இ.என். குணசீலன் அடிகளார் 24 ஏப்ரல் 2017 அன்று காலை இறைவனடி சேர்ந்தார். அவரின் இறுதிச்சடங்குகள் 27 ஏப்ரல் 2017 வியாழன் அன்று 3.30 மணிக்கு யாழ் புனித மரியன்னை பேரால யத்தில் யாழ் ஆயர் மேதகு கலாநிதி ஜஸ்ரீன் பேணாட் ஞானப்பிரகாசம் ஆண்டகை தலைமையில் நடைபெறும்.

தகவல் :
அருள்திரு
ப.யோசவ்தாஸ் ஜெபரட்ணம்
யாழ். மறைமாவட்ட
குரு முதல்வர்
ஆயர் இல்லம் - யாழ்ப்பாணம்

(C - 8267)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழில் பெண்களுக்கு தற்காப்பு பயிற்சி



(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்தில் பெண்களுக்கான தற்காப்பு பயிற்சியை தொடர்ச்சியாக மேற்கொள்வதற்கு யாழ். மாவட்ட செயலகம் நடவடிக்கை மேற்கொண்டுள்ளது.

அந்த வகையில் பெண்கள் தற்காப்பு பயிற்றுவிப்பாளர்களுக்கான பயிற்சி நெறி நேற்று முன்தினம் கன்னாதிட்டி காளி அம்மன் கோவில் மண்டபத்தில் ஆரம்பிக்கப்பட்டது.

யாழ்.மாவட்ட செயலகத்தின் ஏற்பாட்டிலும், வசந்தம் நிதியத்தின் அனுசரணையில் நடைபெறும் இப் பயிற்சி நெறி நாளை 27 ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது.

கிராம மட்டத்தில் ஆர்வமுள்ள 50 பெண்கள் இதில் பயிற்சி பெறுகின்றனர். இவர்கள் பயிற்சி பெற்ற பின்னர், தொடர்ச்சியாக கிராம மட்டங்களில் பெண்களுக்கான தற்காப்பு பயிற்சியை வழங்கவுள்ளனர். (இ-9)

# கடையடைப்பு போராட்டத்திற்கு அரசசார்பற்ற நிறுவனங்களின் இணையம் பூரண ஆதரவு

நீண்ட காலமாக பல்வேறு முயற்சிகளை எடுத்தும், 60 நாட்களுக்கு மேலாக உண்ணாவிரதம் இருந்தும் காணாமல் ஆக்கப்பட்டோரின் விடயத்தில் அரசு தொடர்ந்தும் பாராமுகமாக இருக்கின்றது.

மேலும் இவ்விடயத்தில் அரசுக்கு அழுத்தம் கொடுக்கும் வகையில் காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்கள் வடக்கு - கிழக்கில் நாளை வியாழனன்று கடையடைப்பிற்கு அழைப்பு விடுத்துள்ளனர். இவர்களின் இந்த முயற்சிக்கு யாழ். மாவட்ட அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையம் பூரண ஆதரவளிப்பதோடு சகல சிவில் அமைப்புக்களும் பங்குபற்றி கடையடைப்பு வெற்றி பெற ஒத்துழைக்கும் வண்ணம் தயவுடன் கேட்டுக் கொள்கின்றோம் என யாழ். மாவட்ட அரசசார்பற்ற நிறுவனங்களின் இணையம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ)

# கடையடைப்பு போராட்டத்திற்கு லெனினிசக் கட்சி பூரண ஆதரவு

(யாழ்ப்பாணம்)

போரின் போது காணாமல் போகச் செய்யப்பட்டோருக்கான பதில் வேண்டியும் சிறைகளில் இருந்து வரும் அரசியல் கைதிகளை விடுவிக்கக் கோரியும் படைகளால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ள தமது காணிகளை விடுவிக்க வற்புறுத்தியும் கடந்த இரண்டு, ஒன்றரை, ஒரு மாதங்களுக்கு மேலாக வடக்குக் கிழக்குப் பிரதேசங்களில் மக்கள் இரவு பகலாகத் தொடர் போராட்டங்களை முன்னெடுத்து வருகின்றனர். அப்போராட்டங்களின் நியாயத்தை ஏற்று ஆரம்பம் முதலே எமது கட்சி அவற்றை ஆதரித்தும் பங்கு பற்றியும் வந்துள்ளது.

மேற்படி போராட்டங்களுக்கு மேலும் வலுச்சேர்க்கும் வகையில் நாளை வியாழக் கிழமை நடைபெறவுள்ள கடையடைப்பு எதிர்ப்புப் போராட்டத்திற்கு எமது கட்சி பூரண ஆதரவைத் தெரிவித்துக் கொள்கின்றது.

இவ்வாறு புதிய ஜனநாயக மாக்சிச லெனினிசக் கட்சியின் பொதுச் செயலாளர் சி.கா. செந்திவேல் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

மேலும் அவ்வறிக்கையில்,

ஆரம்பம் முதலே வடக்குக் கிழக்கு மக்களால் முன்னெடுக்கப்பட்டு வந்த வெகுஜனப் போராட்டங்களை மைத்திரி- ரணில் அரசாங்கம் கண்டு கொள்ளாமலும் உதாசீனம் செய்தும் வந்துள்ளது.

அதேபோன்று சில தமிழ்த் தரப்பினரும் அலட்சியம் காட்டி வந்ததுடன் போராட்டங்களை நீர்த்துப் போகச் செய்வதற்கும் மறைமுக வழிகளில் ஈடுபட்டனர். ஆனால் மக்கள் தமது வலிமையான நிலைப்பாட்டின் ஊடாக இன்று வரை போராட்டங்களை பல்வேறு பிரதேசங் களில் முன்னெடுத்து வருகின்றனர். அத்தகைய மக்களின் போராட்டங்களிற்கு ஆத ரவும் ஒத்துழைப்பும் வழங்குவது நம் எல்லோரினதும் கடமையாகும்.

ஆனால் இப் போராட்டங்களைத் தத்தமது அரசியல் உள்நோக்க நிகழ்ச்சி நிரல்களுக்கு உள்நாட்டினதும் புலம் பெயர்ந்த நாடுகளினதும் சக்திகள் பயன்படுத்துவதை போராடி வரும் மக்கள் ஏற்றுக்கொள்ளக் கூடாது என்பதும் அவசியமாகும்.

அதேவேளை அனைத்துக் கட்சிகளும் அமைப்புகளும் தத்தமது நிலைப்பாடுகளை போராடும் மக்கள் மீது திணிக்காது பொது நிலைப்பாட்டுடன் முன் வைக்கப்பட்டு வரும் நியாயமான கோரிக்கைகளை வென்றெடுக்க ஆதரவு வழங்க வேண்டும் என எமது கட்சி கேட்டுக் கொள்கின்றது என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (இ)

## மேதினக் கூட்டங்களுக்கு போக்குவரத்து சபையிடம் 5,000 பேருந்துகள் கோரிக்கை

(கொழும்பு)

மேதினக் கூட்டங்களுக்கு மக்களை போக்குவரத்து செய்ய அனைத்து அரசியல் கட்சிகளும் இலங்கை போக்குவரத்து சபையிடம் பேருந்துகளை கோரியுள்ளதாக போக்குவரத்து மற்றும் சிவில் விமானச் சேவைகள் பிரதி அமைச்சர் அஷோக அபேசிங்க தெரிவித்துள்ளார்.

இதேவேளை, மேதினக் கூட்டங்களுக்காக சுமார் 5,000 பேருந்துகளை அரசியல் கட்சிகள் கோரியுள்ளதாக இலங்கை போக்குவரத்து சபை தலைவர் ரமல் சிறிவர்தன தெரிவித்துள்ளார்.

எனினும் 4,000 பேருந்துகளையே இந்த தேவைகளுக்காக ஒதுக்கமுடியும் என அவர் மேலும் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

# மரண அறிவித்தல்

## திருமதி சந்திரமலர் கருணானந்தன் (சந்திரா)



காங்கேசன்துறையை பிறப்பிடமாகவும் கொழும்பு, கொக்குவிலை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சந்திரமலர் கருணானந்தன் (சந்திரா) அன்னார் அவர்கள் நேற்று (25.04.2017) செவ்வாய்க் கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லத்துரை- இராசம்மா அவர்களின் மூத்த புதல்வியும் காலஞ்சென்றவர்களான கருணாநிதி-மீனாட்சி அம்மா அவர்களின் மூத்த மருமகளும் காலஞ்சென்ற கருணாநிதி கருணானந்தன் அவர்களின் பாசமிகு மனைவியும் கெங்காதரன், திருமதி. புஸ்பாஞ்சலி, பஞ்சாட்சரம் (சட்டத்தரணி) ஆகியோரின் சகோதரியும் மகாநந்தன் (ஓய்வுபெற்ற இந்து அமைச்சு செயலாளர்), பாலசுந்தரம், கருணாவதி (கோண்டாவில்), மங்கயற்கரசி, சிவஞானம் JP ஆகியோரின் மைத்துனியும் திருவாளர்கள் சுரேஷ் (கனடா), பிரதீஸ் (அபான்ஸ், யாழ்ப்பாணம்), லவன், கல்யாணி, திருக்குமரன் ஆகியோரின் பெரியதாயும் Dr. இந்திரமோகன் (யாழ். போதனா வைத்தியசாலை), அமுதினி (யாழ். மேல் நீதிமன்ற கணக்குதவியாளர்), அனுஷா ஆகியோரின் மாமியாரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் எஸ்.இன்பம் அந்தியகால சேவை, மானிப்பாய் வீதி, கோம்பையன் மணல் மயானம் அருகாமையில் உள்ள மலர்ச் சாலையில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு நாளை (27.04.2017) வியாழக் கிழமை முற்பகல் 10 மணிக்கு இறுதிக்கிரியைகள் நடைபெற்று தகனக் கிரியைகளுக்காக பூதவுடல் எடுத்துச் செல்லப்பட்டு கோம்பையன் மணல் மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும். (8835)

கொக்குவில் மேற்கு, கொக்குவில்.

தகவல்: பெறாமகன் சி.பிரதீஸ்- 077 896 9787

# இராசி பலன்

26.04.2017

(சித்திரை 13, புதன்கிழமை)

சூரிய உதயம் காலை 6.01 மணிக்கு

அமாவாசை மாலை 6.30 மணிவரை

அச்சுவினி முன்னிரவு 7.54 மணிவரை

சுபநேரம் 4.29-5.59 மணிவரை

இராகுகாலம் 11.59-1.29 மணிவரை

அமாவாசை விரதம்

வளவன்

| | | | |
|---|---|---|---|
| சுக் புத | சூரி சந் | செவ் | |
| கேது | கிரகநிலை சந்திராஷ்டமம் உத்தரம், அத்தம் | | |
| | | | ராகு |
| | சனி | | குரு |

**மீனம்** மனதில் உற்சாகமும் மகிழ்ச்சியும் அதிகரிக்கும், பணப்புழக்கம் அதிகரிக்கும் நாள், எந்தவொரு காரியத்தையும் முழுமையாகச் செய்ய முடியாமல் மனம் அலைபாயும்.

**மேடம்** குலதெய்வ வழிபாட்டில் ஆர்வம் காட்டுவீர்கள், வீட்டில் சில மாற்றங்களைச் செய்ய முடிவெடுப்பீர்கள், தொழிலில் கூட்டாளிகளின் ஒத்துழைப்பு சற்று குறையலாம்.

**இடபம்** ஆதாயமில்லாத அலைச்சல்கள் ஏற்படலாம், விலை உயர்ந்த பொருட்களை வாங்கும் எண்ணம் உருவாகும், சயன சுகக் குறைவுகள் ஏற்படலாம், வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள்.

**மிதுனம்** தொழிலை விருத்தி செய்யும் எண்ணம் உருவாகும், வெளியூர்த் தொடர்புகள் அனுகூலம் தரும் வகையில் அமையும், வருமானம் அதிகரிக்கும் நாள்.

**கும்பம்** சுதந்திரமாகச் செயற்படுவீர்கள், சமுதாயப் பணிகளில் அதிக ஆர்வம் காட்டுவீர்கள், குடும்ப உறுப்பினர்கள் உங்கள் சொற்களைக் கேட்டு நடக்க முன் வருவர்.

**கடகம்** பூர்வீகச் சொத்துக்களால் ஆதாயமுண்டு, திட்டமிட்ட காரியங்கள் அனைத்தும் நிறைவேறலாம், உறவினர்களும் நண்பர்களும் வலிய வந்து உதவுவார்கள்.

**மகரம்** வம்பு வழக்குகளைச் சமாளித்து வளம் காணும் நாள், சுபகாரியச் செலவுகள் அதிகரிக்கும் நாள், பயணங்கள் கைகூடும், ரோக பயமுண்டு.

**சிம்மம்** சிந்தித்து செயற்பட்டு சிறப்புகளைக் காணும் நாள், மறைமுகப் போட்டிகளையும் எளிதில் சமாளிப்பீர்கள், தித்திக்கும் பயணங்கள் இடம்பெறலாம்.

**தனுசு** பொன்னான எதிர்காலத்தை அமைத்துக்கொள்ள வழி பிறக்கும், தொலைபேசி வழியில் அனுகூலம் தரும் செய்திகள் வந்து சேரலாம், குடும்பத் தேவைகள் பூர்த்தியாகும்.

**விருச்சிகம்** எண்ணங்கள் எளிதில் நிறைவேறும் நாள், பொருளாதார நிலை உயர வழிவகை செய்வீர்கள், நண்பர்கள் நம்பிக்கைக்குரியவர்களாக நடந்து கொள்வர்.

**துலாம்** உறவினர் வருகையால் உற்சாகம் பெருகும் நாள், அடுத்தவர் நலனில் அதிக அக்கறை எடுத்துக் கொள்வீர்கள், புதிய அனுபவங்கள் ஏற்படும் நாள்.

**கன்னி** உடனிருப்பவர்களை அனுசரித்துச் செல்வது நல்லது, எதிர்பாராத வகையில் சில மனஸ்தாபங்கள் ஏற்பட்டு உற்சாகம் குறையலாம், பயணங்களின் போது விழிப்புணர்வு அவசியம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புதிய அரசியல் யாப்பு மூலம் இனசமத்துவம் உருவாகும்

## மக்கள் கருத்தறியும் குழு நம்பிக்கை

(யாழ்ப்பாணம்)

கடந்த கால கசப்பான அனுபவத்தில் இருந்து மக்கள் மீண்டு வந்து இன சமத்துவத்தை ஏற்படுத்தும் நோக்கிலேயே புதிய அரசியல் யாப்பு உருவாக்கப்பட எத்தனிக்கப்பட்டுள்ளது எனத் தெரிவித்த அரசியலமைப்பு சீர்திருத்தம் தொடர்பிலான மக்கள் கருத்தறியும் குழுவினர், ஆனால் அது எவ்வாறு அமையும் என்பதை பொறுத்திருந்து தான் பார்க்க வேண்டும் எனவும் தெரிவித்துள்ளனர்.

புதிய அரசியலமைப்பினை உருவாக்குதல் தொடர்பாக அரச அதிகாரிகளுக்கு அறிவூட்டும் நிகழ்ச்சி நேற்று முன்தினம் யாழ். மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது. இதில் அரசியலமைப்பு சீர்திருத்தம் தொடர்பிலான மக்கள் கருத்தறியும் குழுவின் உறுப்பினர்கள் கலந்து கொண்டு புதிய யாப்பு தொடர்பாக விளக்கமளிக்கும் போதே மேற்கண்டவாறு கருத்தினை தெரிவித்திருந்தனர். இது தொடர்பில் அவர்கள் விளக்கமளிக்கும் போது.

அரசியல் யாப்பை வரைவதற்கான முற்றுமுழுதான அதிகாரம் மக்களால் தேர்வு செய்யப்பட்ட பாராளுமன்ற உறுப்பினர்களுக்குத் தான் உண்டு. ஆனால் எவ்வாறான விடயங்கள் முன்னுரிமைப்படுத்தப்பட வேண்டும் என்ற தெளிவு எமக்கு வேண்டும். புதிய அரசியல் யாப்பானது எமது அரசியல் யாப்பு அது மக்களால் அங்கீகரிக்கப்பட வேண்டும். எனவே அதற்கு மக்களின் பங்களிப்பு வேண்டும்.

அரசியல் தலைவர் தனிப்பட்ட நடத்தை, கல்வித்தகைமையைக் கொண்டவர்களாக இருக்க வேண்டும் என்பது மக்களின் விருப்பம். பொதுமக்கள் கருத்தறியும் குழுவின் முன் பெரும்பாலான மக்கள் இவர்களுக்கு கட்டாயமாக கல்வி அறிவு இருக்க வேண்டும் என்றும் ஆகக் குறைந்தது உயர்தரப் பரீட்சையில் சித்தி பெற்றவர்களாகவாவது இருக்க வேண்டும் எனும் கோரிக்கையை விடுத்திருந்தனர். ஆனால் தேர்தலில் போட்டியிடுவது ஒருவருடைய உரிமை. கல்வித் தகைமை தொடர்பான மட்டுப்பாட்டை போடுவது அவர்களுடைய மனித உரிமை மீறலாக அமையும் என்ற கருத்துக் காணப்படுகிறது.

தனிப்பட்ட நடத்தையில் குற்றமற்றவர், குற்றச் செயல் புரிந்து நீதிமன்றத் தண்டனைக்கு உட்படாதவராக இருக்க வேண்டும் என்பது தொடர்பிலான ஏற்பாடு புதிய அரசியல் யாப்பில் காணப்படுகிறது. கல்வித்தகைமையை ஒரு தகைமைப்பாடாக கொண்டு வருவதா?, இல்லையா? என்பது தொடர்பில் இன்னும் கலந்துரையாடல் நடைபெற்றுக் கொண்டு இருக்கின்றது. ஆனால் இன்னமும் இறுதித் தீர்மானம் எடுக்கப்படவில்லை.

புதிய யாப்பு எந்த ஒரு நாட்டினுடைய மாதிரியையும் முற்றுமுழுதாக பின்பற்றி அமைக்கப்படப்போவதில்லை. சமஷ்டி முறை ஆட்சிக்கு பல நாடுகளின் மாதிரியை எடுத்துள்ளோம். ஆனால் எமது நாட்டின் மக்களின் இனப் பரம்பல் மற்றும் தன்மைக்கு அமைவாக இலங்கைக்கு எது பொருத்தமாக அமையும் என்பதை மக்களுடன் கலந்துரையாடி மக்களின் விருப்பத்துடன் புதிய அரசியல் யாப்பும் ஆட்சி முறைமையும் உருவாக்குவது தான் நோக்கம். சமத்துவம், இன அமைதி-நல்லிணக்கத்தை உருவாக்கும் நோக்கில் உருவாக்கப்பட்டு வருகிறது. காணாமற் போனோர் தொடர்பில் மக்கள் பிரச்சினைகளுடன் உள்ளார்கள். ஆனால் இவ்வாறான பிரச்சினைகளை எதிர்காலத்தில் சந்திக்காமல் இருப்பதற்கான கட்டமைப்பு மாற்றத்தை அமைக்கும் நோக்கில் புதிய யாப்பு உருவாக்கப்படுகிறது.

காணாமற் போனோர் தொடர்பான அரசியல் யாப்பில் அடிப்படை உரிமைகள் தொடர்பான உபகுழுவின் பரிந்துரைகளில் ஒன்றாகக் காணாமல் ஆக்கப்படாது இருப்பதற்கான உரிமை அடிப்படை உரிமையில் சேர்க்கப்பட்டுள்ளது.

கல்வி தொடர்பான அனைத்து விடயமும் சேர்க்கப்பட்டுள்ளது. கல்வி உரிமை என்ற ரீதியில் புதிய அரசியல் யாப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது. முதலாம் இரண்டாம் நிலைக் கல்வி கட்டாயம் என்றும் மூன்றாம் நிலைக் கல்வி அரசால் வழங்க வேண்டும். அந்த வழக்கங்களுக்கு ஏற்ப முழு வாய்ப்பும் வழங்க வேண்டும் என குறிப்பிடப்பட்டுள்ளது. கல்விக்கான அதிகார பரவலாக்கம் தொடர்பாக பேசப்பட்டுள்ளது. மாகாண சபைகளுக்கு அந்த அதிகாரம் வழங்கப்படும் பட்சத்தில் கல்வி ஒருமையை உறுதிப்படுத்துவதற்கான நடவடிக்கைகள் கொள்கை அளவில் மாகாண சபைகளால் எடுக்கக் கூடியதாக இருக்கும்.

கடந்த கால கசப்பான அனுபவத்தில் இருந்து மக்கள் மீண்டு வந்து சமத்துவத்தை ஏற்படுத்தும் நோக்கிலே புதிய அரசியல் யாப்பு உருவாக்கப்பட எத்தனிக்கப்படுகிறது. ஆனால் அது எவ்வாறு உருவாகும் என்பதை பொறுத்திருந்து பார்க்க வேண்டும்.

சகல பிரச்சினைகளுக்கும் தீர்வு காணும் முறையில் புதிய அரசியல் யாப்பில் திருத்தங்கள் சேர்க்கப்பட்டு வருகின்றன. வழிநடத்தல் குழுவின் அறிக்கை இது வரை சமர்ப்பிக்கப்படாத காரணத்தால் முக்கியமான பிரச்சினையான இனம், மதம் தொடர்பான சிக்கலான தன்மை தொடர்பான தெளிவான நிலைப்பாடு ஏற்படவில்லை.

புதிய அரசியல் யாப்பு சீர்திருத்தம், அதில் உள்வாங்கப்படும் விடயம், சிறுபான்மையினர் மீது கரிசனை கொள்ளவேண்டிய விடயம் தொடர்பான பல்வேறு அறிக்கைகள் எம் மத்தியில் உள்ளது என பொதுமக்கள் கருத்தறியும் குழு தீர்க்கமாக கலந்தாலோசித்துள்ளது. 6 உப குழுக்களின் அறிக்கைகளை முக்கியமான விடயங்கள் தொடர்பாக தீர அறிந்து அறிக்கையிட்டுள்ளது. வழிநடத்தல் குழுவும் சில முக்கியமான விடயம் தொடர்பில் அறிக்கையிடவுள்ளது.

இன்னமும் புதிய அரசியல் யாப்பு உருவாக்கப்படவில்லை. ஆனால் தெளிவூட்டும் கலந்துரையாடல் ஏன் அவசியமென்றால் புதிய அரசியல் யாப்பு உருவாக்கப்படும் போது அது நிச்சயமாக மக்கள் வாக்கெடுப்பின் மூலம் மக்களின் அங்கீகாரத்தை பெற்றதன் பின்னர்தான் உருவாக்கப்படும் என்ற நிலைப்பாடு உறுதியாக எடுக்கப்பட்டுள்ள காரணத்தால் எமது முன் அரசியல் யாப்பு வரும் போது அதற்கு ஆம் அல்லது இல்லை என தீர்மானிப்பதற்கு அந்த அரசியல் யாப்பில் எவ்வாறான விடயங்கள் உள்வாங்கப்பட்டுள்ளன. அவை எவ்வளவு தூரம் இலங்கையில் நீடிக்கும் பிரச்சினைகளைக் குறைக்கிற வகையில். இன்னொரு யுத்தம் ஏற்படாத வகையில் எவ்வளவு தூரம் இந்த ஏற்பாடுகள் உள்வாங்கப்பட்டுள்ளன என்கிற தெளிவின் அடிப்படையில் இந்தத் தீர்மானத்தை எடுக்கும் அளவில் மக்கள் மத்தியில் தெளிவு இருக்க வேண்டும் என மக்கள் கருத்தறியும் குழுவினர் மேலும் சுட்டிக் காட்டினர். (இ-9)

# வேப்பம்பூ வடக உற்பத்தியில் உற்பத்தியாளர்கள் ஆர்வம்

(யாழ்ப்பாணம்)

வேம்புபூக்கும்காலம் ஆரம்பித்துள்ள நிலையில் வேப்பம்பூ வடகம் உற்பத்தியில் உற்பத்தியாளர்கள் இம்முறை அதிக ஆர்வம் காட்டி வருகின்றனர்.

சுத்தமான ஒரு கிலோ வேப்பம்பூ 400 ரூபாவுக்கும் அதிகமாகக் கொள்வனவு செய்யப்பட்டு வருகின்றது.

வேப்பம் மரத்தில் அதிகளவான மருத்துவக்குணம் கொண்ட பயன்களை ஒவ்வொரு பகுதிகளிலும் இருந்து பெற்றுக் கொள்ள முடியும்.

வேம்பு பூக்கும் பருவ காலத்தில் மட்டுமே வேப்பம் பூவை சேகரித்து வடகம் உற்பத்தி செய்து வருகின்றனர்.

வடகத்துக்கு எந்த மட்டத்திலும் சந்தை வாய்ப்பு அதிகரித்தே காணப்படுகின்றது. குறிப்பாக வெளிநாடுகளிலும் புலம்பெயர் தமிழர்கள் வாழும் பகுதிகளிலும் வேப்பம் பூ வடகத்துக்கு சந்தையில் அதிகம் கேள்வி காணப்படுகின்றது.

வேப்பம் மரம் பரவலாக அனைத்து இடங்களிலும் காணப்படுகின்ற நிலையில் தற்போது வேப்பம் பூ சேகரிக்கும் நடவடிக்கைகளில் பலர் ஈடுபட்டு வருகின்றனர்.

இருப்பினும் பூவை சேகரிக்கும் போது சுகாதாரத் தன்மை மிக மிக முக்கியமானதொன்றாக காணப்படுகின்றது.

ஏனெனில் கொள்வனவாளர்கள் சுத்தமான வேப்பம் பூவினையே கொள்வனவு செய்யவிரும்புகிறார்கள். அதாவது சிலர் நிலத்தில் இருந்து சேகரிப்பதனால் மிருகங்களின் கழிவுகள், கண்ணாடித் துகள்கள், மண் என்பன காணப்படுவதால் இவை உணவுக்கு பயன்படுத்த முடியாத நிலை காணப்படுகின்றது.

எனவே சுத்தமான முறையில் சேகரிப்பில் ஈடுபட வேண்டியது மிக மிக அவசியம் ஆகும் என வேப்பம்பூவினை கொள்வனவு செய்து வடகம் உற்பத்தி செய்பவர்கள் தெரிவித்துள்ளனர்.

சிலர் ஆயிரம் ரூபாவிற்கும் பூவின் விற்பனை விலையை கோருகின்றனர். ஆனால் பூவின் உலர் தன்மை மற்றும் சுத்தத்தினை மதிப்பிட்ட பின்னரே விலை நிர்ணயிக்க முடிகிறது எனவும் தெரிவித்தனர்.

வேம்பு பூக்கும் காலம் இன்னும் ஒரு மாதத்துக்குள் நிறைவடையவுள்ளதால் வேப்பம் பூ வடகம் உற்பத்தி செய்பவர்களுக்கு பூவின் தேவை அதிகரித்துள்ளது. ஒரு உற்பத்தியாளருக்கு 20 ஆயிரம் கிலோவுக்கு மேலான வேப்பம் பூ தேவை ஏற்பட்டுள்ளது எனவும் தெரிவித்தனர்.

வேப்பம் பூவினை சுத்தமான முறையில் சேகரித்து விற்பனை செய்ய விரும்புகின்றவர்கள் மாதர் அபிவிருத்தி சங்கங்கள் ஆயுள்வேத மருந்தகங்கள் மற்றும் யாழ். மாவட்ட செயலகத்தில் இயங்குகின்ற கைத் தொழில் அபிவிருத்தி அதிகார சபையுடன் தொடர்பினை ஏற்படுத்தலாம். (இ-9)

# புத்தாடைகள் வழங்கல்



தமிழ்-சிங்கள புத்தாண்டை முன்னிட்டு தமிழ்த்தேசிய மாணவர் பேரவையின் ஏற்பாட்டில் நெல்லியடி பரமானந்தா முதியோர் இல்லத்தில் உள்ள முதியோருக்கு புத்தாடைகள் அன்பளிப்பாக வழங்கப்பட்டன.

தமிழ்த்தேசியமாணவர் பேரவையின் யாழ்.மாவட்ட அமைப்பாளர் தனுசன். தேசிய அமைப்பாளர் தீபன் ஆகியோர் நேரில் சென்று கையளித்தனர். (இ-9)




# மருத்துவ ஏடுகளை வாசித்தல் குறித்து பயிற்சிப்பட்டறை

இந்தியாவிலிருந்துவருகை தரும் வளவாளர்கள் மூல மாக மருத்துவ ஏடுகளை வாசிப்பது தொடர்பான 6 நாட்கள் கொண்ட பயிற்சிப் பட்டறையொன்று யாழ்ப்பாணத்தில் மே மாதம் 3 ஆம் வாரமளவில் நடைபெறவுள்ளது.

இப்பயிற்சிநெறியில் பங்கு பற்ற விரும்பும் ஆயுர் வேத மருத்துவ சபையில் பதிவு செய்யப்பட்ட ஆயுர் வேத மருத்துவர்கள் தங்களது விண்ணப்பங்களை சுதேச மருத்துவ திணைக்களம், வட மாகாணம், சுகாதாரக் கிராமம், பண்ணை என்ற முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு வட மாகாண சுதேச மருத்துவத் திணைக்கள பிரதி ஆணையாளர் டாக்டர் ப.சுரேசன் அறிவித்துள்ளார். (இ)

# விளைபொருட்களுக்கு நிறைக்கழிவு பெறப்பட்டால் உடன் முறையிடுங்கள்

## பிரதேச சபைச் செயலர் அறிவிப்பு

அச்சுவேலி பொதுச் சந்தையில் விவசாயிகளிடம் இருந்து விளை பொருட்களுக்கு நிறைக்கழிவு பெறப்பட்டால் பிரதேச சபையில் முறையிடுமாறு தெரிவித்த வலி. கிழக்கு பிரதேச சபைச் செயலாளர் ஜெ. ஜெலீபன், முறைப்பாடுகள் கிடைக்கும் பட்சத்தில் உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

அச்சுவேலி பொதுச் சந்தையில் விவசாயிகள் மற்றும் உள்ளூர் உற்பத்தியாளர்களின் உற்பத்திகளுக்கு 10 வீதம் நிறைக்கழிவு கழிக்கப் பட்டு வருவதாகவும் விவசாயிகள் பெருமளவு பாதிக்கப்பட்டு வருகிறார்கள் என பல தடவைகள் முறைப்பாடு செய்யப்பட்டிருந்தது.

அதனையடுத்து கடந்த வெள்ளிக்கிழமை எமது அலுவலர்கள், பொலிஸ் அதிகாரிகள் உட்பட்ட குழுவினர் அதிகாலை 3.30 மணி தொடக்கம் 7.30 மணி வரை கண்காணிப்பு மற்றும் சோதனை நடவடிக்கையில் ஈடுபட்டிருந்தோம்.

இதன்போது 10 வீத விலைக் கழிவினை நடை முறைப்படுத்தக்கூடாது எனவும் சந்தை வரி 4 வீதம் மட்டுமே அறவிடப்படவேண்டும் எனவும் அறிவித்திருந்தோம். ஆனால் மொத்த வியாபாரிகள் இதற்குக் கடும் எதிர்ப்பைத் தெரிவித்திருந்தனர்.

இருப்பினும் அவர்களின் கோரிக்கைகள் நிராகரிக்கப்பட்டு கழிவு கழிக்கக்கூடாது என கண்டிப்பாகத் தெரிவித்துள்ளோம்.

இந்த நடைமுறையைத் தொடர்ச்சியாக மேற்கொள்வதற்கு 3 அலுவலகர்களை நியமித்துள்ளோம். அவர்கள் கண்காணிப்பு நடவடிக்கையில் ஈடுபடுவார்கள்.

இருப்பினும் சட்டத்தை மீறி யாராவது செயற்படும் பட்சத்தில் அது தொடர்பில் எமக்கு முறைப்பாடு கிடைத்தால் உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படும் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

32

# தமிழரின் தலைவிதி எப்படியாகும்?



செனட்டர் நடேசன்



தி.மகேஸ்வரன்

## அரசியல் ஆளுமையை நிரூபித்த முன்னாள் அமைச்சர் மகேஸ்வரன்

2015 ஆம் ஆண்டில் நடந்த பொதுத்தேர்தல் குறித்த ஒரு கண்ணோட்டத்தை இத்தொடரில் தருவது எதிர்காலத்தில் செய்யக்கூடிய மீள்பார்வைக்கு உதவுவதாக இருக்கும்.

இந்த அடிப்படையில் 2015 ஆம் ஆண்டு பொதுத்தேர்தலில் போட்டியிட்ட அரசியல் கட்சிகள், அவை



சந்தித்த சவால்கள், வெற்றிகள், தோல்விகள் என்றவாறு இங்கு ஆராய்வது பொருத்துடையதாகும்.

அந்த வகையில் 2015 ஆம் ஆண்டு நடைபெற்ற பொதுத்தேர்தலில் நாட்டின் பிரதான கட்சிகள் அவற்றின் கூட்டமைப்புக்கள், தமிழர் தாயகத்தில் போட்டியிடுவதில் அதீத கரிசனை காட்டின.

இதில் ஐக்கிய தேசியக் கட்சி, ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியுடன் கூட்டுச் சேர்ந்த ஐக்கிய மக்கள் சுதந்திரக்கூட்டமைப்பு, ஜே.வி.பி. ஆகியன குறிப்பிடத்தக்கவை.

ஐக்கிய தேசியக் கட்சியைப் பொறுத்தவரை யாழ்ப்பாண மாவட்டத்தில் நீண்டகாலம் வெற்றிடமே நிலவியது. அதாவது 1952 ஆண்டில் செனட்டர் நடேசன் அவர்கள் காங்கேசன்துறை தொகுதியில் ஐக்கிய தேசியக் கட்சி சார்பில் போட்டியிட்டு வெற்றி பெற்ற பின்பு ஐக்கிய தேசியக் கட்சி மீண்டும் யாழ்ப்பாணத்தில் பாராளுமன்ற உறுப்பினர் பதவியைப் பெறுவதற்கு 48 ஆண்டுகள் எடுத்தன.

தியாகராசா மகேஸ்வரன் அவர்கள் 2000 ஆம் ஆண்டு ஐக்கிய தேசியக் கட்சி வேட்பாளராக யாழ். மாவட்டத்தில் யானைச் சின்னத்தில் போட்டியிட்டார். ஐக்கிய தேசியக் கட்சிக்கு வெற்றிக்கான சந்தர்ப்பங்கள் இல்லாத போதிலும் தியாகராசா மகேஸ்வரன் என்ற தனிமனிதனின் செல்வாக்கு காரணமாக 2000 ஆம் ஆண்டில் ஐக்கிய தேசியக் கட்சிக்கு யாழ்.மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் பதவி கிடைத்தது.

ஐக்கிய தேசியக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினராக மகேஸ்வரன் தெரிவாகிய போதிலும் அவர் தமிழ் மக்களின் பிரதிநிதியாக நின்று பாராளுமன்றத்தில் குரல் கொடுத்தார்.

எந்தச் சந்தர்ப்பத்திலும் அவர் தன்னை ஐக்கிய தேசியக் கட்சி உறுப்பினராக நினைத்ததேயில்லை. மாறாக தமிழ்மக்களுக்கு ஏற்பட்ட அநீதியை, தமிழ்மக்களுக்குச் செய்யப்படுகின்ற கெடுதியை சுட்டிக்காட்டி பாராளுமன்றத்தில் சிங்கள மொழியில் ஆரோக்கியமாக உரையாற்றினார். அவரின் பாராளுமன்ற உரைகள் பின்னாளில் நூல் வடிவம் பெற்றன.

2000 ஆம் ஆண்டில் பொதுத் தேர்தல் நடந்ததாயினும் அந்தத் தேர்தல் மூலம் பாராளுமன்றத்திற்குச் சென்றவர்கள் ஐந்து ஆண்டுகளுக்கு நிலைக்க முடியவில்லை.

பாராளுமன்றம் சடுதியாக கலைக்கப்பட்டதன் காரணமாக 2001 ஆம் ஆண்டும் பொதுத் தேர்தல் நடைபெற்றது. இத் தேர்தலிலும் தியாகராசா மகேஸ்வ ரன் ஐக்கிய தேசியக் கட்சியின் யாழ். மாவட்ட முதன்மை வேட்பாளராகப் போட்டியிட்டு வெற்றி பெற்றார்.

இச் சந்தர்ப்பத்தில் ஐக்கிய தேசியக் கட்சி ஆட்சி அமைத்துக் கொண்டது. இதன் காரணமாக பாராளுமன்ற உறுப்பினர் மகேஸ்வரன் இந்து கலாசார அமைச்சர் பதவியைப் பெற்றுக் கொண்டார்.

2001 ஆம் ஆண்டு நடைபெற்ற பொதுத் தேர்தல் மீண்டும் 2006 ஆம் ஆண்டில் நடைபெற வேண்டியதாக இருந்தாலும் அப்போதைய ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க அவர்கள் 2004 ஆம் ஆண்டில் பொதுத் தேர்தலை நடத்தும் பொருட்டு பாராளுமன்றத்தைக் கலைப்புச் செய்தார்.

2004 ஆம் ஆண்டு நடைபெற்ற பொதுத் தேர்தலின் போது தியாகராசா மகேஸ்வரன் அவர்கள் சிலபல காரணங்களால் யாழ்ப்பாண மாவட்டத்தில் போட்டியிடுவதைத் தவிர்த்து, கொழும்பு மாவட்டத்தில் ஐக்கிய தேசியக் கட்சியின் யானைச் சின்னத்தில் போட்டியிட்டார்.

கொழும்பு மாவட்டத்தில் தேர்தல் பிரசாரத்தில் ஈடுபட்டிருந்த வேளை கொழும்பு விவேகானந்தா மேட்டில் வைத்து மகேஸ்வரன் மீது துப்பாக்கிப் பிரயோகம் மேற் கொள்ளப்பட்டது.

எனினும் அவர் காயத்துடன் தெய்வாதீனமாக உயிர் தப்பித்துக் கொண்டார்.

கடுமையான போட்டிகளுக்கு மத்தியில் கொழும்பிலும் மகேஸ்வரன் பாராளுமன்ற உறுப்பினராக தெரிவு செய்யப்பட்டார். அப்போது ஐக்கிய தேசியக் கட்சி எதிர்க்கட்சி ஆசனத்தில் இருந்தது.

ஐக்கிய தேசியக் கட்சியின் கொழும்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினராக மகேஸ்வரன் இருந்த போதிலும் தமிழ் மக்களின் பிரச்சினைகளை பாராளுமன்றத்தில் துலாம்பரப்படுத்தினார். இது பலருக்கு அசௌகரியத்தைக் கொடுத்தது.

எதையும் நேருக்குநேர் கதைக்கின்ற இயல்புடைய முன்னாள் அமைச்சர் அமரர் தியாகராசா மகேஸ்வரன் மீது பேரினவாத அரசியல் வாதிகள் கடும் கோபம் கொண்டிருந்தாலும் அவை எல்லாவற்றையும் மகேஸ்வரன் சமாளித்து தன் அரசியல் ஆளுமையை வெளிப்படுத்தி இருந்தார்.

எனினும் 01.01.2008 அன்று புதுவருடப்பிறப்பில் அவர் கொழும்பு பொன்னம்பலவாணேஸ்வரர் ஆலயத்தில் வழிபாட்டிற்குச் சென்ற சமயம் அங்கு வைத்து இனந்தெரியாதவர்களால் சுட்டுக் கொல்லப்பட்டார்.

அவரின் மரணம் தமிழ் மக்களிடம் மிகப்பெரும் வருத்தத்தை ஏற்படுத்தியது. இந்த நாட்டின் பிரதான கட்சியாக இருக்கக்கூடிய ஐக்கிய தேசியக் கட்சியில் இருந்து கொண்டு தமிழ்மக்களின் பிரச்சினைகளை பட்டவர்த்தனமாக வெளிப்படுத்திய தியாகராசா மகேஸ்வரன் அரசியலில் தனக்கென ஒரு தனி இடத்தைப் பதிவு செய்து கொண்டார்.

அமரர் மகேஸ்வரனோடு ஐக்கிய தேசியக் கட்சி யாழ்ப்பாணத்தில் ஸ்தம்பிதமாகிவிடும் என்ற கருத்தியல் நிலவியபோது மகேஸ்வரனின் துணைவியார் திருமதி விஜயகலா மகேஸ்வரன் தற்துணிவோடு ஐக்கிய தேசியக் கட்சியின் செயற்பாட்டை யாழ்ப்பாணத்தில் ஆரம்பித்தார்.

வளரும்

-புருசோத்தமன்-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 3 நீர்ப்பாசனக்குளங்களில் 480 ஏக்கரில் 423 குடும்பங்கள் நெல் பயிரிட அனுமதி

## வவுனிக்குள நீர்ப்பாசனத் திணைக்கள தகவலில் தெரிவிப்பு

(மல்லாவி)

வவுனிக்குளம் நீர்ப்பாசனத் திணைக்களத்தின் கீழ் இம்முறை 3 நீர்ப்பாசன குளங்களில் 2016 -2017 ஆம் ஆண்டுக்கான சிறுபோகத்தின் போது 480 ஏக்கரில் 423 குடும்பங்கள் நெல் பயிரிடுவதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளதாக வவுனிக்குள நீர்ப்பாசனத் திணைக்களத் தகவலில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் தெரிய வருவதாவது.

இம்முறை பெரிய நீர்ப்பாசன குளமான வவுனிக்குளம் உட்பட 9 நீர்ப்பாசன குளங்களில் நீர் வற்றிப்போயுள்ள நிலையில் சிறுபோகச் செய்கை நடைபெறவில்லை.

இந் நிலையில், நடப்பாண்டில் வவுனிக்குளம் நீர்ப்பாசனத் திணைக்களத்தின் கீழுள்ள கோட்டை கட்டிய குளம், பழைய முறிகண்டிக்குளம், புற்றுவெட்டுவான் மருதங்குளம் ஆகிய 3 நீர்ப்பாசனக் குளங்களுக்கான சிறுபோகக் கூட்டம் துணுக்காய் பிரதேச செயலாளர் இ.பிரதாபன் தலைமையில் அந்தப் பகுதிகளில் உள்ள பொதுநோக்கு மண்டபங்களில் நடைபெற்றுள்ளது.

இதற்கமைய கோட்டை கட்டிய குளத்தின் கீழ் ஒரு ஏக்கர் வீதம் 160 விவசாயிகளுக்கும் 5 பொதுப் பங்குகளுமாக மொத்தம் 165 ஏக்கரில் நெல் பயிரிடுவதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

பழைய முறிகண்டி குளத்தின் கீழ் ஒரு ஏக்கர் வீதம் 147 ஏக்கர் விவசாயிகளுக்கும், 18 ஏக்கரில் பொதுப் பங்குகளுமாக மொத்தம் 165 ஏக்கரில் நெல் பயிரிடுவதற்கு அனுமதிக்கப்பட்டுள்ளது.

இதுபோல், புற்றுவெட்டுவான் மருதங்குளத்தின் கீழ் 1/2 ஏக்கர் வீதம் 93 விவசாயிகளுக்கு 140 ஏக்கரிலும் 10 ஏக்கரில் பொதுப் பங்குகளுமாக மொத்தம் 150 ஏக்கரில் நெல் பயிடுவதற்கு அனுமதிக்கப்பட்டுள்ளது.

இதற்கமைய, "முதலாவது நீர் விநியோகம் நாளை வியாழக்கிழமை வழங்கப்படவுள்ளது"

"நெல் விதைப்பு இறுதித் திகதி எதிர்வரும் மே மாதம் 11 ஆம் திகதி வரையாகும்"

"விதைப்பு நெல் இனங்கள் 3 மாதம் தொடக்கம் 3 1/2 மாதம் வரையான நெல் இனங்கள் பயிடப்பட வேண்டும்"

"இறுதி நீர் விநியோகம் ஓகஸ்ட் மாதம் 11 ஆம் திகதியுடன் நிறுத்தப்படும்"

"கால்நடைகள் கட்டுப்பாடு நாளை வியாழக்கிழமை தொடக்கம் எதிர்வரும் செப்டெம்பர் மாதம் 27 ஆம் திகதி வரை கட்டுப்பாட்டில் வைத்திருக்க வேண்டும்"

"இந்த நடைமுறைகளை விவசாயிகள் இறுக்கமான முறையில் கடைப்பிடிக்க வேண்டும்"

தற்போது நிலவிவரும் கடும் வறட்சி காரணமாக குளத்தின் நீர் மட்டம் மாற்றமடையும் சூழ்நிலை காணப்படுவதால் நீரைச் சிக்கனமான வகையில் வீண்விரயம் இன்றி பயன்படுத்த வேண்டும் என வவுனிக்குளம் நீர்ப்பாசனத்திணைக்களத்தின் தகவலில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (2-5- 15)




# காணாமல் போனோர் தொடர்பில் பதிவுகளை மேற்கொள்ளாதோர் 31ம் திகதிக்கு முன் மேற்கொள்க

(மல்லாவி)

வவுனியா மாவட்டத்தில் இராணுவத்திடம் ஒப்படைக்கப்பட்ட நிலையிலும் மற்றும் ஏனைய வழிகளாலும் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் தகவல்களை திரட்டி, வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களை விரைந்து தேடி கண்டு பிடிக்கும் முகமாக இலங்கை அரசாங்கம் உட்பட பல்வேறு மனித உரிமைகள் அமைப்புக்களுக்கு கையளிக்கப்பட்டு வருவதால் இதுவரை பதிவுகளை மேற்கொள்ளாத உறவுகள் எதிர்வரும் 30 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமைக்கு முன்பாக பதிவுகளை மேற்கொள்ளுமாறு வவுனியா மாவட்ட வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்களின் சங்கத்தின் தலைவி திருமதி. காசிப்பிள்ளை ஜெயவதனா அறிவித்துள்ளார்.

இது தொடர்பில் மேலும் அவர் தெரிவிக்கையில்,

வவுனியா மாவட்டத்தில் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் ஒன்றிணைந்து தமக்கு வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்கள் தொடர்பில் தீர்வு கிடைக்கும் வரை சுழற்சி முறையிலான உணவுத் தவிர்ப்புப் போராட்டத்தை ஆரம்பித்து நேற்று செவ்வாய்க்கிழமை 61 ஆவது நாளாகவும் தொடர்ந்து முன்னெடுத்து வருகின்றனர்.

இந் நிலையில் வவுனியா நகரப் பகுதியில் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்களின் போராட்டம் நடைபெறும் இடத்தில் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்கள் தொடர்பிலான பதிவுகள் நடைபெற்று வருகின்றன.

கடந்த 21 ஆம் திகதி வெள்ளிக்கிழமை இவ்வாறு விபரம் திரட்டப்பட்ட 115 பேரின் விபரங்களை அவர்களைத் தேடி கண்டுபிடிப்பதற்காக வடக்கு மாகாண சபையின் சுகாதார அமைச்சர் வைத்தியர் ப.சத்தியலிங்கம் ஊடாக இலங்கை அரசுக்கு கையளிப்பதற்காக அமைச்சரிடம் கையளித்துள்ளோம்.

இதன் இரண்டாவது விபரப் பட்டியல் அமைச்சரிடம் கையளிக்கப்படவுள்ளது. எனவே இதுவரை பதிவுகளை மேற்கொள்ளாத உறவுகள் எதிர்வரும் 30 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமைக்கு முன்னதாக பதிவுகளை மேற்கொள்ளுமாறு அவர் அறிவித்துள்ளார். (2-5-15)

# கடையடைப்புப் போராட்டம் அனைவரும் ஆதரவளியுங்கள்

## கிளிநொச்சி மாவட்ட பிரஜைகள் குழு அழைப்பு

(கிளிநொச்சி -1)

கிளிநொச்சி மாவட்டத்தில் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் குடும்ப உறவுகள் 64 நாட்களாக கந்தசுவாமி ஆலய முன்றலில் தம்மை வருத்தி கவனயீர்ப்பு போராட்டத்தை முன்னெடுத்து வருகின்றார்கள்.

இவர்களின் கவனயீர்ப்பு போராட்டத்திற்கு நாளைய தினம் அனைவரும் தமது உணர்வுபூர்வமான ஆதரவினை வழங்க வேண்டுமெனவும் கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள அனைத்து வர்த்தக நிலையங்களையும் நாள் முழுவதும் மூடுவதுடன் அரச, தனியார் நிறுவனங்களின் உத்தியோகத்தர்கள் ஒரு நாள் பணியைப் புறக்கணிப்பதுடன் பாடசாலை மாணவர்களும் போராட்டத்திற்கு ஆதரவு வழங்குமாறும் கிளி நொச்சி மாவட்ட பிரஜைகள் குழு அழைப்பு விடுத்துள் ளது.

இது தொடர்பில் அவர்கள் விடுத்துள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ள விடயம் வருமாறு,

யுத்தம்முடிவுக்கு கொண்டுவரப்பட்டு எட்டு வருடங்கள் கடந்தநிலையிலும்தமதுஉறவுகளை கண்டறிவதற்காக அரசாங்கத்திற்கு பல்வேறுபட்ட வழிமுறைகள் ஊடாக போராடிய உறவுகள் இன்று ஏதிலிகளாக தமது அன்றாட வாழ்வாதார, பொருளாதார நெருக்கடிக்குள் தள்ளப்பட்டுள்ளார்கள்.

பொருளாதார சுமை ஒருபுறமும் தமது காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் பிரிவுத் துயர் மறுபுறமாக இவர்களைத் தினமும் வாட்டி வதைக்கிறது. இவர்களின் துன்பத்தை போக்குவதற்கு அரசாங்கம் முன்வர வேண்டும்.

இவர்களுக்கு ஆதரவு வழங்கும் முகமாக கிளி நொச்சி மாவட்டத்திலுள்ள அனைத்து வர்த்தக நிலையங்களையும் முழுநாளும் மூடுவதுடன் அரச,தனியார் நிறுவனங்களின் உத்தியோகத்த ர்கள் ஆதரவை வழங்குவதுடன் பாடசாலை மாணவர்களும் இப் போராட்டத்திற்கு ஆதரவு வழங்குமாறு கிளிநொச்சி மாவட்ட பொது அமைப்புக்களின் சார்பில் கிளிநொச்சி மாவட்ட பிரஜைகள் குழுஅழைப்புவிடுத்துள்ளது (5-2-281-277)

# கிராமங்களின் பொது அமைப்புக்களின் பிரதிநிதி ஒருவரைக் கூட்டத்திற்கு அழைக்கவேண்டும்

## வவுனியா வடக்கு பிரதேச அபிவிருத்திக் குழுக் கூட்டத்தில் தீர்மானம்



வவுனியா வடக்கு பிரதேச அபிவிருத்திக் குழுக் கூட்டம் நேற்று முற்பகல் 10.30 மணியளவில் வவுனியா வடக்கு பிரதேச செயலகத்தில் ஆரம்பமாகி நடைபெற்றது.

இக் கூட்டத்தில் பிரதேச ஒருங்கிணைப்புக் குழு இணைத் தலைவர் காதர் மஸ்தான் , வடக்கு மாகாண முதலமைச்சருக்கு பதிலாக வடக்கு மாகாண சுகாதார அமைச்சர் ப.சத்தியலிங்கம், வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன், வவுனியா வடக்கு பிரதேச செயலாளர் க.பரந்தாமன், வடக்கு மாகாண சபை உறுப்பினர்களான எஸ்.தியாகராஜா, ஜீ.ரி.லிங்கநாதன், செ.மயூரன் மற்றும் அரச திணைக்கள அதிகாரிகள், பொது அமைப்புகளின் அதிகாரிகள் கலந்து கொண்டிருந்தனர்.

அபிவிருத்தி குழு கூட்டத்திற்கு பொது அமைப்புக்கள் குறிப்பாக கிராமங்களின் பொது அமைப்புக்களின் பிரதிநிதி ஒருவரையாவது அழைக்கப்பட வேண்டும் என பிரதேச ஒருங்கிணைப்புக்குழுஇணைத் தலைவர் காதர் மஸ்தானினால் தீர்மானமொன்று எடுக்கப்பட்டது. (2-5-250)

# நீர் விநியோகிக்கப்படும் வாய்க்கால்களை புனரமைக்குமாறு விவசாயிகள் கோரிக்கை

முல்லைத்தீவு வவுனிக்குளத்தின் நீர்ப்பாசன வீதிகள், நீர் விநியோக வாய்க்கால்கள் புனரமைத்து தருமாறு இக் குளத்தின் கீழான விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

முல்லைத்தீவு மாவட்டத்தின் வவுனிக்குளம் கடந்த 2009 ஆம் ஆண்டின் மக்கள் மீள்குடியமர்வையடுத்து குறித்த குளம் பாதிக்கப்பட்ட பகுதிகளை அபிவிருத்தி செய்யும் திட்டத்தின் கீழ் சுமார் 600 மில்லியன் ரூபா செலவில் குளம் புனரமைக்கப்பட்டதுடன் பிரதான நீர் விநியோக வாய்க்கால்கள் என்பனவும் புனரமைக்கப்பட்டுள்ளன.

இவ்வாறு குளம் புனரமைக்கப்பட்டமையால் இக் குளத்தின் கீழான 6000 ஏக்கர் நிலங்களில் பயிர்ச் செய்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

இந்நிலையில் வவுனிக் குளத்தின் கீழான இடது கரை, வலது கரை மற்றும் மத்திய துருசு வாய்க்கால்களின் கீழ் உள்ள வாய்க்கால்கள், நீர்ப்பாசன வீதிகள் இவற்றைவிட கிளை வாய்க்கால்கள் என்பனவும் இதுவரை புனரமைக்கப்படாமல் காணப்படுகின்றன.

இவற்றை புனரமைத்து தருமாறு இப்பகுதி விவசாய அமைப்புக்கள் மற்றும் விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர். (2-5-15)

# முல்லைத்தீவு மாவட்ட செயலகம் முன்பாக நாளை கவனயீர்ப்பு

முல்லைத்தீவு இராணுவத்தினரால் கையகப்படுத்தப்பட்டுள்ள காணிகளை விரைவில் விடுவிக்குமாறும் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோர் மற்றும்இராணுவத்திடம் ஒப்படைக்கப்பட்டு காணாமல் ஆக்கப்பட்டோருக்கான தீர்வை உடனடியாக தெரிவிக்க வேண்டுமெனக் கோரியும் நாளை வியாழக்கிழமை நடத்த அழைப்பு விடுக்கப்பட்டுள்ள முல்லைத் தீவு மாவட்ட மாபெரும் போராட்டத்திற்கு வர்த்தகர்களை கடை அடைத்து பூரண ஆதரவைவழங்குமாறும்அனைத்து மக்களையும் நாளை முற்பகல் 10 மணிக்கு முல்லைத் தீவுமாவட்ட செயலகம்முன்பாக ஒன்றுகூடி கவனயீர்ப்பு போராட்டத்திற்கு ஆதரவு வழங்குமாறு பாதிக்கப்பட்ட மக்கள்கோரிக்கை விடுத்துள்ளனர். இது தொடர்பில் அவர்கள் கூறுகையில்,

முல்லைத்தீவு மாவட்ட செயலகத்திற்கு முன்பாக கூடாரம்அமைத்துள்ள காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் முன்னெடுத்துவரும் போராட்டம் நேற்றுடன் 49 ஆவது நாளாக முன்னெடுக்கப்பட்டுள்ளது.

இதேவேளை கேப்பாப்பிலவு மக்களின் நில மீட்பு போராட்டம் நேற்றுடன் 56 ஆவது நாளாகவும் இடம்பெற்று வருகின்றது.

இந்நிலையில் நாளை வியாழக்கிழமை முல்லைத் தீவிலும் மாபெரும் போராட்டமொன்றை நிகழ்த்தவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

முல்லைத்தீவில் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் போராட்டம் நடைபெறும் இடத்தில் நேற்று முற்பகல் 10 மணியளவில் கூடிய அரசியல் தலைவர்கள், பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள் உள்ளிட்டோருடன் கலந்துரையாடிய போராட்டத்திலீடுபடும் மக்கள் நாளை எமக்கான தீர்வுக்கான போராட்டத்துக்கு ஆதரவு வழங்குமாறு கோரினர். இதற்கமைவாக அனைவரது ஆதரவுடனும் போராட்டத்தை நடத்துவதாக தீர்மானிக்கப்பட்டு உத்தி யோகபூர்வமாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் தமது இந்த போராட்டத்துக்கு முல்லைத் தீவுமாவட்டத்திலுள்ள அனைத்து வர்த்தகர்களையும் கடைகளை அடைத்து பூரண ஆதரவை வழங்குமாறும் அனைத்து மக்களையும் நாளை முற்பகல் 10 மணிக்கு முல்லைத்தீவு மாவட்ட செயலகம் முன்பாக ஒன்றுகூடி கவனயீர்ப்பு போராட்டத்துக்கு ஆதரவு வழங்குமாறும் அவர்கள் கோரியுள்ளனர்.

இதேவேளை போராட்டத்தின் இறுதியில் ஜனாதிபதிக்கான மகஜர் ஒன்றையும் முல்லைத்தீவு மாவட்ட செயலாளரிடம் கையளிக்கவுள்ளதாகவும் அவர்கள் அறிவித்துள்ளனர். (2-5-281)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இராசபுரம் கிராமத்தை லைக்கா ஞானம் கிராமம் என பெயர் மாற்ற முடியாது

## நாட்டப்பட்ட பெயர்ப்பலகையும் அகற்றப்படும்

(குருமன்காடு)

வவுனியா வடக்கில் சின்ன டம்பன், இராசபுரம் கிராமத்தில் பூந்தோட்டம் நலன்புரி நிலையத்தில் தங்கியிருந்த மக்களை குடியமர்த்துவதற்காக உருவாக்கப்பட்ட வீட்டுத் திட்ட பகுதி கிராமத்தின் பெயரை லைக்கா ஞானம் கிராமம் என பெயர் மாற்றம் செய்ய முடியாது என ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டுள்ளது.


வவுனியா வடக்கு பிரதேச செயலகத்தின் ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் நேற்று பிரதேச செயலகத்தில் இடம் பெற்றது. இதன்போது அங்கு வருகை தந்திருந்த அப்பகுதி உத்தியோகத்தர் ஒருவர் இராசபுரம் என்னும் தமிழ் மக்களின் பூர்வீக கிராமத்தின் பெயர் லைக்கா ஞானம் கிராமம் எனப் பெயர் மாற்றம் செய்யப்பட்டுள்ளது. மக்களை மீள் குடியேற்றுவதற்காக வீட்டுத் திட்டம் வழங்குவது நல்ல விடயமாக இருக்கின்ற போதும் ஒரு பாரம்பரிய பழைமையான கிராமத்தின் பெயரான இராசபுரம் என்பதை மறைத்து லைக்கா ஞானம் கிராமம் என மாற்றுவது எமது வரலாற்றை மாற்றுவதாக அமைந்து விடும் என ஒருங்கிணைப்புக் குழுவின் கவனத்திற்கு கொண்டு வந்தார்.

இதன்போது பதிலளித்த வன்னிப் பாராளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன், புராதன கிராமங்களின் பெயர்கள் அந்தக் கிராமங்களின் அடையாளங்களாகவும், ஏதோவொரு வகையில் அந்த கிராமத்தவர்களுடன் தொடர்புபட்டதாகவும் அமைந்துள்ளது. அந்த அடையாளங்களை நாம் மாற்ற முடியாது. அது தொடர்பில் உடனடியாக பிரதேச சபை கவனம் செலுத்த வேண்டும் எனத் தெரிவித்தார். இதனை வடக்கு மாகாண சபை உறுப்பினர் களான ம.தியாகராசா, ஜி.ரி. லிங்கநாதன் ஆகியோரும் வலியுறுத்தினார். இணைத் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான கே.கே. மஸ்தான் ஆதரவு வழங்கினார்.

இதனையடுத்து பதிலளித்த வவுனியா வடக்கு பிரதேச சபைச் செயலாளர் க.சத்தியசீலன், கிராமத்தின் பெயரை மாற்றி வீதிப் பலகைகள் நாட்டப்பட்டுள்ளன. இது தொடர்பில் எம்மிடம் எந்தவித அனுமதியும் பெறப்படவில்லை. இந்நிலையில் கூட்டத்தில் நீங்கள் ஏதாவது முடிவு எடுத்தால் அதனை நடைமுறைப்படுத்துவதாக தெரிவித்தார்.

இதனையடுத்து அந்த கிராமத்தின் பெயரை மாற்ற முடியாது எனவும் அது இராசபுரம் கிராமம் என்றே தொடர்ந்தும் இருக்கும் எனவும் தீர்மானிக்கப்பட்டது. உடனடியாக புதிதாக பெயர் மாற்றி அமைக்கப்பட்ட வீதிப் பலகைகளை அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்குமாறும் ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் ஏகமனதாக முடிவெடுக்கப்பட்டது. (2-5-250)

## தமிழ்-சிங்கள புதுவருட நிகழ்வு



(குருமன்காடு)

வன்னி பிராந்திய பிரதிப் பொலிஸ்மா அதிபர் காரியாலயத் தமிழ்-சிங்கள புதுவருட நிகழ்வு நேற்று காலை 6.30 மணியளவில் பிரதிப் பொலிஸ்மா அதிபர் காரியாலயத்திற்கு முன்பாக நடைபெற்றது.

இந்நிகழ்வில் 15 கிலோ மீற்றர் சைக்கிளோட்டப் போட்டியை வன்னி பிராந்திய பிரதிப் பொலிஸ்மா அதிபர் தேசபந்து தென்னக்கோன் ஆரம்பித்து வைத்தார்.

மரதன் ஓட்டப்போட்டியை சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் சிசிரகுமார ஆரம்பித்து வைத்தார். இந்நிகழ்வில் பெண்களுக்கான மரதன் ஓட்டப் போட்டி, முட்டி உடைத்தல், யானைக்கு கண் வைத்தல், பாரம்பரிய விளையாட்டுப் போட்டிகள் என பல நிகழ்வுகள் இடம்பெற்றதோடு வெற்றி பெற்றவர்களுக்கு பரிசில்களும் வழங்கி வைக்கப்பட்டதுடன் இரவு பொலிஸாரின் இசை நிகழ்வும் இடம் பெற்றது.

இந்நிகழ்விற்கு பொலிஸார், பெண் பொலிஸார், வன்னி பிராந்திய பிரதிப் பொலிஸ்மா அதிபரின் காரியாலயத்திற்குட்பட்ட பொலிஸ் நிலையப் பொறுப் பதிகாரிகள் என பலரும் கலந்து கொண்டனர். (5-2-250)




## மஹோற்சவம்

(வவுனியா)

வவுனியா வெளிவட்ட வீதி அருள்மிகு ஸ்ரீ சிந்தாமணிவிநாயகர்ஆலயமஹோற்சவம் எதிர்வரும் மே மாதம் முதலாம் திகதி முற்பகல் 10.30மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து 7ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு வேட்டைத்திருவிழாவும் மறுநாள் திங்கட்கிழமை இரவு 7 மணிக்கு சப்பறத்திருவிழாவும் 9ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 8.30மணிக்கு தேர்த் திருவிழாவும் மறுநாள் புதன்கிழமை காலை 9 மணிக்கு தீர்த்தத் திருவிழாவும் நடைபெறும். (5)

## வாகனத்தில் கடத்திச் செல்லப்பட்ட தீராந்திகள், பலகைகள் கைப்பற்று



கிளிநொச்சி -முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களுக்கான பிரதிப் பொலிஸ்மா அதிபர் மகேஷ் வெலிகன்னவின் நேரடிக் கண்காணிப்பின் கீழ் இயங்கி வரும் விசேட முறியடிப்புப் பொலிஸ் படைப் பிரிவின் பொறுப்பதி காரி உப பொலிஸ் பரிசோதகர் கருணாரட்னம் ஜெசிந்தன் தலைமையிலான பொலிஸ் அணியினர் வட்டக்கச்சி பொதுச் சந்தைக்கு முன்பாக எல்வ் ரக வாகனம் ஒன்றில் கடத்தி வரப்பட்ட முதிரை, வேம்பு ஆகிய மரங்களின் தீராந்திகள், பலகைகள் என்பவற்றை கடத்தலுக்கு பயன்படுத்தப்பட்ட வாகனத்துடன் கைப்பற்றியுள்தாக கிளிநொச்சி -முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களுக்கான பிரதிப் பொலிஸ்மா அதிபரின் காரியாலயத் தகவலில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இச்சம்பவம் கடந்த 23 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 4 மணியளவில் நடைபெற்றுள்ளது. இது தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது,

மேற்படி காரியாலயத்திற்கு கிடைத்த இரகசியத் தகவலையடுத்து, பிரதிப் பொலிஸ்மா அதிபர் மகேஷ் வெலிகன்னவின் உத்தரவுக்கு அமைய, கிளிநொச்சி -முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களுக்கான விசேட முறியடிப்பு பொலிஸ் படைப்பிரிவின் பொறுப்பதிகாரி உப பொலிஸ் பரிசோதகர் கருணாரட்னம் ஜெசிந்தன் தலைமையிலான பொலிஸ் அணியின் விசேட சுற்றிவளைப்பின் போது, கடத்தப்பட்ட 5, இலட்சம் ரூபா பெறுமதியான மரப்பலகைகளுடன் வாகனத்தை கைவிட்டு சந்தேக நபர்கள் தப்பிச் சென்றுள்ள நிலையில், வாகனம் மரப்பலகைகளுடன் மீட்கப்பட்டுள்ளது.

இதன் போது கைப்பற்றப்பட்டுள்ள தடயப் பொருட்கள் கிளிநொச்சி பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளதாகவும், இச் சம்பவத்தில் தப்பிச் சென்ற விசுவமடு பகுதியைச் சேர்ந்த இரண்டு சந்தேக நபர்களை கைது செய்வதற்கான நடவடிக்கையை மேற்கொண்டுள்ளதாகவும் கிளிநொச்சி -முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களுக்கான பிரதிப் பொலிஸ்மா அதிபரின் அலுவலகத் தகவலில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.(2-5-15)

## சிறுவர் கழகத்திற்கு உபகரணங்கள்



முறிகண்டி புனித பவுல் சிறுவர் கழகத்திற்கு 50 ஆயிரம் ரூபா பெறுமதியான உபகரணங்கள் கையளிக்கப்பட்டன, குறித்த நிகழ்வு நேற்று முன்தினம் பிற்பகல் 6 ம்ணியளவில் தென்னி ந்திய திருச்சபை ஆலயத்தில் இடம்பெற்றது. குறித்த சிறுவர் கழகத்திற்கான விளையாட்டு, பாண்ட் வாத்திய உபகரணங்கள் தென்னிந்திய திருச்சபையின் பேராயர் கலாநிதி டானியல் எஸ். தியாகராஜாவினால் வழங்கி வைக்கப்பட்டது.

குறித்த கழகத்தில் கிளிநொச்சி,முல்லைத்தீவு மாவட்டங்களின் எல்லை கிராமங்களான பொன்னகர், செல்வபுரம், பாரதிபுரம், இந்துபுரம், அறிவியல்நகர் உள்ளிட்ட பகுதிகளை சேர்ந்த சிறார்கள் அங்கம் வகித்துள்ளனர்.

இதேவேளை தென்னிந்திய திருச்சபை முறிகண்டி புனித பவுல் ஆலய ஈஸ்டர் பூசை கடந்த 23ஆம் திகதி ஞாயிற்றுக்கழமை இடம் பெற்றது. உயிர்ப்பின் திருநாளை கொண்டாடும் வகையில் குறித்த நிகழ்வில் உயிர்ப்பின் கீதங்கள் இசைக்கப்பட்டன. குறித்த இன்னிசை வழிபாட்டில் தென்னிந்திய திருச்சபையின் பேராயர்கலாநிதி டானியல் செல்வ ரத்தினம் தியாகராஜா இறை செய்தியை வழங்கினார். இந்நிகழ்வில் கிளிநொச்சி, வன்னி குரு முதல்வர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டிருந்தனர். (2-5-15)

## நீதிமன்ற அபராதங்கள்

கிளிநொச்சி நகரை அண்மித்த பகுதியில் 14 போத்தல் கசிப்புடன் கைது செய்யப்பட்ட பெண்ணை கடும் நிபந்தனைகளுடன் கூடிய பிணையில் செல்லுமாறும் கிளிநொச்சி மாவட்ட நீதவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. கிளிநொச்சி நகரை அண்மித்த பகுதியில் 14 போத்தல் கசிப்பு உடைமையில் வைத்திருந்த குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட இளம் பெண்ணொருவரை கிளிநொச்சி பொலிஸார் நேற்று முன்தினம் கிளிநொச்சி மாவட்ட நீதவான் நீதிமன்றில் நீதிமன்ற நீதவான் ஏ.ஏ.ஆனந்தராஜா முன்னிலையில் ஆஜர்படுத்தப்பட்டதையடுத்து குறித்த இளம்பெண் தான் சுற்றவாளி என ம்ன்றுக்கு தெரிவித்ததையடுத்து 75 ஆயிரம் ரூபா பெறுமதியான இரண்டு ஆட்பிணைகளில் செல்லுமாறும் பிரதி வெள்ளிக்கிழமைகளில் நீதிமன்றத்தில் கையொப்பமிடுமாறும் நீதிமன்றம் கட்டளையிட்டுள்ளது.

➢➢➢➢➢➢➢➢➢➢➢➢➢➢➢➢➢➢

கிளிநொச்சி நகரை அண்மித்த பகுதியில் 4ஆயிரத்து 300 மில்லிகிராம் கஞ்சாவுடன் கைது செய்யப்பட்ட சந்தேக நபரை எதிர்வரும் எட்டாம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு கிளிநொச்சி மாவட்ட நீதவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. கிளிநொச்சி நகரை அண்மித்த பகுதியில் 4 ஆயிரத்து 300 மில்லிகிராம் கஞ்சாவை உடைமையில் வைத்திருந்த குற்றச்சாட்டில் கிளிநொச்சிப் பொலிஸாரால் கைது செய்த ஒருவரை நேற்று முன்தினம் கிளிநொச்சி மாவட்ட நீதவான் நீதிமன்றில் நீதிமன்ற நீதவான் ஏ.ஏ. ஆனந்தராஜா முன்னிலையில் ஆஜர்படுத்தப்பட்டதையடுத்து குறித்த நபர் ஏற்கனவே கஞ்சாவுடன் கைது செய்யப்பட்டு நீதிமன்றினால் தண்டிக்கப்பட்டதை கவனத்தில் கொண்ட மன்று குறித்த சந்தேக நபரை எதிர்வரும் மே மாதம் 8ஆம் திகதி வரையும் விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டுள்ளது.

➢➢➢➢➢➢➢➢➢➢➢➢➢➢➢➢➢➢

கிளிநொச்சியில் அனுமதிப்பத்திரமின்றி உழவு இயந்திரத்தில் மணல் ஏற்றிச்சென்ற நான்கு பேருக்கு தலா 30 ஆயிரம் ரூபா தண்டப்பணம் விதிக்கப்பட்டதுடன் மணல்பறிமுதல் செய்யப்பட்டுள்ளது. கிளிநொச்சி பொலிஸ் பிரிவிற்கு உட்பட்ட திருவையாறு,பன்னங்கண்டி ஆகிய பகுதிகளில் அனுமதிப் பத்திரமின்றி உழவு இயந்திரங்களில் மணல் ஏற்றிச்சென்ற நான்குபேரையும் கைது செய்து உழவு இயந்திரங்களையும் கைப்பற்றி வழக்குகளை பதிவு செய்த கிளிநொச்சிப் பொலிஸார் குறித்த நான்கு பேரையும் நேற்று முன்தினம் கிளிநொச்சி மாவட்ட நீதவான் நீதிமன்றில் நீதிமன்ற நீதவான் ஏ.ஏ. ஆனந்தராஜா முன்னிலையில் ஆஜர்படுத்தப்பட்டதையடுத்து நான்கு பேருக்கும் தலா 30ஆயிரம் ரூபா தண்டப்பணம் விதிக்கப்பட்டதுடன் மணல் பறிமுதல் செய்யப்பட்டு எச்சரிக்கை செய்யப்பட்டு விடுவிக்கப்பட்டுள்ளனர்.

➢➢➢➢➢➢➢➢➢➢➢➢➢➢➢➢➢➢

கிளிநொச்சிப்பகுதியில் அனுமதிப்பத்திரமின்றி அரச சீல் சாராயத்தை விற்பனை செய்தமை மற்றும் உடைமையில் வைத்திருந்த குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டவருக்கு 15ஆயிரம் ரூபா தண்டப்பணம் விதிக்கப்பட்டுள்ளது. கிளிநொச்சி நகரை அண்மித்த பகுதியில் அனுமதிப்பத்திரமின்றி அரச சீல் சாராயத்தினை விற்பனை செய்தமை மற்றும் 175 மில்லி லீற்றர் அளவு கொண்ட 48 போத்தல்களை உடைமையில் வைத்திருந்த குற்றச்சாட்டில் கிளிநொச்சிப் பொலிஸாரால் கைது செய்யப்பட்ட ஒருவரை நேற்று முன்தினம் கிளிநொச்சி மாவட்ட நீதவான் நீதிமன்றில் நீதிமன்ற நீதவான் ஏ.ஏ.ஆனந்தராஜா முன்னிலையில் ஆஜர்படுத்தப்பட்டதையடுத்து 15ஆயிரம் ரூபா தண்டப்பணம் விதிக்கப்பட்டுள்ளது.

➢➢➢➢➢➢➢➢➢➢➢➢➢➢➢➢➢➢

கிளிநொச்சிப் பகுதியில் கஞ்சாவுடன் கைது செய்யப்பட்ட ஒருவருக்கு தலா ஐயாயிரம் ரூபா தண்டப்பணம் விதிக்கப்பட்டுள்ளது. கிளிநொச்சி நகரை அண்மித்த பகுதியில் 280 மில்லிகிராம் கஞ்சாவை உடைமையில் வைத்திருந்த ஒருவரை கைதுசெய்த கிளிநொச்சிப் பொலிஸார் குறித்த நபரை நேற்று முன்தினம் கிளிநொச்சி மாவட்ட நீதவான் நீதிமன்றில் நீதிமன்ற நீதவான் ஏ.ஏ.ஆனந்தராஜா முன்னிலையில் ஆஜர்படுத்தப்பட்டதையடுத்து ஐயாயிரம் ரூபா தண்டப்பணம் விதிக்கப்பட்டுள்ளது. இதேபோன்று ஆயிரத்து 500 மில்லிகிராம் கஞ்சா வைத்திருந்த ஒருவரை கைது செய்த கிளிநொச்சிப் பொலிஸார் குறித்த நபரையும் நேற்று முன்தினம் ஆஜர்படுத்தியதையடுத்து ஐயாயிரம் ரூபா தண்டப்பணம் விதிக்கப்பட்டுள்ளது. இவ்வாறு கஞ்சாவுடன் கைது செய்யப்பட்ட இருவருக்கும் தலா ஐயாயிரம் ரூபா தண்டப்பணம் விதிக்கப்பட்டுள்ளது.

➢➢➢➢➢➢➢➢➢➢➢➢➢➢➢➢➢➢

கிளிநொச்சியில் மூன்று போத்தல் கசிப்புடன் கைது செய்யப்பட்டவருக்கு பத்தாயிரம் ரூபா தண்டப்பணம் விதிக்கப்பட்டுள்ளது. கிளிநொச்சி சாந்தபுரம் பகுதியில் மூன்று போத்தல் கசிப்பினை உடைமையில் வைத்திருந்த ஒருவரை கைது செய்த கிளிநொச்சிப் பொலிஸார் குறித்த சந்தேக நபரை நேற்று முன்தினம் பிற்பகல் கிளிநொச்சி மாவட்ட நீதவான் நீதிமன்றில் நீதிமன்ற நீதவான் ஏ.ஏ.ஆனந்தராஜா முன்னிலையில் ஆஜர்படுத்தப்பட்டதையடுத்து பத்தாயிரம் ரூபா தண்டப்பணம் விதிக்கப்பட்டதுடன் கடுமையாக எச்சரிக்கை செய்யப்பட்டு விடுவிக்கப்பட்டுள்ளார். (2-5-15)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சித்திரை மாத இராசி பலன்கள்

## 14.04.2017-14.05.2017



தீட்டிய திட்டங்களை திடீரென மாற்றிக் கொள்ளும் கும்ப இராசி வாசகர்களே!

சித்திரை மாதக் கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது மாதத் தொடக்கத்தில் உங்கள் இராசியில் கேதுவும் சப்தம ஸ்தானத்தில் ராகுவும் சஞ்சரிக்கிறார்கள். எனவே மிகுந்த சிரமத்திற்கிடையேதான் எந்தவொரு காரியத்தையும் செய்து முடிக்க வேண்டியதிருக்கும். எதிர்மறைச் சிந்தனைகள் மேலோங்கும். இந்தத் திடீர் மாற்றங்கள் சுழற்சியாகும் கிரகங்களால் வருவதுதான் என்பதால் ராகு-கேதுக்களுக்குரிய முறையான பரிகாரங்களைச் செய்து கொள்வது நல்லது.

கேது ஜென்மத்தில் இருக்கும் பொழுது உடலும் மனதும் சோர்வாகவே இருக்கும். எனவேதான் ராகு-கேதுக்களுக்குரிய சிறப்பு ஸ்தலங்களைத் தேர்ந்தெடுத்து யோகபலம் பெற்ற நாளில் சென்று சர்ப்ப சாந்திப் பரிகாரங்களை செய்து வரவேண்டியது அவசியமாகிறது. பரிகாரம் செய்தால் இனிய வாழ்க்கை அமையும்.

இம்மாதம் குருவின் பார்வை உங்கள் இராசிக்கு 2ஆம் இடமான தன ஸ்தானத்திலும் 4ஆம் இடமான சுகஸ்தானத்திலும் 12ஆம் இடமான அயன, சயன ஸ்தானத்திலும் பதிவாகிறது. எனவே வருமானப் பற்றாக்குறை ஏற்படாது. உடல் ஆரோக்கியமும் ஒத்துழைப்புச் செய்யும். திடீர் பயணங்கள் அதிகரிக்கும். திட்டமிட்ட காரியங்களை செய்து முடிப்பீர்கள். உத்தியோகத்தில் இருப்பவர்களுக்கு எதிர்பார்த்த மாறுதல் வந்து சேரும். சக பணியாளர்களால் ஏற்பட்ட தொல்லை அகலும்.

சனி வக்ர இயக்கத்தில் இருப்பது ஒரு வழிக்கு நன்மைதான். இராசிநாதனாகவும் 12 ஆம் இடத்திற்கு அதிபதியாகவும் விளங்குபவர் சனிபகவான். 12ஆம் இடத்துக்கு அதிபதி வக்ரம் பெறும் பொழுது விரயங்கள் குறையும். குறிப்பாக வீண் விரயங்கள் மாறி சுபச்செலவுகள் அதிகரிக்கும். வெளிநாட்டு அழைப்புகளை ஏற்றுக் கொள்ள முன்வருவீர்கள். சித்ரா பௌர்ணமி நாளில் சித்ர குப்தனை வழிபடுவதோடு மலை வலமும் சென்று வாருங்கள்.

### சுக்ரனின் வக்ர நிவர்த்தி காலம்

உங்கள் இராசிக்கு 4,9இற்கு அதிபதியானவர் சுக்ரன். அவர் மாதத் தொடக்கத்தில் வக்ர இயக்கத்தில் இருக்கிறார். சுகாதிபதி வக்ர இயக்கத்தில் இருக்கும் பொழுது சுகக் கேடுகளும் மருத்துவச் செலவுகளும் அதிகரிக்கவே செய்யும். 19ஆம் திகதி புதன் கிழமை சுக்ரன் வக்ர நிவர்த்தியாகிறார். எனவே அதன் பிறகு சகல நற்பலன்களும் வந்து சேரும். விரக்தி நிலை மாறும். விடிவு காலம் பிறக்கும். விவாகப் பேச்சுகள் சுமுகமாக முடியும். புதிய நகை வாங்கும் யோகம் வாய்க்கும். வாகன யோகமும் உண்டு. சொந்தங்களால் ஏற்பட்ட பிரச்சினைகள் அகலும்.

### புதனின் வக்ர நிவர்த்தி காலம்

24 ஆம் திகதி திங்கட்கிழமை புதன் வக்ர நிவர்த்தியாகிறார். உங்கள் இராசிக்கு பஞ்சம அஷ்டமாதிபதியாக விளங்குபவர் புதன். மாதத் தொடக்கத்தில் வக்ரம் பெற்றும், நீச்சம்




பெற்றும் உள்ள அவர், இனி வக்ர நிவர்த்தியாகி பலம் பெறப் போவதால் எண்ணங்கள் எளிதில் நிறைவேறும். எடுத்த காரியங்களில் வெற்றி கிடைக்கும். கொடுத்த வாக்கைக் காப்பாற்றுவீர்கள். மாமன், மைத்துனர் வழியில் ஏற்பட்ட மனக்கசப்புகள் மாறும். உத்தியோகத்தில் உயர்ந்த நிலையை அடைவீர்கள். பெண்வழிப் பிரச்சினைகள் நல்ல முடிவிற்கு வரும்.

### மேஷ புதனின் சஞ்சாரம்

உங்கள் இராசிக்கு 5,8இற்கு அதிபதியான புதன், மே மாதம் 8ஆம் திகதி சகாய ஸ்தானத்தில் சஞ்சரிக்கப் போகிறார். எனவே வளர்ச்சி கூடும். வருமானம் திருப்திகரமாக இருக்கும். அலுவலகப் பணியில் ஏற்பட்ட அல்லல்கள் அகலும். தொழில் போட்டிகள் நீங்கும். புண்ணிய ஸ்தலங்களுக்குச் செல்லும் புனித பயணங்களை மேற்கொள்வீர்கள். கல்விக்காக எடுத்த முயற்சி கைகூடும். கலகலப்பான தகவல்கள் வந்து சேரும் நேரம் இது.

இம்மாதம் சங்கடஹர சதுர்த்தியன்று விரதமிருந்து ஆனைமுகப் பெருமானை வழிபாடு செய்வது நல்லது. தும்பிக்கை யானை நம்பிக்கையோடு வழிபாடு செய்தால், இன்பங்கள் எல்லாம் இல்லம் தேடி வந்து சேரும்.

### பெண்களுக்கான சிறப்புப் பலன்கள்

நன்மைகள் அதிகம் நடைபெறும் மாதம் இது. புத-சுக்ர யோகத்தால் பணப்புழக்கம் அதிகரிக்கும். பக்குவமாகப் பேசி காரியங்களைச் சாதித்துக் கொள்வீர்கள். மனதில் நினைத்த காரியங்களை மளமளவென செய்து முடிப்பீர்கள். உடல்நலம் சீராகி உற்சாகப்படுத்தும். உத்தியோகத்தில் எதிர்பார்த்த மாறுதல் கிடைத்து மகிழ்ச்சி காண்பீர்கள். தாய்வழி ஆதரவு திருப்திகரமாக இருக்கும். கணவன்-மனைவிக்குள் ஒற்றுமை பலப்படும். அன்பும், பாசமும் அதிகரிக்கும். குழந்தைகள் நலனில் அதிக அக்கறை எடுத்துக் கொள்வீர்கள். விவாகத்தால் ஏற்பட்ட விவகாரங்கள் அகலும். வீடு, இடம் வாங்கும் யோகம் உண்டு. பௌர்ணமி விரதமும், சிவாலய வழிபாடும் பலன் தரும்.

## கலகலப்பான தகவல்கள் வந்து சேரும் நேரம்!

**ஜோதிடக் கலாமணி சிவல்புரி சிங்காரம்**



முயற்சியை மூலதனமாகக் கொண்டு வளர்ச்சி காணும் மீன இராசி அன்பர்களே!

சித்திரை மாதக் கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது மாதத் தொடக்கத்தில் உங்கள் இராசிநாதன் குருபகவான் சப்தம ஸ்தானத்தில் சஞ்சரிக்கிறார். மேலும் அவர் வக்ரம் பெற்று இயங்குகிறார். வக்ரம் பெற்றாலும் அவரது பார்வை உங்கள் இராசியில் பதிவது யோகம்தான். தொட்ட காரியம் துலங்கவும் துன்பங்களில் இருந்து விடுபடவும் குரு பார்வைதான் கைகொடுக்கும்.

நவக்கிரகங்களில் சுபகிரகமாகக் கருதப்படும் குரு, உங்கள் இராசியைப் பார்ப்பதோடு மட்டுமல்லாமல் சகாய ஸ்தானத்தையும் லாப ஸ்தானத்தையும் சேர்த்துப் பார்க்கிறார். எனவே நிதிப் பற்றாக்குறை அகலும். நிகழ்காலத் தேவைகள் பூர்த்தியாகும். அதிக பிரயாசை எடுத்தும் முடிவடையாத காரியங்கள் இனி நினைத்த மறுநொடியே நிறைவேறத் தொடங்கி விடும். தொழிலில் இலாபம் எதிர்பார்த்தபடி வந்து சேரும்.

6 இற்கு அதிபதி சூரியன் உச்சம் பெற்றிருப்பதால் மறைமுக எதிர்ப்புகள் மேலோங்கி இருக்கும். வாக்கு ஸ்தானத்தில் சூரியன் இருப்பதால் தனக்குத் தானே எதிரி என்ற சூழ்நிலை கூட இருக்கலாம். எனவே கூடிய மட்டும் கோபத்தைக் குறைத்துக்கொண்டு செயற்படுவது நல்லது. அந்தநேரத்தில் 9ஆம் இடத்தில் சனி வக்ரம் பெற்றிருக்கிறார். சனி பகவான் உங்கள் இராசிக்கு லாபாதிபதியாகவும் விரயாதிபதியாகவும் விளங்குபவர். லாபாதிபதி வக்ரம் பெறுவது அவ்வளவு நல்லதல்ல. செலவு கூடும்.

சுபகாரியங்கள் நல்லவிதமாக முடிவடையும். அத்தியாவசியப் பொருட்களையும் ஆடம்பரப் பொருட்களையும் வாங்கி மகிழ்வீர்கள். ஆடை, ஆபரண சேர்க்கை உண்டு. எந்தக் காரியத்தையும் செய்து முடிக்க, பிற இனத்து நண்பர்களின் ஒத்துழைப்பு கிடைக்கும். தூரத்து பயணத்தால் தொல்லை உண்டு.

### சுக்ரனின் வக்ர நிவர்த்தி காலம்

உங்கள் இராசிக்கு 3,8 ஆகிய இடங்களுக்கு அதிபதியானவர் சுக்ரன். அவர் மாதத் தொடக்கத்தில் வக்ர இயக்கத்தில் இருக்கிறார். 19ஆம் திகதி புதன்கிழமை வக்ர நிவர்த்தியாகிறார். எனவே மூத்த சகோதரத்தால் ஏற்பட்ட முட்டுக் கட்டைகள் அகலும். நண்பர்கள் மூலம் வரவேண்டிய பாக்கித் தொகை வசூலாகும். விலகிச் சென்ற உறவினர்கள் விரும்பி வந்து சேருவர். நீண்ட நாட்[illegible] குகள் சாதகமா[illegible] பணி செய்வீர்கள். வாங்கிய கடனைத் திருப்பிச் செலுத்த வழிபிறக்கும். உத்தியோகத்தில் உள்ளவர்களுக்கு திடீர் இடமாற்றங்கள், நீண்ட தூரப் பயணங்கள் உருவாகலாம்.

### புதனின் வக்ர நிவர்த்தி காலம்

உங்கள் இராசிக்கு 4,7 ஆகிய இடங்களுக்கு அதிபதியானவர் புதன். அவர்




மாதம் தொடங்கும் பொழுது வக்ர இயக்கத்தில் இருக்கிறார். 24 ஆம் திகதி திங்கட்கிழமை வக்ர நிவர்த்தியாகிறார். சுகாதிபதி பலம் பெற்றிருப்பதால் சுகங்களும் சந்தோசங்களும் வந்து சேரும். தகராறுகள் தானாக விலகி ஓடும். மகன் அல்லது மகள் வழியில் திருமணப் பேச்சுக்கள் கைகூடுவதற்கான அறிகுறிகள் தென்படும். புகழ்பெற்றவர்கள் உங்களுக்குப் பின்னணியாக இருந்து சில காரியங்களை முடித்துக்கொடுப்பர். பொருளாதார மேம்பாடு அதிகரிக்கும். ஆபரணச் சேர்க்கை உண்டு.

### மேஷ புதனின் சஞ்சாரம்

[illegible] சுக மற்றும் சப்த [illegible] அதிபதியாக விளங்கும் புதன் மே 8ஆம் திகதி தன ஸ்தானத்தில் சஞ்சரிக்கப் போகிறார். எனவே வருமானம் இருமடங்காக உயரும். வாழ்க்கைத் துணைக்கு உத்தியோகம் சம்பந்தமாக எடுத்த முயற்சியில் வெற்றி கிடைக்கும். உதிரி வருமானங்களும் பெருகும். கல்வி முயற்சி கைகூடும். மேற்படிப்பு படிக்கும் ஆசை பூர்த்தியாகும். இளைய சகோதர பகை மாறும். இல்லம் கட்டிக் குடியேற வேண்டும் அல்லது வீடு வாங்க வேண்டுமென்ற உங்களின் திட்டங்கள் வெற்றி பெறும் நேரமிது. இம்மாதம் குரு மற்றும் சுக்ரன் ஸ்தலங்களுக்கு சென்று வழிபட்டு வருவது நல்லது. செவ்வாய்க்கிழமை வடக்கு நோக்கிய அம்பிகையை வழிபட்டால் தடைகள் அகலும்.

### பெண்களுக்கான சிறப்புப் பலன்கள்

உங்கள் இராசிநாதன் குரு, உங்கள் இராசியைப் பார்க்கும் மாதம் இது. ஆரோக்கியம் சீராகும். அதிர்ஷ்ட வாய்ப்புகள் வந்து சேரும். பாராட்டும், புகழும் கூடும். பாதியில் விட்ட படிப்பைத் தொடர வாய்ப்பு உருவாகும். தாய்வழி ஆதரவு கிடைக்கும். ஒதுங்கிச் சென்ற உறவினர்கள் ஓடிவந்து இணைவர்.

## எடுத்த முயற்சியில் வெற்றி கிடைக்கும்!

கணவன்-மனைவிக்குள் நெருக்கம் அதிகரிக்கும். நீண்ட நாட்களாக இருந்த பிரச்சினை தீரும். கோபத்தைக் குறைத்துக் கொண்டு செயற்படுவது நல்லது. ஒரு சிலருக்கு குடியிருக்கும் வீட்டை விலைக்கு வாங்கும் யோகம் வாய்க்கும். சம்பள உயர்வு பற்றிய தகவல் வந்து மகிழ்ச்சிப்படுத்தும். ராகு-கேது பிரீதி செய்வது நல்லது.

(முற்றும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடக்கு - கிழக்கில் 4 மாதங்களில் 8,332 பேர் டெங்கால் பாதிப்பு

(கொழும்பு)

2017 ஆம் ஆண்டின் நான்கு மாதங்களில் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் டெங்கு காய்ச்சலினால் 8 ஆயிரத்து 332 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். சுகாதார அமைச்சின் தொற்று நோய் விஞ்ஞானப் பிரிவின் டெங்குக் காய்ச்சல் குறித்த கடந்த வாரத்துக் கான தரவுகளின் பிரகாரம், வடக்கின் யாழ். மாவட்டத்தில் 2 ஆயிரத்து 48 பேரும், மன்னார் மாவட்டத்தில் 346 பேரும், வவுனியா மாவட்டத்தில் 324 பேரும் மற்றும் கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களில் முறையே 180, 87 பேர் டெங்குக் காய்ச்சலினால் பாதிக்கப்பட்டுள்ளமை பதிவாகியுள்ளது.

இதற்கமைய வட மாகாணத்தில் டெங்குக் காய்ச்சலினால் இதுவரை 2 ஆயிரத்து 985 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

கிழக்கு மாகாணத்தில் இதுவரையான காலப்பகுதியில் 5 ஆயிரத்து 347 பேர் டெங்குக் காய்ச்சலினால் பாதிக்கப்பட்டுள்ளமை பதிவாகியுள்ளது.

இதில், திருகோணமலை மாவட்டத்திலேயே அதிகளவிலானோர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

கிண்ணியா, மூதூர் உட்பட திருகோணமலை மாவட்டத்தில் 3ஆயிரத்து 476 பேரும், மட்டக்களப்பு மாவட்டத்தில் ஆயிரத்து 696 பேரும், அம்பாறை மாவட்டத்தில் 175 பேரும் டெங்கினால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இதேவேளை, இவ் வருடத்தின் இந்த நான்கு மாதங்களில் நாடளாவிய ரீதியில் 34 ஆயிரத்து 59 பேர் டெங்கால் பாதிக்கப்பட்டும் அவர்களில் 61 பேர் உயிரிழந்துமுள்ளனர்.

டெங்கால் பாதிக்கப்பட்டுள்ளவர்களின் இவ்வெண்ணிக்கையில் அதிகளவிலானோர் மேல் மாகாணத்தின் கொழும்பு மாவட்டத்தில் காணப்படுகின்றனர்.

கொழும்பு மாவட்டத்தில் 7 ஆயிரத்து 540 பேர் பாதிக்கப்பட்டுள்ளதுடன் இவர்களில் ஆயிரத்து 848பேர் கொழும்பு மாநகர எல்லைப் பிரதேசங்களுக்குட்பட்டவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-7)

## வாரம் ஒரு யாழ்ப்பாணத்து மூலிகை



# வெப்ப காலத்தில் மூலிகைப் பயன்பாடு



டாக்டர் (திருமதி) விவியன் சத்தியசீலன்
M.D(Siddha)India
சிரேஷ்ட விரிவுரையாளர்
சித்தமருத்துவத்துறை
யாழ்.பல்கலைக்கழகம்

❖ வெப்ப காலத்தில் ஆரோக்கியத்திற்கு கரட் சாறும் பசளைக் கீரை சாற்றையும் ஒவ்வொன்றாக 30 மில்லி அளவு கலந்து தினமும் காலையில் அருந்த வேண்டும்.

உடலிற்கு குளிர்ச்சியையும் நீர்த்தன்மையையும் சேர்ப்பது மட்டுமன்றி கரட்டின் தோல் மற்றும் கண்களுக்கு நலம் தரும் உயிர்ச்சத்து ஏ இருக்கின்றது.

உயிர்ச்சத்து பி வகை உயிர்ச்சத்து நரம்பு மண்டலத்தை ஆரோக்கியமாக வைத்திருக்கும். பசளைக் கீரையில் அதிக அளவுள்ள மக்னீசியம்,உயிர்ச்சத்து சி இரத்தக் குழாய்களை நன்கு பராமரிக்கக் கூடியது. தயாரித்த சாறை உடனே அருந்த வேண்டும்.

❖ நம் உணவில் ஆறு சுவைக்கு பதில் கசப்புக்குரிய உணவு வகைகளை கலந்துண்ணாமல் தினமும் மீதமுள்ள காரம், இனிப்பு, புளிப்பு, துவர்ப்பு, உப்பு ஆகிய சுவைகளையுடைய உணவு வகைகளை மட்டுமே சாப்பிட்டு வருகின்றோமல்லவா? இதனால் உடலில் தேய்மானங்களை புதுப்பிக்க உற்பத்தியாகும் கலவை தரமற்றதாக உற்பத்தியாகின்றது.

❖ இந்த தரக்குறைவுக் கலவை தேய்ந்த பாகங்களில் முழுமையாகவும் உறுதியாகவும் படியாமல் போய் விடுகின்றபடியால் படிப்படியாக தேய்மானங்கள் உடலில் அதிகமாகி உடலுறுப்புகள் அதனதன் பலத்தை (Strength ) இழக்க வாய்ப்பு உண்டாகி விடுவதால் தளர்ச்சியடைகின்றது.

ஆகவே இறுதிவரை மனித உடம்பு தளர்ச்சியடையாமல் முழுச்சக்தியுடனும் தன்னிச்சையாகவும் நோயின்றி வாழ வேண்டுமெனில் அனுதினமும் ஒருவேளை உணவிலாவது கசப்பு சுவைக்குரிய காய்கறி, கீரை வகைகளை உணவுடன் சேர்த்து மென்று சுவைத்து விழுங்கி வரவேண்டும். உதாரணமாக அகத்திக் கீரை, பாகற்காய், சுண்டைக்காய், காற்றோட்டிக்காய் ஆகியவை கசப்புக்குரியவை.

❖வெப்ப காலத்தில் வேப்பம்பூ வடகத்தை உப்பு கலந்து மோரில் ஊற வைத்து நெய்யில் பொரித்து சாப்பிடலாம். பித்தமும் குறையும்.

எலுமிச்சம்பழம், சீரகம், இலந்தைப்பழம், பசுநெய், கரும்பு, செவ்விளநீர், நெல்லிக்காய், கத்தரிப்பிஞ்சு,



பனைவெல்லம் வெப்பத்தை தணிக்கும் பொருட்களாகும்.

கற்றாளையின் உள் சோற்றை சிறுதுண்டாக வெட்டி ஒருதரம் கழுவி கற்கண்டு தூளிட்டு சாப்பிட கண், கை, காலிலுள்ள எரிச்சல் நீங்கும். மலச்சிக்கலை நீக்குவதில் முதன்மையானது.

❖பித்த ஆதிக்கத்தால் ஏற்படும் தலைச்சுற்று நீங்க இஞ்சிச்சாறு 20 மில்லியுடன் தேன் 20 மில்லி கலந்து காலையில் அருந்த வேண்டும். தினமும் பாலில் ஏலக்காய் சேர்த்து சாப்பிட உடல் உஷ்ணம் தணியும்.

❖2,3 பேரீச்சம்பழங்களை வெப்ப காலத்தில் தினமும் சாப்பிட்டு ஒரு டம்ளர் இளஞ் சூடான பசுவின் பாலை இரவில் குடிக்கவும். இரத்தம் சுத்தியாவதுடன் நல்ல தூக்கம் வரும்.

❖வெள்ளரிப் பழத்திற்கு சர்க்கரை சேர்த்து சாப்பிட உடல் உஷ்ணம் தணியும்.

❖தண்ணீர்விட்டான்கிழங்கின் சாறு 30 மில்லியை பசுப்பாலில் 200 மில்லியில் விட்டுக் காய்ச்சி காலையில் அருந்தி வந்தால் உடற்சூடு தணிவதுடன் வெள்ளை சாய்தல் நீங்கும்.

❖உள்ளியை உரித்து சிறு சிறு துண்டாக நறுக்கி நெய்யில் வறுத்து 5 கிராம் அளவு சிறு பனைவெல்லம் சேர்த்து காலையில் வாரத்தில் 2 அல்லது 3 நாட்கள் சாப்பிடலாம்.

❖நன்னாரிவேர், அல்லது வெட்டி வேரை தண்ணீரில் ஊறவைத்து குடிக்க தாகம், உடல் சூடு தணியும்

❖நெற் பொரியை தண்ணீர் விட்டு காய்ச்சி தெளிவை குடிக்கலாம்.

வெப்ப காலத்தில் அறுகம் புல் சாறு 500 மில்லியை நல்லெண்ணெய் 500 மில்லியில் சேர்த்து காய்ச்சி ஆறிய பின்பு உச்சி முதல் உள்ளங்கால் வரை தோய்த்து குளிக்க உடல் உஷ்ணம் தணித்து தோல் நோய்களும் வராது.

### கற்றாளை ஜூஸ் செய்யும் முறை


கற்றாளையின் சோறை எடுத்து சிறுசிறு சதுர துண்டுகளாக வெட்டி 7 தண்ணீரில் கழுவி, எடுத்த கற்றாளையின் நிறையின் 2 மடங்கு தயிரும் விட்டு கிரைண்டரில் அரைத்து அதன்பின் ஒரு மூடி எலுமிச்சம் சாறு பிழிந்து விட்டுஐஸ்கட்டிகளைஇட்டுகுளிர்சாதனப் பெட்டியில் வைத்து எடுத்து அருந்த வெப்பம் தணிந்து உடலில் வெப்ப நோய்கள் அண்டாது.

❖ வில்வம் பழத்திற்கு சீனி சேர்த்து சாப்பிடலாம். அல்லது வில்வம் பழத்தை நீரில் கரைத்து வடித்து சீனி சேர்த்து சர்பத்தாக தயாரித்தும் அருந்துவதால் உடலுக்கு குளிர்ச்சியை தருவதுடன், தாகத்தையும் தணித்து உடலிற்கு ஊட்டத்தை தரும்.

❖ ஜம்புக்காய் தாராளமாகச் சாப்பிடலாம்.







### திராட்சை/ முந்திரிகை பழச்சாறு

திராட்சை பழங்களை நன்கு கழுவிய பின் அவற்றிலிருந்து சாறு பிழிந்து சீனி கலந்து காய்ச்சி சேமிப்பு இரசாயனப் பொருட்களை கலந்து சேமித்து வைத்துக் கொண்டு அவ்வப்போது அருந்தலாம்.

இதனால் தாகம் தணியும். உடலிற்கு ஊட்டத்தை கொடுக்கும். உடல் குளிர்ச்சி அடையும். இரத்தம் நன்கு சுத்தியடையும் குடற் புண்களும் தணியும்.

### திராட்சை சர்பத்

திராட்சை -1 கிலோ, சீனி அல்லது தேன்-2, ஏலக்காய் -4, இஞ்சி தோல் சீவியது.

திராட்சை பழத்தை சாறு பிழிந்து வடிகட்டிக் கொண்டு எலுமிச்சம் பழச்சாறு, சீனி, இஞ்சிச்சாறு, ஏலக்காய் தூள் ஆகியவற்றைகலந்துகொள்ள வேண்டும். சீனி நன்றாகக் கரைந்து பின்பு சர்பத்தாக பயன்படுத்தலாம். உடல்பலம் பெறுவதுடன் குளிர்ச்சியும் அடையும்.

❖நன்றாக பழுத்த வெள்ளரிப் பழத்திலிருக்கும் சதைப் பகுதியை விதைகளை நீக்கி பிரித்தெடுத்து அதன் சாற்றை உப்பு அல்லது சீனியும் மோரும் கலந்து அருந்த தாகம் தணியும். புத்துணர்ச்சி உண்டாகும். சிறுநீர் நன்கு கழியும்.

❖ பழைய சாதத்தில் மோர் அல்லது புளிக்காத தயிர் சேர்த்து சாப்பிடலாம்.

வெப்ப காலத்தில் சீரகம் ஊறிய நீரை அருந்தலாம். அல்லது சீரகக் குடிநீருக்கு பால், சீனிசேர்த்து சாப்பிடலாம்.

❖ நுங்கை தாராளமாக வெப்பகாலத்தில் அருந்தலாம். வியர்க்குரு இருந்தால் உடம்பிற்கும் நுங்கை பூசி ஊற விட்டு கழுவ வியர்க்குரு அகலும்.

❖பனம் பூக்களை வெட்டி அதிலிருந்து வடியும் கள்ளுக்கு முட்டியை சுண்ணாம்பு பூசி சேகரிக்க கள் புளிக்காமல் பதனீர் ஆகக் கிடைக்கும். இதை அருந்தி வர உடல் உஷ்ணம் வெகுவாகத் தணியும்.

### வெள்ளரிப்பழ சர்பத்

தேவையான பொருட்கள்

வெள்ளரிப்பழச்சாறு, அதற்கு அளவான சீனி, ஒரு கிளாஸ் சர்பத்துக்கு தேவையான எலுமிச்சை சாறு, ஐஸ் கட்டி ஒரு துண்டு.

செய்முறை

வெள்ளரிப்பழங்களை தண்ணீரில் கழுவி ஒரு வாய் அகன்ற பாத்திரத்தில் போட்டு கையைக் கழுவிக் கொண்டு பழங்களைநன்றாகப்பிசைந்து பிசைந்த சாற்றை இறக்கிக் கொண்டு விதைகளை எல்லாம் எடுத்து விட்டு மாச்சல்லடையில் வடிகட்டி அந்தச் சாறு எவ்வளவு இருக்கிறதோ அந்தளவு சீனியை சேர்த்து அடுப்பில் வைத்து காய்ச்சி பாகு பதம் வந்ததும் இறக்கி சுத்தமான சீசாவில் ஊற்றி வைத்துக் கொள்ளவும்.

இந்த சர்பத்தில் மூன்று தேக்கரண்டி அளவு எடுத்து ஒரு டம்ளரில் விட்டு அதேயளவு தண்ணீர் ஊற்றி பாதாம் பிசினை ஊற வைத்து சர்பத்தில் 5,6 துண்டுகள் போட்டு ஒரு மூடி எலுமிச்சை சாறு பிழிந்து ஊற்றி தேவையானால் ஒரு ஐஸ்கட்டி போட்டுப் பருகவும். இவ்வாறு தொடர்ந்து ஐந்து நாட்கள் கொடுக்க வேண்டும். அதனால் உடல் உஷ்ணம் தணிந்து பித்த நோய்களை நீக்கி உடலுக்குப் பாதுகாப்பை கொடுக்கக்கூடியது.

குளியல் பொடியாக பச்சைப்பயறு, எலுமிச்சைப் பழத்தோல் இரண்டையும் சம அளவு எடுத்து உலர்த்தி பொடித்து நீர்விட்டு குழைத்து உடம்பு முழுக்கப் பூசி 20 நிமிட நேரம் ஊறவிட்டு குளித்தாலும் உடல் உஷ்ணம் தணிந்து தோல் மிருதுவாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# விவசாயிகளுக்கு ஆதரவாக முழு அடைப்புப் போராட்டம் முடங்கியது தமிழகம்!



## ஒரு இலட்சம் பொலிஸார் குவிப்பு

(சென்னை)

தமிழக விவசாயிகளுக்கு ஆதரவாக தி.மு.க. உள்ளிட்ட அனைத்து எதிர்க்கட்சிகளும் பங்கேற்ற முழு அடைப்புப் போராட்டம் நேற்று நடந்தது. இதில் பாதுகாப்புப் பணியில் ஒரு இலட்சம் பொலிஸார் ஈடுபடுத்தப்பட்டனர்.





காவிரி மேலாண்மை வாரியத்தை அமைக்க வேண்டும். விவசாய கடனை தள்ளுபடி செய்ய வேண்டும் என்பது உள்ளிட்ட கோரிக்கைகளை வலியுறுத்தி டில்லியில் போராட்டம் நடத்திய தமிழக விவசாயிகளுக்கு ஆதரவாக தமிழகத்தில் நேற்று முழு அடைப்பு போராட்டம் நடந்தது.

தி.மு.க. அழைப்பு விடுத்த முழுஅடைப்பு போராட்டத்துக்கு காங்கிரஸ், கம்யூனிஸ்டு, விடுதலை சிறுத்தைகள் உள்ளிட்ட பல்வேறு கட்சிகள் ஆதரவு தெரிவித்துள்ளன.

வணிகர் சங்கங்களும் முழு ஆதரவை அளித்துள்ளன. ஹோட்டல்கள் மூடப்பட்டன. திரையரங்குகளில் பகல் காட்சிகளும் ரத்து செய்யப்பட்டன. போக்குவரத்து தொழிலாளர்களும் முழு அடைப்பில் பங்கேற்றனர்.

மேலும், சட்டம் ஒழுங்கை சீர்குலைக்கும் முயற்சியில் ஈடுபடுவோர் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் தமிழகம் முழுவதும் அரசு பேருந்துகள் கணிசமான அளவில் இயங்கும் என்று பொலிஸார் சார்பில் தெரிவிக்கப்பட்டது.

தமிழகத்தில் ஆளும் கட்சியான அ.தி.மு.க. முழு அடைப்பில் கலந்து கொள்ளவில்லை. வழக்கம் போல் பேருந்துகளை இயக்க தமிழக அரசு முடிவு செய்தது. இருப்பினும் முழு அடைப்புப் போராட்டத்துக்கு ஆதரவாக பேருந்துகள் இயக்கப்படவில்லை. (இ-3)

# பேச்சுவார்த்தைக்கு முன் பதவி குறித்து பேசுவது பண்பாடாக இருக்காது-பன்னீர்



(டில்லி)

இரு அணிகளும் பேச்சுவார்த்தைக்கு குழு அமைத்துள்ள நிலையில், அதற்கு முன் பதவி குறித்து பேசுவது பண்பாடாக இருக்காது என்று முன்னாள் முதல்வர் பன்னீர் செல்வம் தெரிவித்துள்ளார்.

இந்த நிலையில், மதுசூதனுடனான ஆலோசனைக்கு பின்னர் நேற்று ஆர்.கே. நகரில் பன்னீர்செல்வம் பேட்டியளித்தார். அதில், இரு அணிகளும் பேச்சுவார்த்தைக்கு குழு அமைத்துள்ள நிலையில், அதற்கு முன் பதவி குறித்து பேசுவது பண்பாடாக இருக்காது என்று தெரிவித்துள்ளார்.

மேலும், இரு அணிகள் பேச்சுவார்த்தை தொடர்பாக வைத்திலிங்கம் கே.பி. முனுசாமிக்கு வட்ஸ்அப் மூலம் அனுப்பிய தகவலுக்கு உரிய பதில் அளிக்கப்படும். பேச்சுவார்த்தை பற்றி எடப்பாடி பழனிச்சாமி அணிக்கு நல்ல முடிவு தெரிவிக்கப்படும் என பன்னீர்செல்வம் தெரிவித்துள்ளார். (இ-7)




## பழனிச்சாமியின் பாதுகாப்புக்கு அதிகளவு பொலிஸார் குவிப்பு

தமிழக முதலமைச்சர் பழனிச்சாமி தேவையின்றி அதிக எண்ணிக்கையில் பொலிஸரை குவித்துக் கொள்வதை கைவிட வேண்டும் என்றுபா.ம.க. இளைஞரணித் தலைவர் டாக்டர் அன்பு மணி ராமதாஸ் வலியுறுத்தியுள்ளார்.

பா.ம.க. இளைஞரணித் தலைவர் டாக்டர் அன்பு மணி ராமதாஸ் வெளியிட்டுள்ள அறிக்கையில் டில்லியில் நடந்த நிதி ஆயோக் கூட்டத்தில் பங்கேற்று விட்டு சென்னை திரும்பிய முதலமைச்சர் எடப்பாடி பழனிச்சாமி, விமான நிலையத்தில் இருந்து வீடு செல்வதற்காக அண்ணாசாலையில் மட்டும் 10 அடிக்கு ஒருவர் வீதம் 500 இற்கும் மேற்பட்ட பொலிஸார் பாதுகாப்புக்கு நிறுத்தப்பட்டிருந்தனர்.

வீதிகளில் பல இடங்களில் தடுப்புகள் ஏற்படுத்தப்பட்டிருந்தன. இதனால் அண்ணா சாலையில் பயணம் செய்த மக்கள் தேவையற்ற இன்னல்களுக்கும், இடையூறுகளுக்கும் ஆளானார்கள் எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (இ-3)

# ஸ்டாலின் கைது



(சென்னை)

தமிழக விவசாயிகளுக்கு ஆதரவாக தி.மு.க. உள்ளிட்ட எதிர்க்கட்சியினர் அறிவித்திருந்த முழு அடைப்பு போராட்டம் அமைதியான முறையில் நடைபெற்றது. திருவாரூரில் போராட்டத்தில் ஈடுபட்ட ஸ்டாலினை பொலிஸார் கைது செய்தனர். நேற்றுக் காலையில் இருந்து தமிழ்நாட்டில் முக்கிய நகரங்கள் மற்றும் சிற்றூர்களில் உள்ள முக்கிய வீதி சந்திப்புகளில் ஆயிரக்கணக்கான எதிர்க்கட்சி தொண்டர்கள் தங்களது கட்சி கொடியுடன் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

தி.மு.க. தலைவரும், தமிழக முன்னாள் முதலமைச்சருமான கருணாநிதியின் பிறந்த ஊரான திருவாரூர் மாவட்டத்தில் நேற்றுக்காலை தி.மு.க. செயல்தலைவர் மு.க. ஸ்டாலின் தலைமையில் கம்யூனிஸ்ட், விடுதலை சிறுத்தைகள் உள்ளிட்ட எதிர்க்கட்சிகளை சேர்ந்த ஆயிரக்கணக்கான தொண்டர்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

திருவாரூர் பேருந்து நிலையம் அருகே நடைபெற்ற இந்த போராட்டத்தின்போது மு.க.ஸ்டாலின், டி.ஆர். பாலு மற்றும் மறியலில் ஈடுபட்ட தொண்டர்கள் அனைவரையும் பொலிஸார் அதிரடியாக கைது செய்தனர்.

கைது செய்யப்பட்ட அனைவரும் பேருந்து நிலையம் அருகே உள்ள திருமண மண்டபங்களில் தங்க வைக்கப்பட்ட னர். இதற்கிடையே திருவாரூர், காரைக்கால் உள்ளிட்ட சில பகுதிகளில் கட்சி கொடிகளுடன் சென்ற தி.மு.கவினர் திடீர் ரயில் மறியலிலும் ஈடுபட்டனர். (இ-3)

# அ.தி.மு.க தலைமைக் கழகத்திலிருந்து சசிகலா படத்தை உடனே அகற்றுங்கள்

## பன்னீர்செல்வம் அணி வலியுறுத்து



(சென்னை)

அ.தி.மு.க தலைமை கழகத்திலிருந்து சசிகலா படத்தை உடனே அகற்ற வேண்டும் என்று அ.தி.மு.க. புரட்சி தலைவி அம்மா அணியினர் வலியுறுத்தியுள்ளனர்.

ஜெயலலிதா மறைவுக்கு பிறகு அ.தி.மு.க. இரண்டாக பிளவுபட்டதால் தேர்தல் ஆணையம் இரட்டை இலை சின்னத்தை முடக்கி வைத்துள்ளது. அ.தி.மு.கவுக்கு மீண்டும் இரட்டை இலை சின்னம் கிடைக்க இரு அணிகளும்ஒன்றாக இணைய வேண்டிய கட்டாயம் ஏற்பட்டுள்ளது.

அ.தி.மு.கவில் இருந்து சசிகலாவை வெளியேற்றினால் மட்டுமே பேச்சுவார்த்தை நடைபெறும் என்று ஓ.பி.எஸ். அணியின் சார்பில் கே.பி.முனுசாமி தெரிவித்ததை அடுத்து பேச்சுவார்த்தைக்கு திடீர் முட்டுக்கட்டை ஏற்பட்டது. இதனையடுத்து இரு தரப்பினரும் தனித்தனியாக ஆலோசனை நடத்தினர்.

இந்நிலையில், அ.தி.மு.க. தலைமை கழகத்தில் இருந்து சசிகலா படத்தை உடனே அகற்ற வேண்டும் என்று அ.தி.மு.க புரட்சி தலைவி அம்மா அணியினர் வலியுறுத்தியுள்ளனர். அ.தி.மு.க அவைத் தலைவர் மதுசூதனன் வெளியிட்டுள்ள அறிக்கையில் இதனை தெரிவித்துள்ளார்.

அந்த அறிக்கையில், "சசிகலாவின் புகைப்படங்களை அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அலுவலகமான தலைமைக் கழகத்திலிருந்து உடனே அகற்றி அதன் புனிதத்தை காப்பாற்ற வேண்டும் என்று விசுவாசத் தொண்டர்களின் சார்பாகவும், தமிழக மக்களின் சார்பாகவும் கேட்டுக் கொள்கிறேன்" என்று அறிக்கையில் வலியுறுத்தப்பட்டுள்ளது. (இ-3)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ராணுவத்துக்கு செலவிடுவதில் இந்தியாவுக்கு 5 ஆவது இடம்

உலகிலேயே இராணுவத்துக்காக அதிகம் செலவிடும் நாடுகளின் பட்டியலில் இந்தியா 5 ஆவது இடத்தைப் பிடித்துள்ளது.

ஸ்டாக்ஹோம் சர்வதேச அமைதி ஆய்வு இன்ஸ்டியூட் (சிப்ரி) வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறப்பட்டிருப்பதாவது.

கடந்த 2016இல் இந்தியாவின் இராணுவ செலவினம் 8.5 சதவீதமாக அதிகரித்தது. இராணுவத்தை மேம்படுத்த 55.9 பில்லியன் அமெரிக்க டொலரை செலவிட்டுள்ளது.

இதன்மூலம் இராணுவத்துக்காக அதிகம் செலவிடும் நாடுகளின் பட்டியலில் இந்தியா 5 ஆவது இடத்தைப் பிடித்துள்ளது. முதல் இடத்தில் உள்ள அமெரிக்கா 2015 மற்றும் 2016 ஆம் காலகட்டத்தில் 1.7 சதவீதம் வரை இராணுவ செலவினத்தை அதிகரித்து 611 பில்லியன் டொலரை செலவிட்டுள்ளது.

சீனா, ஜப்பான், தென் கொரியா, அவுஸ்திரேலியா உள்ளிட்ட நாடுகளும் முதல் 15 இடங்களில் இடம்பிடித்துள்ளன. இதில் 2 ஆவது இடத்தில் உள்ள சீனாவின் இராணுவ செலவினம் 215 பில்லியன் டொலர். இது கடந்த காலங்களை விட 5.4 சதவீதம் அதிகம். ரஷ்யா தனது இராணுவத்தை பலப்படுத்துவதற்காக 5.9 சதவீதம் வரை செலவினத்தை அதிகரித்துள்ளது.

அந்நாடு மொத்தமாக 69.2 பில்லியன் டொலரை செலவிட்டு 3ஆவது இடத்தைப் பிடித்துள்ளது. 2015இல் 3 ஆவது இடத்தில் இருந்த சவுதி அரேபியா தனது இராணுவ செலவினத்தை 30 சதவீதம் வரை குறைத்துக் கொண்டதால் 4 ஆவது இடத்துக்கு தள்ளப்பட்டுள்ளது. (இ-3)




# சிரிய அரசு மீது கூடுதல் பொருளாதாரத் தடை

## அமெரிக்கா அதிரடி நடவடிக்கை



(டமாஸ்கஸ்)

இரசாயன குண்டு தாக்குதல் நடத்தியதற்காக ஜனாதிபதி ஆசாத் தலைமையிலான சிரிய அரசு மீது கூடுதல் பொருளாதாரத் தடை விதித்து அமெரிக்கா அரசு நடவடிக்கை எடுத்துள்ளது.

சிரியாவில் ஜனாதிபதி அல் ஆசாத் தலைமையிலான அரச தரப்பு படைக்கும் கிளர்ச்சியாளர்கள் படைக்கும் இடையே கடந்த சில ஆண்டுகளாகவே தாக்குதல் நடைபெற்று வருகிறது.

இந்நிலையில், கிளர்ச்சியாளர்கள் வசம் உள்ள பகுதியில் இந்த மாத தொடக்கத்தில் நடத்தப்பட்ட இரசாயன வான்வெளித் தாக்குதலில் சுமார் 90 பேர் பரிதாபமாக கொல்லப்பட்டனர்.

இந்த தாக்குதலில் பெண்கள் மற்றும் குழந்தைகள் அதிக அளவில் உயிரிழந்தனர். ஏராளமானோர் பாதிப்படைந்து வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

இந்த தாக்குதலை ஜனாதிபதி ஆசாத் தலைமையிலான சிரிய அரசு தான் மேற்கொண்டதாக கூறி அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய நாடுகள் கடும் கண்டனம் தெரிவித்தன.

இருப்பினும் சிரிய அரசு மீதான இந்த குற்றச்சாட்டை ரஷ்யா ஏற்கவில்லை.

இந்நிலையில், இரசாயன குண்டு தாக்குதல் நடத்திய தற்காக சிரிய அரசு மீது கூடுதல் பொருளாதார தடை விதித்து அமெரிக்கா அரசு நடவடிக்கை எடுத்துள்ளது.

சிரியாவின் அறிவியல் படிப்புகள் மற்றும் ஆராய்ச்சி மையத்தில் பணி புரியும் 271 பேர் மீது தடை நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாக அமெரிக்கா கருவூல செயலாளர் ஸ்டீவன் முனுசின் கூறினார்.

தாக்குதல் நடத்தப்பட்ட 3 வாரங்களுக்கு பிறகு இந்த தடை நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. (இ-3)

# அமெரிக்க கூட்டுப்படைத் தாக்குதலில் சிரியாவில் இதுவரை 7,631 பேர் பலி!

(டமாஸ்கஸ்)

அமெரிக்க கூட்டுப்படை தாக்குதல்களில் சிரியாவில் இதுவரை 7,631 பேர் பலியாகியுள்ளனர்.

இதுதொடர்பாக பிரிட்டனைச் சேர்ந்த போர் கண்காணிப்பு அமைப்பு வெளியிட்டுள்ள அறிக்கையில்,

சிரியாவில் முகாமிட்டுள்ள ஐ.எஸ். தீவிரவாதிகள் மீது 2014 செப்டெம்பர் 23 ஆம் திகதி அமெரிக்க கூட்டுப்படை வான் வழித் தாக்குதல் நடத்த தொடங்கியது.

இதில் இதுவரை 5,961 ஐ.எஸ். தீவிரவாதிகள் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளனர்.

அப்பாவி பொதுமக்களில் 1,256 பேர் உயிரிழந்தனர்.

அவர்களில் 275 பேர் குழந்தைகள், 184 பேர் பெண்கள். பல்வேறு தாக்குதல்களில் சிரியா இராணுவத்தைச் சேர்ந்த 98 வீரர்கள் உயிரிழந்துள்ளனர். ஒட்டுமொத்தமாக இதுவரை 7,631 பேர் பலியாகியுள்ளனர் என அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-3)

# வடகொரியா விவகாரம் தொடர்பில் ஜேர்மனி- அமெரிக்கா ஆலோசனை

ஜேர்மன் ஜனாதிபதி ஏஞ்சலே மெர்க்கல் உடன் தொலைபேசியில் பேசிய அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப் சிரியா. ஓமான் மற்றும் வடகொரியா விவகாரங்கள் குறித்து ஆலோசனை நடத்தினார். ஜேர்மன் ஜனாதிபதி ஏஞ்சலே மெர்க்கல் உடன் அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் தொலைபேசியில் பேசினார் என வெள்ளை மாளிகை வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சிரியா, ஓமான் ஆகிய நாடுகளில்நடைபெற்று வரும்போர் குறித்து ட்ரம்ப் ஆலோசனை நடத்தினார். மற்றும்வடகொரியா நாட்டினால்ஏற்பட்டுள்ள பாதுகாப்பு அச்சுறுத்தல் குறித்தும் பேசினார். உக்ரைன் விவகாரத்தில் ஜேர்மனி மற்றும் பிரான்ஸ் மேற் கொள்ளும் அமைதிப் பேச்சுவார்த்தை முயற்சிக்கு அமெரிக்கா வின் ஆதரவு உண்டு என்று மீண்டும் ட்ரம்ப் உறுதியாக தெரிவித்துள்ளார் என்று அந்த அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது. (இ-3)

# வன்முறைச் சம்பவங்களால் மெக்சிக்கோவில் 35 பேர் பலி

(மெக்சிக்கோ)

மெக்சிக்கோவில் போதைப் பொருள் கடத்தல் கும்பல் இடையே மோதலில் பலியானவர்கள் எண்ணிக்கை 35 உயர்ந்துள்ளது.

மெக்சிக்கோவில் பல்வேறு போதைப்பொருள் கடத் தல் குழுக்கள் ஆதிக்கம் செலுத்திவருகின்றன. தொழில் ரீதியான போட்டியில் இந்தக் குழுக்களுக்கிடையே அவ்வப்போது வன்முறைச் சம்பவங்கள் வெடிக்கின்றன.

இந்த நிலையில் சினலோவ் மாகாணத்தில் உள்ள வெவ்வேறு இடங்களில் போதைப்பொருள் கடத்தல் கும்பல்களுக்கு இடையே கடுமையான சண்டை மூண்டது. இந்த வன்முறை சம்பவங்களில் 12 பேர் கொல்லப்பட்டனர்.

இதேபோல், மிசோகன் மாகாணத்தில் இரு போதைப் பொருள் கடத்தல் கும்பல்களை சேர்ந்தவர்களுக்கு இடையே ஏற்பட்ட துப்பாக்கிச்சண்டையில் 9 பேர் பலியாகினர்.

இதற்கிடையே, குர்ரெர்ரோ மாகாணத்தில் வெவ்வேறு பகுதிகளில் 8 உடல்கள் கண்டெடுக்கப்பட்டன. அதே போல் வெராகுருஸ் மாகாணத்தில் இருந்து 6 உடல்கள் கண்டெடுக்கப்பட்டன.

எனவே, போதைப் பொருள் கடத்தல் கும்பல் மோதலில் பலியானவர்கள் எண்ணிக்கை 35 ஆக உயர்ந்துள்ளது. (இ-3)

# அசைவ உணவுகளுக்கு தடை விதிக்க பிரதமருக்கு பீட்டா அமைப்பு கடிதம்

(டில்லி)

விலங்குகள் நல அமைப்பான பீட்டா அரசு விழாக்கள்மற்றும் நிகழ்ச்சிகளில் நடக்கும் விருந்துகளின்போது அனைத்து அசைவ உணவுகளுக்கும் தடை விதிக்குமாறு பிரதமர் நரேந்திர மோடிக்கு கோரிக்கை விடுத்துள்ளது.

இது குறித்து பீட்டா அமைப்பு பிரதமர் நரேந்திர மோடிக்கு எழுதியுள்ள கடிதத்தில்,

சமீபத்தில் ஜேர்மனி சுற்றுச் சூழல் அமைச்சர் அரச விழாக்களில் மற்றும் நிகழ்ச்சிகளில் அசைவை உணவை பரிமாற தடை விதித்தார்.

அதுபோல் இந்திய பிரதமர் நரேந்திரமோடி தடை விதிக்க வழிவகுக்க வேண்டும் என கேட்டுக் கொண்டு உள்ளது.காலநிலை மாற்ற பிரச்சி னைக்கும் பசுமை இல்ல வாயுவை கட்டுப்படுத்துவதி லும் இந்த நடவடிக்கை உதவும் என பீட்டா அமைப்பு தெரிவித்துள்ளது.

இந்த உத்தரவு மூலம் கருணை உள்ள மற்றும் நட்புடைய ஆரோக்கியமான சுற்றுச் சூழலுக்கு பிரதமர் மோடி முன்மாதிரியாக விளங்கலாம் எனவும் அந்த அமைப்பு கூறியுள்ளது. (இ-3)

# இந்தியாவின் வளமையை தமிழ்மொழி பறைசாற்றுகிறது

## பிரதமர் மோடி பெருமிதம்

(டில்லி)



இந்தியாவின் வளமையை தமிழ்மொழி பறைசாற்றுகிறது என்று நிதி ஆயோக் கூட்டத்தில் பிரதமர் நரேந்திர மோடி பெருமிதத்துடன் தெரிவித்தார்.

டில்லியில், மாநில முதலமைச்சர்கள் பங்கேற்ற நிதி ஆயோக் கூட்டத்தில் நேற்று முன்தினம் பிரதமர் நரேந்திர மோடி உரையாற்றுகையில்,

வேற்றுமையில் ஒற்றுமை உணர்வை பலப்படுத்தும் விடயங்களில் நாம் நிரந்தரமான முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும். இதனை எப்படி பலப்படுத்துவது என்று ஆராய வேண்டும். இந்த பன்முகத்தன்மையில் நாம் ஒற்றுமையை எப்படி ஏற்படுத்த வேண்டும் என்று பார்க்க வேண்டும்.

பல நேரங்களில் நாம் உணர்கிறோம். ஒரே தேசத்தில் நாம் வசித்தாலும் நாம் அந்நியராக உணர்கிறோம். நமது பாரம்பரியம் கலாசாரம் பற்றி அறிந்து கொள்ளாமல் இருக்கிறோம். எனவே மாநிலங்களை நாம் கேட்டுக் கொள்கிறோம், ஒரு மாநிலம் மற்ற மாநிலத்துடன் புரிந்துணர்வு ஒப்பந்தத்தை மேற்கொண்டு. ஜோடி சேருமாறு கேட்டுக்கொள்கிறோம்.

உதாரணத்திற்கு தமிழ் நாட்டை எடுத்துக் கொள்ளுங்கள். தமிழ்வளமையானமொழி. தொன்மை வாய்ந்த மொழி. நான் மனதார சொல்கிறேன்.

இந்தியாவின் வளமையை பறைசாற்றுவதற்கு தமிழ் மொழியை குறிப்பிடலாம். ஆனால் தமிழ்மொழியைப் பற்றி அறிந்து கொள்ள வாய்ப்பே இல்லாமல் இருக்கிறது என அவர் மேலும் தெரிவித்தார். (இ-3)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குப்பைமேடு சரிந்து 200 பேர் உயிரிழப்பு!

## ரஞ்சன் அதிர்ச்சித் தகவல்

(கொழும்பு)

**மீதொட்டமுல்ல குப்பைமேடு சரிந்தமையால் பலியானவர்களின் எண்ணிக்கை 33 என ஊடகங்கள் செய்தி வெளியிடுகின்றன. ஆனால் அந்தக் குப்பை மேட்டுக்குள் சிக்கி சுமார் 200 பேர் பலியாகியுள்ளனர் என்று பிரதியமைச்சர் ரஞ்சன் ராமநாயக்க அதிர்ச்சித் தகவல் வெளியிட்டுள்ளார்.**



இந்த விவகாரம்தொடர்பில் பிரதியமைச்சர் சமூக வலைத்தளங்களில்காணொலி ஒன்றை தரவேற்றம் செய்துள்ளார்.

அதில், மீதொட்டமுல்லயில் இடம்பெற்றது அனர்த்தம் அல்ல. உண்மையில், அங்கு மனிதப் படுகொலைகளே இடம்பெற்றுள்ளன. இந்தச் சம்பவத்துடன் நேரடியாக மற்றும் மறைமுகமாக தொடர்புடையவர்கள் தண்டிக்கப்பட வேண்டும்.

சிறார்கள், சேறுக்குள் சிக்கிப் பலியானதை நாம் கண்டோம். வீடுகளுக்குள் சிக்கியோர், தங்களுடைய் தொலைபேசிகளின் ஊடாக காப்பாற்றுமாறு தொடர்புகளை ஏற்படுத்தியுள்ளனர்.

அவ்வாறானவர்களில் மூச்செடுக்க முடியாமல்விசவாயுவை சுவாசித்து மரணித்தவர்களும் உள்ளனர்.

வேறு நகரத்தைச் சுத்திப் படுத்துவதற்கு சென்றிருந்த் நிலையிலேயே மீதொட்ட முல்ல மக்கள் பலியாகியுள்ளனர்.

இதுவொரு சமூகப் படுகொலையாகும். இந்த விவகாரம் தொடர்பில் ஜனாதிபதி ஆணைக்குழு நியமிக்கப்பட்டு விசாரணைகள்முன்னெடுக்கப்பட வேண்டும் என்றும் அவர் தெரிவித்தார். (இ-7)

மீதொட்டமுல்லயில் இடம்பெற்றது. மனித படுகொலையாகும்.

அதனோடு தொடர்புடைய நிறுவனங்கள் மற்றும் அந்த நிறுவனங்களை வழிநடத்திச் சென்றோர் மீது, மனிதப் படுகொலை குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட வேண்டும் என்றும் அவர் தெரிவித்தார்.

## தென் மாகாணத்தில் 76 பேர் போலி ஆவணம் காட்டி அரச தொழிலில்

போலியான ஆவணங்களை முன்வைத்து கடந்த 2015 ஆம் ஆண்டில், அதிபர்களாகவும் ஆசிரியர்களாகவும், ஏனைய அரச துறைகளிலும் 76 பேர் தென் மாகாணத்தில் தொழில் வாய்ப்புக்களைப் பெற்றுள்ளதாக அரச கணக்காய்வாளர் அறிக்கையொன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு குற்றச்சாட்டுக்கு இலக்கானவர்களிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளிலிருந்து சிலர் விடுவிக்கப்பட்டுள்ளனர்.

ஏனைய 39 பேருக்கு கடந்த 2015 ஆம் ஆண்டு மாத்திரம் 167 இலட்சம் ரூபாயை அரசு சம்பளமாக செலுத்தியுள்ளதாகவும் இந்த அறிக்கையில் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

அரச கணக்காய்வாளர் திணைக்களத்தின் 2015 ஆம் ஆண்டு தென் மாகாண சபை அறிக்கையில் இந்தத் தகவல்வெளியிடப்பட்டுள்ளது இது தொடர்பான விசாரணைகள் தொடர்ந்து முன்னெடுக்கப்படுவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-7)

## இந்தியாவில் பயிற்சியில் ஈடுபட்ட இலங்கைக் கடற்படை அதிகாரி பலி

(கொழும்பு)

இந்தியாவில் பயிற்சியில் ஈடுபட்டிருந்த இலங்கைக் கடற்படை அதிகாரி ஒருவர் நீரில் மூழ்கிப் பலியானார்.

கேரள மாநிலத்தில் உள்ள எர்ணாகுளத்தில் நேற்று முன்தினம் இந்தச் சம்பவம் இடம்பெற்றது.

கொச்சியில் உள்ள இந்தியக் கடற்படைப் பயிற்சி மையத்தில் கடந்த 3ஆம் திகதி தொடக்கம் பயிற்சியை மேற்கொண்டு வந்த இலங்கைக் கடற்படை அதிகாரியான பெற்றி ஓவ்விசர் வீரசிங்க என்ற இளநிலை அதிகாரியே நீரில் மூழ்கிப் பலியானார்.

இலங்கைக் கடற்படைப் பயிற்சியாளர்கள் ஏர்ணாகுளம் கால்வாயில் சுழியோடும்பயிற்சியில்ஈடுபட்டிருந்தனர்.

சுழியோடுவதற்காக இறங்கிய இலங்கைக் கடற்படை அதிகாரி மீளத்திரும்பாததை அடுத்து. உடனடியாக தேடுதல் மேற்கொள்ளப்பட்டது. அப்போது நினைவிழந்த நிலையில் நீருக்கு அடியில் அவர் கண்டு பிடிக்கப்பட்டு மீட்கப்பட்டார். (இ-7)

# எண்ணெய்த் தாங்கிகள் எதனையும் இந்தியாவுக்கு வழங்க சு.க. தயாரில்லை

## மேல் மாகாண முதல்வர் இசுரு கூறுகிறார்

(கொழும்பு)

திருகோணமலை எண்ணெய்த் தாங்கிகள் எதனையும் இந்தியாவுக்கு வழங்குவதற்கு ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி தயாரில்லை யென மேல் மாகாண முதலமைச்சர் இசுரு தேவப்பிரிய தெரிவித்தார்.

பெற்றோலியத் துறை ஊழியர்கள் சம்பந்தப்பட்ட அமைச்சருடன் நடத்திய பேச்சுவார்த்தை தோல்வியடைந்த போது, ஜனாதிபதியிடம் வந்தனர். ஜனாதிபதி இது தொடர்பில் தனக்குத் தொடர்பில்லையெனவும். இதனைப் பிரதமரிடம் சென்று தீர்த்துக் கொள்ளுமாறும் தெளிவாக கூறியுள்ளார்.

பிரதமர் அம்பாந்தோட்டைக்குச் சென்று சீனாவுக்கு வழங்கப் போவதாகக் கூறுகின்றார். திருகோணமலைக்குச் சென்று இந்தியாவுக்கு வழங்கப் போவதாகக் கூறுகின்றார். இதில் ஏதாவதொன்றை ஜப்பானுக்கு வழங்குவதாகவும் கூறுகின்றார்.

இந்த நாட்டின் மக்கள் அரச சொத்துக்களை விற்பனை செய்வதற்கு எதிர்ப்புத் தெரிவிக்கின்றனர். நேற்று முன்தினம் பெற்றோலியப் பிரச்சினைக்கு பிரதமர் [illegible] டியவராகக் காணப்பட்டார். இதனால் தான் ஜனாதிபதியுடன் பேச்சுவார்த்தை நடத்தாமல் பிரதமருடன் பேச்சுவார்த்தை நடத்தப்பட்டுள்ளதாகவும் முதலமைச்சர் கூறியுள்ளார்.

பெற்றோலியத் தொழிற்சங்கப் பிரதிநிதிகள் ஜனாதிபதியுடன் பேச்சு நடத்தாமல், பிரதமருடன் ஏன் நேரடியாக பேச்சுவார்த்தை நடத்தினர் என கொழும்பு ஊடகமொன்று வினவிய போதே அவர் இவ்வாறு பதிலளித்துள்ளார். (இ-7)

## இன்று ஒரு தகவல்

### உதவி என்று கேட்காத வரையில்....

உதவியென்று பிறரிடம் கேட்காதவரையில்தான் நமக்கு மரியாதை.

என்னுடைய பல பிரார்த்தனைகளுள் ஒன்று, ஆண்டவா! எதற்காகவும் யாரிடமும் போய்பல்லைக் காட்டியும் தலையைச் சொறிந்தும் உதவி கேட்கும் தர்ம சங்கடத்திற்கு என்னைத் தள்ளிவிடாதே! என்பது,

நான் என் பல அனுபவங்களில் பார்த்து விட்டேன். பிரியமாகவும் மிக நெருங்கியும் பழகும் பல புள்ளிகள், உதவி என்று அணுகியதும் ஒரு பேனா முனை வைத்த புள்ளியைப் போல் சிறியதாக ஆகி, நம் பார்வைப் பிரதேசத்திலிருந்து மறைந்து ஒதுங்கி விடுகிறார்கள்.

பிரியமாக இருக்கும் பலரை நமக்காகவும் பிறருக்காகவும் அணுகி, நல்லுறவைக் கெடுத்துக் கொள்கிறோம்.

வெண்ணெய் திரளுகிற நேரத்தில் தாழி உடைந்த கதையாய், பிறர் நம்மிடம் நன்கு பிரியம் செலுத்தி, நம்மை இதயத்தின் அரியாசனத்தில் அமர்த்தப் போகும் நேரம் பார்த்து நமக்கு ஒரு சோதனை வரும். உதவி என்று போய்க் கேட்போம். அவ்வளவுதான்! அந்த அரியாசனம் பறிபோய் விடுகிறது.

என்னையே எடுத்துக் கொள்ளுங்கள். என் வட்டத்தில் எனக்கு யாரைப் பிடிக்கிறது என்று கேட்டால், என்னைத் தொந்தரவு செய்யாதவர்களின் பெயர்கள்தான் நினைவுக்கு வருகின்றன. நானாக இவர்களது பெயரைச் சொல்லவில்லை. அவை என்னையறியாமல் தானாகவே வந்து விழுகின்றன.

நட்பு என்பது நட்புக்காக மட்டுமே. சொந்தம் என்பது சொந்தத்திற்காக மட்டுமே என்று எல்லை வகுத்துக் கொள்ளாமல் இவன் எந்த வகையில் நமக்கு உபயோகமாக இருப்பான்? இவனை எப்படிக் குதிரைச் சவாரி செய்யலாம்? என்று சிந்திப்பவர்களையும் செயற்படுபவர்களையும் இந்தப் பட்டியலில் எப்படிச் சேர்ப்பது? கசக்கி முகர்ந்தாலும் பரவாயில்லை, நமக்குக் காரியம் ஆனால் சரி, என்று எண்ணுபவர்கள் இப் பட்டியலில் எப்படி இடம்பெற முடியும்?

வசதி படைத்தவர்கள் சரிவரப் பழகுவதில்லை என்று ஒரு குற்றச்சாட்டு உண்டு. பழகினால் தொலைந்தோம்! என்றல்லவா சுற்றியிருப்பவர்கள் ஆக்கிவிடுகிறார்கள்!

எனக்குத் தெரிந்து ஒரு மிகப் பெரிய மனிதனிடம் ஓர் எளிமையான மனிதர் தொடர்ந்து நல்லுறவுடன் இருக்கிறார். எப்படி இது சாத்தியமாயிற்று என்று கேட்டேன். நான் எந்த உதவியும் அவரிடம் கேட்பதில்லை. என்றார். சபாஷ்! என்றேன்.

பிரியமாக இருக்கிறார் என்பதற்காக விண்ணப்ப மனுக்களை நீட்டிவிட வேண்டாம். அவை நல்லுறவையும் சுமூக உறவையும் கெடுத்துவிடக் கூடியவை. நட்பையும் உறவையும் கசந்துவிடச் செய்யும்.

அப்படியானால் இவர்களால் என்ன பயன்? என்கிறீர்களா?

நாமாகப் போகக் கூடாது. அவர்களாகக் கேட்க வேண்டும். அதுவரை பொறுமை தேவை.

அவர்களே, உங்களுக்கு நான் என்ன செய்ய வேண்டும்? என்று கேட்க வைக்கும் ஆற்றல் உங்களிடம் உண்டா? இதைச் சவாலாக ஏற்றுக் கொண்டு சாதித்துக் காட்டுங்களேன்!

**லேனா தமிழ்வாணன்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை மாதிரி வினாத்தாள் -பகுதி 1

சரியான விடையின் கீழ்க் கீறிடுக.


35. பின்வரும் தாவர இலைகளில் இலைக்கஞ்சி தயாரிப்பதற்குப் பயன்படாத இலை எது?
1) சிறுநாரத்தை 2) தேங்காய்ப்பூக் கீரை 3) வாழையிலை
4) வல்லாரை 5) முருங்கையிலை

36. பின்வருவனவற்றுள் எமது நாட்டுக்கு உரித்தான தாவரம் அல்லாதது எது?
1) ஈரப்பலா 2) தென்னை 3) கொரைக்காய்
4) கஸ்தூரி மஞ்சள் 5) குங்கிலியம்


37. பின்வருவனவற்றுள் காற்றின் மூலம் இனப்பரம்பல் அடையாத வித்து எது?
1) தாமரை 2) எருக்கலை 3) சீதேவியார் செங்கழுநீர்
4) அறுகு 5) இலவம்பஞ்சு

38. எமது நாட்டை ஆட்சி செய்த அந்நியர்களில் பிரித்தானியர் ஆட்சியில் நடைபெற்ற அனுகூலம் அல்லாதது எது?
1) ஆங்கில மொழிக்கல்வி அறிமுகப்படுத்தியமை.
2) பெருந்தோட்டப் பயிர்ச் செய்கை மேற்கொள்ளப்பட்டமை.
3) பெருந்தெருக்கள், புகையிரதப் பாதைகள் அமைக்கப்பட்டமை.
4) பிரித்தானியப் பொருட்கள் நமது நாட்டுக்கு இறக்குமதி செய்யப்பட்டமை.
5) வானொலி, பத்திரிகைத்துறை வளர்ச்சி கண்டமை.

39. எமது நாட்டிலிருந்து ஏற்றுமதி செய்யப்படும், எமது நாட்டுக்கு இறக்குமதி செய்யப்படும் பொருட்கள் அடங்கியுள்ள பெட்டிகளில் காணப்படும் சில குறியீடுகள் கீழே உள்ளன. அவை குறிக்கும் கருத்துக்களை எதிரேயுள்ள புள்ளிக் கோடுகளில் எழுதுக.




40. சில தடை அடையாளங்களின் குறியீடுகள் கீழே உள்ளன. அவை குறிப்பவற்றை எழுதுக.




### 19-04-2017, 21-04-2017 ஆகிய திகதிகளில் வெளியான பகுதி-1 வினாக்களுக்கான விடைகள்


| | | | |
|---|---|---|---|
| 01) 1 | 11) 1 | 21) 2 | 31) 1 |
| 02) 2 | 12) 3 | 22) 1 | 32) 1 |
| 03) 1 | 13) 1 | 23) 3 | 33) 2 |
| 04) 2 | 14) 2 | 24) 1 | 34) 2 |
| 05) 3 | 15) 1 | 25) 3 | 35) 1 |
| 06) 2 | 16) 2 | 26) 2 | 36) 3 |
| 07) 3 | 17) 1 | 27) 2 | 37) 1 |
| 08) 2 | 18) 3 | 28) 2 | 38) 2 |
| 09) 1 | 19) 2 | 29) 2 | 39) 1 |
| 10) 1 | 20) 1 | 30) 3 | |

### 21-04-2017, 26-04-2017 (இன்று) ஆகிய திகதிகளில் வெளியான பகுதி-2 வினாக்களுக்கான விடைகள்

01) இல்லம்
02) கூழானாலும், கந்தையானாலும்
03) யன்னல், கதவு
04) உற்சாகம்
05) நோய்நொடி
06) தூயகாற்று ⟶ சுவாசிப்பதற்கு
தூயநீர் ⟶ அருந்துவதற்கு
தூய உணவு ⟶ உண்பதற்கு
தூய சூழல் ⟶ வாழ்வதற்கு
07) கோடரி
08) தேநீர்
09) அழுக்காறு
10) X
11) ✓
12) 18
13) இராமாயணம்
14) ஆத்திரக்காரனுக்கு
15) PLEASE COME IN
16) கறுணாகர ஸ்யராட்ட யன்ட
17) C, E
18) எனக்கு குடிக்க பால் தாருங்கள்
19) உறவு கொள்வார் அப்பா
20) மகாத்மா காந்தி
21) நன்னயம் செய்துவிடல்
22) கருத்துள்ள வாக்கியங்கள்
23) இருபத்தி மூன்றாயிரத்து முந்நூற்று நாற்பத்திரண்டு
24) XXXVI-36 / VIII - 8 / XXIX - 29 / IX - 9
25) 19,22,25 / 49,64,81 / 28,36,45 / 13,15,17
26) $\frac{2}{3}, \frac{1}{4}, \frac{3}{4}, \frac{3}{8}$
27) 3.3 / 2.02 / 1.5 / 3.23
28) 1.10
29) பி.ப 3.15
30) 800mm
31) 350g
32) 195
33) பூஞ்சணம்
34) திரண்டு
35) 3
36) 2
37) 1
38) 4
39) 1. மீள்சுழற்சி, 2. உடையக்கூடியது, 3. கவனமாகக் கையாளவும், 4. இப்பக்கம் மேலே
40. 1. முந்திச் செல்லத்தடை 2. ... 3. துவிச்சக்கர வண்டி தடை 4. பாதசாரிகள் தடை


### மாதிரி வினாத்தாள்

1) இவ்வுருவிலுள்ள சதுரங்களின் எண்ணிக்கை யாது?



1) 16 2) 18 3) 20

கீழுள்ள ஐந்து உருக்களையும் அவதானித்து விடை அளிக்குக.




இவ்வுருக்களிலுள்ள ஒரு வட்டத்தின் பரப்பளவு 16 சதுர cm ஆகும்.

2) 16 சதுர cm பரப்பளவுடைய உருக்களைக் குறிக்கும் இலக்கங்களை எழுதுக.
..................................................................

3) 16 சதுர cm இலும் குறைந்த பரப்பளவுடைய உரு யாது?
..................................................................

4) 16 சதுர cm இலும் கூடிய பரப்பளவுடைய உருக்கள் எவை?
..................................................................

5 தொடக்கம் 10 வரையிலான வினாக்களுக்கு சரியான விடையைத் தெரிவு செய்க.


5) வித்தியா ஒவ்வொரு வெள்ளிக்கிழமையும் கோயிலுக்குச் செல்வாள். அவள் ஒரு மாதத்தில் கோயிலுக்குச் சென்ற திகதிகளைக் குறிக்கும் சரியான விடை யாது?
1) 5, 12, 20, 27 2) 5, 12, 19, 25 3) 5, 12, 19, 26

6) ஒரு மேசையின் நீளம் அகலத்தைப் போல் இரு மடங்காகும். அம்மேசையின் சுற்றளவு 6 மீற்றர்கள் ஆகும். அம் மேசையின் அகலம் யாது?
1) 2 மீற்றர்கள் 2) 4 மீற்றர்கள் 3) 1 மீற்றர்

| | | |
|---|---|---|
| 6 | 11 | 4 |
| 5 | | 9 |
| 10 | 3 | |


7) சதுரங்களினுள் உள்ள மூன்று இலக்கங்களை எத்திசையிலும் நேராகக் கூட்டும் போது விடை 21 ஆக வருதல் வேண்டும். ஆகவே வெற்றுக் கூடுகளுக்குள் வரவேண்டிய இலக்கங்கள் எவை?
1) 7, 8 2) 6,7 3) 8, 9

8) புள்ளிக்கோட்டில் ஓர் உயிரெழுத்தை எழுதுவதன் மூலம் கருத்துடைய நான்கு சொற்கள் உருவாக்கலாம். அவ்வெழுத்து எது?




1) ஆ
2) ஓ
3) ஊ

9) தீக்குச்சிகளினால் ஆக்கப்பட்ட இவ் ஆங்கில எழுத்துக்களில் அதிக தீக்குச்சிகள் பயன்படுத்தப்பட்ட எழுத்து எது?




**M H K**

10. அடைப்புக்குள் உள்ள M, H, K எனும் மூன்று எழுத்துக்களில் அனைத்து மூலைகளும் செங்கோணங்களைக் கொண்ட எழுத்து எது?
1. M 2. H 3. K

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை மாதிரி வினாத்தாள்

வினாக்களுக்குரிய சரியான விடையைத் தெரிவு செய்க.

11. ஒரு நாள் எமது வகுப்பறையில் சுற்றாடல் பாடத்தின் பின் ஆங்கிலப் பாடம் நடைபெற்றது. தமிழ்ப்பாடம் நடைபெறுவதற்கு முன் கணிதபாடம் நடைபெற்றது. ஆங்கிலப்பாடம் முடிந்த பிறகு சித்திரப்பாடம் நடைபெற்றது. ஆங்கிலப்பாடத்திற்கும் தமிழ்ப்பாடத்திற்கும் இடையில் சுற்றாடல் பாடம் நடைபெற்றது. ஆகவே அன்றைய தினம் பாடங்கள் நடைபெற்ற சரியான ஒழுங்கு முறை எது?

1. கணிதம், சுற்றாடல், ஆங்கிலம், சித்திரம், தமிழ்
2. கணிதம், தமிழ, சுற்றாடல், ஆங்கிலம், சித்திரம்
3. தமிழ், கணிதம், சுற்றாடல், ஆங்கிலம், சித்திரம்

12. ரூபன், ரூபி, மயூரி ஆகிய மூவரும் ஒரு கல்விச் சுற்றுலா சென்ற போது தாங்கள் அணிந்திருந்த ஆடையில் இருந்த நிறங்களைக் கூறினார்கள். ரூபனின் உடையில் சிவப்பு, மஞ்சள், பச்சை நிறங்கள் இருந்தன. ரூபியின் உடையில் மஞ்சள், கறுப்பு, நீல நிறங்கள் இருந்தன. மயூரியின் உடையில் வெள்ளை, மஞ்சள், ஊதா நிறங்கள் இருந்தன. மூவரினதும் உடைகளில் இருந்த ஒரே நிறம் எது?

1. மஞ்சள் 2. பச்சை 3. நீலம்

13. கல்விச் சுற்றுலா சென்ற போது ரூபனை விட ரூபி அதிக பணம் வைத்திருந்தாள். ஆயினும், மயூரி வைத்திருந்த அளவு பணம் ரூபியிடம் இருக்கவில்லை. இவர்களில் குறைந்தளவு பணம் வைத்திருந்தவர் யார்?

1. ரூபன் 2. ரூபி 3. மயூரி

14. எமது பாடசாலையில் ஐந்தாம்தர வகுப்பு A, B, C என மூன்று பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டுள்ளன. பிரிவு A யில் உள்ள மாணவர் தொகை பிரிவு C யை விட அதிகமாகும். பிரிவு B இல் உள்ள மாணவர் தொகை பிரிவு C யை விட அதிகமாகும். எனவே குறைந்த மாணவர்கள் உள்ள பிரிவு எது?

1. பிரிவு A 2. பிரிவு B 3. பிரிவு C

15. நானும் எனது நண்பனும் அன்று திரைப்படம் பார்க்கச் சென்றோம். அங்கு எனது தங்கையையும் அவளது நண்பியையும் கண்டேன். இதன்படி கூறக்கூடிய மிகச் சரியான கூற்று எது?

1. மூன்று பெண்களும் இரண்டு ஆண்களும் திரைப்படம் பார்க்கச் சென்றார்கள்.
2. மூன்று பெண்களும் ஒரு ஆணும் திரைப்படம் பார்க்கச் சென்றார்கள்.
3. மூன்று ஆண்களும் ஒரு பெண்ணும் திரைப்படம் பார்க்கச் சென்றார்கள்.

கீழுள்ள குறியீட்டுக் கூட்டலை நன்கு விளங்கிக் கொண்டு வினாக்களுக்கான விடைகளைக் காண்க.

16. சரியான சமன்பாடு எது?

| | | | | |
|---|---|---|---|---|
| | C | B | C | A |
| + | D | B | C | D |
| | 9 | 6 | 8 | 7 |

1. C + C + A + D = C + D + B + B
2. C + B + C + A = D + B + C + D
3. A + D + A + D = D + D + C + C

17. பிழையான சமன்பாடு எது?

1. C + B = A + D 2. C + C = D + B 3. C + B = D + B

18. குடும்ப உறுப்பினர்களை ஒழுங்குமுறையில் காட்டும் விடை எது?

1. அப்பா, அம்மா, அண்ணா, தங்கை, நான்
2. நான், தங்கை, அப்பா, அம்மா,அண்ணா
3. அப்பா, அம்மா, அண்ணா, நான், தங்கை

கீழே தரப்படும் தகவல்களை நன்றாக அவதானித்த பின் வினாக்களுக்கு விடையைத் தெரிவு செய்க.

| | | | |
|---|---|---|---|
| தகவல் | 1 :- | மு. ப. 5.00 இலிருந்து பி. ப. 1.00 வரை |
| தகவல் | 2 :- | மு. ப. 3.00 இலிருந்து பி. ப. 11.00 வரை |
| தகவல் | 3 :- | மு. ப. 11.00 இலிருந்து பி. ப. 1.00 வரை |

19. அதிக காலத்தைக் குறிக்கும் தகவல் எது?

1) தகவல் 1 2) தகவல் 2 3) தகவல் 3

20. குறைந்த காலத்தைக் குறிக்கும் தகவல் எது?

1) தகவல் 1 2) தகவல் 2 3) தகவல் 3

| | | |
|---|---|---|
| தகவல் | 1 :- | ரூபா 100 இன் 3/4 பங்கு |
| தகவல் | 2 :- | ரூபா 200 இன் 1/4 பங்கு |
| தகவல் | 3 :- | ரூபா 300 இன் 5/6 பங்கு |

21. அதிக பணத்தொகையைக் குறிக்கும் தகவல் எது?

1) தகவல் 1 2) தகவல் 2 3) தகவல் 3

22. குறைந்த பணத்தொகையைக் குறிக்கும் தகவல் எது?


1) தகவல் 1 2) தகவல் 2 3) தகவல் 3


23. இந்நீர்க் கோப்பையில் மேற்பரப்பிலும் அடித்தளத்திலும் இருக்கத்தக்கவை.




1. மேல் சவர்க்காரம் கீழ் பற்தூரிகை
2. கீழ் சவர்க்காரம் மேல் பற்தூரிகை
3. கீழ் நாணயம் மேல் சவர்க்காரம்

24. தண்ணீர் கொள்கலனில் இரு துவாரங்கள் இருந்தால் நீர் வெளியேறும் ஒழுங்கு.


1


2


3

25. கார், லொறி, சைக்கிள் போன்ற வாகனங்களில் திசை திரும்புவதற்கு திருப்ப வேண்டிய சக்கரங்கள் எவை?

1. முன் சக்கரங்கள் 2. பின் சக்கரங்கள் 3. முன்பின் சக்கரங்கள்

பின்வரும் வெற்றிடங்களைப் பூரணப்படுத்துக.

26. இன்னா செய்தாரை ஒறுத்தல் அவர் நாண...

.................................................................................

27. இந்த உலகில் நீங்கள் இயற்றும் தொண்டில் எல்லாம்...

.................................................................................

28. உள்ளதைக் கொண்டு திருப்தி அடைந்தால் மனமகிழ்ச்சி கிடைக்கும் என்பதை உணர்த்தும் பழமொழி

.................................................................................

29. தமிழ், சிங்களப் புத்தாண்டு வரும் மாதம் எது?

.................................................................................

30. விதைகள் பரம்பலடையும் நான்கு முறைகள் எவை?

.................................................................................

பின்வரும் வாக்கியங்களின் உறுப்புக்களை வாக்கியத்தின் கீழ் உள்ள புள்ளிக்கோட்டில் எழுதுக.

31. சிறுவர்கள் மாந்தோப்பில் ஒரு கிளியைப் பிடித்தனர்.

எழுவாய் ........................................... பயனிலை ..............................

32. கிளியின் கழுத்தைக் கயிறு இறுக்கியது.

செயப்படுபொருள் .................................... பயனிலை ............................

33. முதியவர் அங்கு விரைந்து வந்தார்.

எழுவாய் ................................ பயனிலை அடைமொழி.....................

34. சிபிச் சக்கரவர்த்தி புறாவுக்காக தனது உயிரைக் கொடுக்கத் தயாரானார்.

எழுவாய் ................................ பயனிலை ....................................

35. சிறுவர்கள் முதியவரிடம் “பெரியவரே! நாம் இனிமேல் பறவைகளையோ, மிருகங்களையோ, வேறு உயிரினங்களையோ சித்திரவதை செய்யமாட்டோம்” என்றார்கள்.

1. விழிப்புக்குறி ..............................2. மேற்கோட்குறி ..........................

கீழே தரப்படும் இணைமொழிகளைப் பயன்படுத்தி மூன்று வாக்கியங்கள் ஆக்குக.

36. ஆடை அணி :-

.................................................................................

37. பூவும் பிஞ்சும் :-

.................................................................................

38. மூச்சுப் பேச்சு :-

.................................................................................

கீழே தரப்படும் மரபுத்தொடர்களைப் பயன்படுத்தி இரண்டு வாக்கியங்கள் எழுதுக.

39. ஆறப்போடுதல் :-

.................................................................................

40. பம்பரமாட்டுதல் :-

.................................................................................

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கீத் நொயர் மீதான தாக்குதல் குறித்து அநுரவிடம் சிறைச்சாலையில் விசாரணை

ஊடகவியலாளர் கீத் நொயர் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதல் தொடர்பில் முன்னாள் பிரதிப் பொலிஸ்மா அதிபர் அநுர சேனநாயக்கவிடம் விசாரணை நடத்தப்பட்டுள்ளது.

கீத் நொயரை கடத்திச் சென்று மிக மோசமாக தாக்கியமை தொடர்பில் பிரதிப் பொலிஸ்மா அதிபர் அநுர சேனநாயக்கவிடம் குற்றப் புலனாய்வுப் பிரிவினர் கடந்த 22ஆம் திகதி சிறைச்சாலையில்விசாரணை நடத்தியுள்ளனர்.


சுமார் மூன்று மணித்தியாலங்கள் இந்த விசாரணை நடத்தப்பட்டுள்ளது.

இதேவேளை றக்பி வீரர் வசீம் தாஜுடீன் கொலை தொடர்பிலான தகவல்களை மூடி மறைத்த குற்றச்சாட்டின் பேரில் அநுர சேனநாயக்க கடந்த ஒன்றரை ஆண்டுகளாக சிறையில் தடுத்து வைக்கப்பட்டுள்ளார்.

கீத் நொயர் கடத்தப்பட்ட சம்பவம் தொடர்பில் விசாரணை நடத்த அனுமதிக்குமாறு நீதிமன்றிடம் அண்மையில் குற்றப்புலனாய்வுத் திணைக்களம் கோரியிருந்தது.

நீதிமன்றம் இதற்கான அனுமதியை அண்மையில் வழங்கியிருந்தது. இதன்படி அண்மையில் வெலிக்கடை சிறைச்சாலையில் வைத்து அநுர சேனநாயக்கவிடம் விசாரணை நடத்தப்பட்டது.

கீத் நொயர் கடத்தப்பட்ட போது அநுர சேனநாயக்க, கொழும்பு குற்றப் புலனாய்வுப் பிரிவு பொறுப்பதிகாரியாக கடமையாற்றியிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-7)





குருநகர் மக்கள் முன்னேற்ற ஒன்றியத்தால் வறுமைக் கோட்டின் கீழ் வாழ்பவர்களுக்கு வாழ்வாதார உதவிகளும் நோயினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு கொடுப்பனவுகளும் அண்மையில் வழங்கப்பட்டன. குருநகரிலுள்ள 5 கிராம சேவையாளர் பிரிவுகளை உள்ளடக்கி இவ்வுதவிகள் வழங்கப்பட்டன. இவர்களுக்கான நிதியுதவிகள் இத்தாலியில் வாழ்கின்ற உறவுகளால் வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. இந் நிகழ்வில் விருந்தினர்களாக புனித யாகப்பர் ஆலய பங்குத் தந்தை அருட்பணி எம்.வி.ஈ.இரவிச்சந்திரன், உதவிப் பங்குத் தந்தை அருட்பணி சி.அலின் ஆகியோர் கலந்து கொண்டு கொடுப்பனவுகளை வழங்கி வைத்தனர்.

# செல்வா நினைவுப் பேருரை

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் நிறுவுநர் எஸ்.ஜே.வி. செல்வநாயகம் கியூ.ஸியின் 40 ஆவது நினைவு தினத்தை ஒட்டி, இலங்கைத் தமிழரசுக் கட்சி ஏற்பாடு செய்துள்ள 'தந்தை செல்வா நினைவுப் பேருரை' அவரின் நினைவு நாளான இன்று 26 ஆம் திகதி புதன்கிழமை மாலை 5.30 மணிக்கு கொழும்பு, பம்பலப்பிட்டி கதிரேசன் மண்டபத்தில் நடைபெறும்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளரும், யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான எம்.ஏ. சுமந்திரனின் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் சுகாதாரம், போஷாக்கு, சுதேசிய மருத்துவ அமைச்சர் ராஜித சேனாரத்ன 'இலங்கையில் அதிகாரப்பகிர்வு' என்ற தலைப்பில் நினைவுப் பேருரை நிகழ்த்துவார.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும் எதிர்க் கட்சித் தலைவருமான இரா.சம்பந்தன் கௌரவ விருந்தினராகக் கலந்துகொண்டு இந்த நிகழவில் உரையாற்றுவார். (இ-3)

# அரசியலமைப்பு குறித்து சர்வஜன வாக்கெடுப்பு



(கொழும்பு)

புதிய அரசியலமைப்பு தொடர்பில் சர்வஜன வாக்கெடுப்பு நடத்தப்படும் என பிரதியமைச்சர் அஜித் பி. பெரேரா தெரிவித்துள்ளார்.

களுத்துறையில் நேற்று முன்தினம் இடம்பெற்ற நிகழ்வொன்றில் உரையாற்றிய போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

19 முறை மறுசீரமைக்கப்பட்ட இந்த அரசியல் அமைப்புக்கு பதிலாக புதிய அரசியல் அமைப்பொன்றைக் கொண்டு வருவோம்.

நாடாளுமன்றத்தில் மூன்றிலிரண்டு பெரும்பான்மை பலத்துடன், அதை நிறைவேற்றி, சர்வஜன வாக்கெடுப்புடன் நிறைவேற்றி புதிய அரசியல்அமைப்பைக்கொண்டு வருவோம்.

இது வேண்டாம் என்றும் எவராவது கூறுவார்களாயின், அந்தச் சவாலை ஏற்றுக்கொள்ள முடியாமலேயே அவ்வாறு கூறுவதாக பிரதியமைச்சர் அஜித் பி.பெரேரா தெரிவித்தார். (இ-7)

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 1055

Search for people, places and things — Nagendram Home

**நளா**

வாழ்வின் சின்னச்சின்ன சந்தோசங்களை அனுபவிக்க வயதேதும் தடையில்லை...




**குணா**

வீட்ல யாருமே இல்லைன்னு.கொஞ்சம் வெளியே சுத்திட்டு வந்தேன்...




வீட்ல சேர்க்க மாட்டேங்கிறாங்க... நான்தான் அவங்க வெள்ளை நாயின்னு யாராவது சொல்லுங்களேன் பிளீஸ்...

**அனுசன்**

வியர்வை வருதேன்னு குளிச்ச காலம் போய்




**பவன்**

அரை மணி நேரம் வெயில்ல நிப்பாட்டி வைச்சிருந்த வண்டியில ஏறி உட்கார்ந்ததுக்கு இந்த நிலைமையாடா...



ச்சே... என்னா வெயில்டா சாமி...

**நியான்**

ஷ்ஷ்ஷ்ஷப்பா .. என்னா வெயிலு என்னா வெயிலு இப்பவே கண்ண கட்டுதே...




நாங்களும் இனி இப்படித்தான் மாறணும் போல..

**கலா**




யாழ். மக்களின் தற்போதைய நிலை

நீங்கள் பார்த்த ஃபேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குப்பை பிரச்சினைக்குத் தீர்வாக புதிய இயந்திரம் கண்டுபிடிப்பு

## அங்கீகாரமளித்தது அரசு



(கொழும்பு)

இலங்கையில் ஏற்பட்டுள்ள குப்பை முகாமைத்துவ பிரச்சினைக்கு தீர்வாக இளைஞர் ஒருவர் புதிய இயந்திரம் ஒன்றை தயாரித்துள்ளார்.

குறித்த இயந்திரத்தை மேலும் அபிவிருத்தி செய்வது தொடர்பில் அரசாங்கம் கவனம் செலுத்தியுள்ளது.

திண்மக் கழிவுகளை இயந்திர உதவியுடன் துண்டாக்கி ஒதுக்குவதற்காக புதிய இயந்திரம் ஒன்றை கம்பளை, தொழுவ அம்பகும்புர பிரதேசத்திலுள்ள இளைஞர் ஒருவர் கண்டு பிடித்துள்ளார்.

இந்நிலையில் அமைச்சர் சுசில் பிரேமஜயந்த மற்றும் மொரட்டுவை பல்கலைக்கழக பேராசிரியர்கள் உட்பட நிபுணர்கள்குழுவொன்று குறித்த இளைஞரின் வீட்டிற்குச் சென்று அவரது நிர்மாணிப்பினை ஆய்வு செய்துள்ளனர்.

இந்த புதிய நிர்மாணிப்பினை முழுமைப்படுத்துவதற்காக அனைத்து வசதிகளையும் ஏற்படுத்தி கொடுப்பதற்கு அமைச்சர் கடிதம் மூலம் உறுதியளித்துள்ளார்.

நாட்டின் பிரச்சினைகளுக்கு தீர்வு வழங்குவதற்காக புதிய கண்டு பிடிப்புகளை உருவாக்கும் நபர்களுக்கு மதிப்பளித்து அவர்களின் தயாரிப்புகளுக்கு உதவும் நடவடிக்கைகளை தமது அமைச்சு தொடர்ந்து முன்னெடுக்கும் என அமைச்சர் தெரிவித்தார்.

இந்த தயாரிப்பினை எதிர்வரும் காலங்களின் நாட்டின் பிரச்சினைக்கு தீர்வாக பயன்படுத்திக் கொள்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என அமைச்சர் இதன்போது கூறியுள்ளார்.

இந்த இயந்திரத்தை அபிவிருத்தி செய்வதற்கு அவசியமான தொழில்நுட்ப மற்றும் நிதி உதவிகளை வழங்குமாறு பொறியியலாளர்களுக்கு அமைச்சர் பணிப்புரை வழங்கியுள்ளார். (இ-7)

# செலவினங்கள் அதிகரிப்பால் மூடப்படவுள்ளது துறைமுகம்

அம்பாறை, ஒலுவில் துறைமுகத்தில் பராமரிப்பு செலவுகள் அதிகரித்து வரும் நிலையில் அதனை மூடுவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதாக அமைச்சர் மகிந்த அமரவீர தெரிவித்துள்ளார்.

குறித்த துறைமுகத்தின் செலவினங்களை குறைப்பதற்கு போதியளவு நிதியுதவி கிடைக்கப் பெறாமையின் காரணமாக அதனை மூடுவதற்கு நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

இது குறித்து தொடர்ந்தும் கருத்து தெரிவித்த அவர், இந்த துறைமுகத்தை அமைப்பதற்கு முன்னர் சரியான முறையில் சுற்றுச் சூழல் மதிப்பீட்டு பணிகள் இடம்பெறவில்லை.

குறிப்பாக 250 இற்கும்மேற்பட்ட படகுகள் இந்த துறைமுகத்தில் நிறுத்தி வைக்க முடியும் என தெரிவிக்கப்பட்டிருந்த போதிலும், படகுகள் ஆபத்தான நிலையில்துறைமுகங்களுக்கு வெளியிலேயே நங்கூரமிடப்பட்டுள்ளன.

இதன் காரணமாக ஒலுவில் துறைமுகத்தின் பராமரிப்பு செலவுகள் அதிகரித்து வரும் நிலையில் ஒலுவில் துறைமுகத் தினை மூடவுள்ளதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார். (இ-7)

# ஒரே தடவையில் நட்டஈடு

## ஜனாதிபதி பணிப்புரை

மீதொட்டமுல்ல அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்காக மூன்று மாதங்களுக்காகவழங்கப்படவிருந்த ஒரு இலட்சத்து 50 ஆயிரும் ரூபாய் நட்டஈட்டுத் தொகையை ஒரே தடவையில் வழங்குமாறு சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன பணிப்புரை விடுத்துள்ளார்.

கொழும்பு மற்றும் கொழும்பை அண்மித்த பகுதிகளில் குப்பை அகற்றப்படுவது தொடர்பான சந்திப்பொன்று ஜனாதிபதி தலைமையில்நேற்று முன்தினம் இடம் பெற்ற போதே அவர் இந்தப்பணிப்புரையை விடுத்துள்ளார்.

மீதொட்டமுல்ல குப்பைமேடு சரிந்த அனர்த்தத்தில் 98 வீடுகள் சேதமடைந்தன. அந்த வீடுகளில் வசித்த குடும்பங்களுக்கு மாதமொன்றுக்கு 50 ஆயிரம் ரூபா அடிப்படையில் மூன்று மாதங்களுக்கு ஒரு இலட்சத்து 50 ஆயிரம் ரூபா நட்டஈட்டை வழங்குவதாக அரசாங்கம் அறிவித்திருந்தது.

இந்த நிலையில், அந்தத் தொகையை ஒரே தடவையில் வழங்குமாறு ஜனாதி பதி அறிவித்துள்ளார் (இ-7)


# Yarl Beauty & Language's Skills College

YBLSC



மகளிருக்கான பயிற்சிகள் ஆரம்பமாகின்றன!

☛ அழகுக்கலை

☛ கேக் ஐசிங்

☛ தையல்

சனி, ஞாயிறு பிரிவுகள் 06.05.2017 அன்று 10.00 மணிக்கு
கிழமை நாள் பிரிவுகள் 08.05.2017 அன்று 10.00 மணிக்கு

#சர்வதேச ரீதியில் ஏற்றுக்கொள்ளப்பட்டNVQ பாடத்திட்டம்.
# சர்வதேச அங்கிகாரம் பெற்ற சான்றிதழ்கள் வழங்கப்படும்.



தமிழ் விளக்கத்துடன் A1 சான்றிதழுக்கு ஏற்றவாறு ஜேர்மன், சுவிஸ் நாடுகளுக்கான "Deutsch" மொழி வகுப்புகள்.

மேலதிக விபரங்களுக்கும் பதிவுகளுக்கும் அலுவலக நேரத்தில் வருகைதரவும்.

இல.17, 3ம் ஒழுங்கை, மின்சாரநிலைய வீதி, யாழ்ப்பாணம். (ராசி கலெக்சனுக்கு அருகில் உள்ள ஒழுங்கை)



# கல்யாணமாலை

## சர்வதேச திருமண சேவை

### இவர்களுக்கு மணமகள் தேவை

பிறப்பு: 1984 இந்து
நட்சத்திரம்: சித்திரை
கி.பா: 69 செவ் 1 இல்
உயரம்: 5'4"
தகைமை/தொழில்:BSc/பொறியியலாளர் சிங்கப்பூர்
தொ.இ: B/7239

பிறப்பு: 1981 இந்து
நட்சத்திரம்: கார்த்திகை
கி.பா: 22
உயரம்: 5'6"
தகைமை/தொழில்:QSலண்டன் PR
தொ.இ: B/7240

பிறப்பு: 1981 இந்து
நட்சத்திரம்: மகம்
கி.பா: சூரிசெவ் 3 இல்
தகைமை/தொழில்A/L/சொந்தத்தொழில்
தொ.இ: B/7243

பிறப்பு: 1981 இந்து
நட்சத்திரம்:அச்சுவினி
கி.பா: 15
உயரம்: 5'7"
தகைமை/தொழில்A/L/தனியார் தொழில்
தொ.இ: B/7244

### இவர்களுக்கு மணமகன் தேவை

பிறப்பு: 1987 இந்து
நட்சத்திரம்:பரணி
கி.பா: 23 செவ் 2 இல்
உயரம்: 5'2"
தகைமை/தொழில்: MSc/பொறியியலாளர் அவுஸ்திரேலியா
தொ.இ: G/5789

பிறப்பு: 1988 இந்து
நட்சத்திரம்:பூராடம்
கி.பா: 38 செவ் 7 இல்
தகைமை/தொழில்: A/L
தொ.இ: G/5791

பிறப்பு: 1983 இந்து
நட்சத்திரம்:உத்தரம்
கி.பா: 17 செவ் 7 இல்
உயரம்: 5'
தகைமை/தொழில்: A/L
தொ.இ: G/5802

பிறப்பு: 1975 இந்து
நட்சத்திரம்: கார்த்திகை
கி.பா: 28
உயரம்: 5'5"
தகைமை/தொழில்: A/L/கணக்காளர்
தொ.இ: G/5803

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக் கட்டணம் 1000 ரூபாவுடன் தொலைத்தொடர்பு சேவைக் கட்டணமாக ரூபா 300 அறவிடப்படும்.


### இலங்கையில் மீண்டும் மலேரியா அபாயம் கட்டுநாயக்கவில் தீவிர பரிசோதனை

இலங்கையில் மீண்டும் மலேரியா நோய் பரவும் அபாயம் உள்ளதாக மலேரியா நோய்தடுப்புப்பிரிவின் பணிப்பாளர் ஹேமந்த ஹேரத் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

இலங்கையில்மலேரியா முழுமையாக இல்லாதொழிக்கப்பட்டுள்ளபோதும், வெளிநாட்டிலிருந்து இலங்கைக்கு வருபவர்களால்அந்த நோய் பரவும் அச்சுறுத்தல் உள்ளதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

எனவே, இலங்கைக்கு வரும் வெளிநாட்டவர்கள், மலேரியா தொற்றுக்கு உள்ளானவர்களா? என்பதைக் கண்டறிய, கட்டுநாயக்க விமான நிலையத்தில் சுகாதார மருத்துவ காரியாலயம் ஒன்று நிறுவப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

இந்த சுகாதார மருத்துவ காரியாலயம் ஊடாக, இலங்கைக்கு வரும் வெளிநாட்டவர்களை சோதனைக்கு உட்படுத்த நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுவதாக மலேரியா நோய் தடுப்புப் பிரிவின் பணிப்பாளர் ஹேமந்த ஹேரத் மேலும் தெரிவித்துள்ளார். (இ-7)

# சட்டவிரோத மண் அகழ்வு ,காட்டு மரங்களை அழிப்பதை நிறுத்தக்கோரி பாரிய ஆர்ப்பாட்டம்



சட்டவிரோத மண் அகழ்வு மற்றும் காட்டு மரங்களை அழிப்பதை நிறுத்தக்கோரி கரடியனாறு பிரதேசத்தில் உள்ள இளுபட்டிசேனை பகுதி மக்களால்நேற்றுக்காலை பாரிய ஆர்ப்பாட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டுள்ளது.

இந்த ஆர்ப்பாட்டத்தில் பல சுலோகங்களை தாங்கியவாறு மக்கள்கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது. (இ-7)


# நல்லூர் ஸ்ரீதேவி வில்லிசை

## கலைமாமணி

## Dr.S.S.சர்மா குருஜீ

## 077 784 1558

(8168)


# யா/வேலாயுதம் மகா வித்தியாலயம் பழைய மாணவர் சங்க வருடாந்த பொதுக்கூட்டம்

திரு.க.கதிரமலை
இடம்:- பாடசாலை மண்டபம்
காலம்:- 2017.04.30 (ஞாயிற்றுக் கிழமை)
முற்பகல் 09.30 மணி

இவ்வருட நிர்வாகத் தெரிவுடன் பாடசாலையின் அபிவிருத்தி தொடர்பாகவும் கலந்துரையாடப்படவுள்ளமையால் அனைத்து பழைய மாணவர்களையும் தவறாது கலந்து கொள்ளுமாறும் ஆக்கபூர்வமான ஆலோசனைகளை வழங்கி ஒத்துழைப்பு வழங்குமாறும் தயவுடன் கேட்டுக் கொள்கின்றோம்.

நன்றி

வேலாயுதம் மகா வித்தியாலயம்
பழைய மாணவர் சங்கம்,
பருத்தித்துறை.

வீ.கணேசலிங்கம்
செயலாளர்.

(8259)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எந்தவொரு துறைமுகத்தையும் நாம் விற்கமாட்டோம்- ஹாசிம்

இந்திய பிரதமர் நரேந்திர மோடியின் விஜயத்தின் போது திருகோணமலை எண்ணெய் குதங்கள் தொடர்பான எந்தவொரு பேச்சுவார்த்தைகளிலும் ஈடுபடமாட்டார். அத்துடன் எமது நாட்டின் எந்தவொரு துறைமுகத் தையும் நாம் விற்கமாட்டோம். தற்போது திருகோண மலையின் 14 எண்ணெய் குதங்கள் இந்திய நிறுவனத்திற்கு குத்தகைக்கும் ஏனைய 10 குதங்கள் இலங்கைக்கும் உரித்தாகின்றது. மீதமுள்ள 74 குதங்கள் பகிர்ந்து கொள்வதற்கான ஒப்பந்தமே கைச்சாத்திடப்படவுள்ளது. மாறாக முழு உரித்துரிமையும் இந்திய நிறுவனத்திற்கு வழங்க போவதில்லை என அரச தொழில் முயற்சிகள் அமைச்சர் கபீர் ஹாஷிம் தெரிவித்தார்.

இந்த விடயம் தொடர்பாக மக்கள் மத்தியில் தவறான கருத்துகள் பகிரப்பட்டு வருகின்றன. இந்த தகவல்களில் எந்தவொரு உண்மையும் கிடையாது. முன்னைய ஆட்சியின் போது சீன தலைவர்கள் வருகை தந்த போது எமது தேசிய கொடியை உயர்த்த முடியவில்லை, எனினும் தற்போது அப்படியல்ல. எந்தவொரு நாட்டிற்காகவும் நாம் எமது இறையாண்மையை விட்டுக்கொடுக்கமாட்டோம் என்றும் அவர் தெரிவித்தார்.

கொழும்பு உலக வர்த்தக மையத்திலுள்ள அரச தொழில் முயற்சிகள் அமைச்சில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டின் போது ஊடகவியலாளர் எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கும் போதே அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார். (இ-7)



(கேலிச்சித்திரம்)

# இலங். கடற்படைத் தளபதி சீசெல்ஸ் தூதுவர் சந்திப்பு



இலங்கைக்கான சீசெல்ஸ் குடியரசின் தூதுவர் மற்றும் இலங்கைக் கடற்படை தளபதி ஆகியோருக்கிடையிலான மரியாதை நிமித்த மான சந்திப்பொன்று இடம் பெற்றுள்ளது.

இச் சந்திப்பு இலங்கை கடற்படை தலைமையகத்தில் நேற்று முன்தினம் இடம் பெற்றது.

இலங்கைக்கான சீசெல்ஸ் தூதுவர் டேவிட் க்ளுட்பியர் மற்றும் இலங்கைக் கடற்படைத் தளபதி வைஸ் அட்மிரல் ரவீந்திர விஜேகுணரத்ன ஆகியோருக்கிடையிலான மரியாதை நிமித்தமான சந்திப்பில், பல விடயங்கள் ஆராயப்பட்டதாகவும் இரு தரப்பு பரஸ்பர நடவடிக்கைகள் தொடர்பில் கலந்துரையாடப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் இருவரும் மரியாதை நிமித்தமான சந்திப்பின் நிறைவில் நினைவுப் பரிசுப்பொருட்களை பரிமாறிக்கொண்டமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

## ஹெரோயினுடன் பாக்.பிரஜை கைது

ஹெரோயின் போதைப் பொருளை கடத்திவந்த பாகிஸ்தான் பிரஜையொருவர் கட்டுநாயக்க விமான நிலையத்தில் வைத்து விமான நிலைய பொலிஸ் போதைப் பொருள் தடுப்பு பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

டுபாயில் இருந்து, விமானத்தின் மூலம் இலங்கைக்கு வந்த 40 வயதுடைய பாகிஸ்தான் பிரஜையே இவ் வாறு கைதுசெய்யப்பட்டவரா வார்.

708 கிராம் ஹெரோயின் போதைப்பொருளை மிகவும் சூட்சுமமான முறையில் மறைத்து வைத்துக்கொண்டுவரும் போதே நேற்று அதிகாலை 12.45 மணியளவில் விமான நிலைய பொலிஸ் போதைப் பொருள் தடுப்பு பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

இவ்வாறு கைப்பற்றப் பட்ட ஹெரோயின் போதைப் பொருளின் பெறுமதி 7 மில்லியன் ரூபாவென தெரிவிக்கும் விமான நிலைய பொலிஸ் போதைப்பொருள் தடுப்பு பிரிவினர் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (இ-7)

# இலங். தமிழர் ஆசிரியர் சங்கம் முழு அடைப்புக்கு பூரண ஆதரவு

(கொழும்பு)

நாளைவியாழக்கிழமை வடக்கு, கிழக்கு மாகாணங்களில் ஒழுங்கமைக்கப்பட்டுள்ள முழு அடைப்புக்கு இலங்கைத்தமிழர் ஆசிரியர் சங்கம் தனது பூரண ஆதரவைத் தெரிவித்து அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது.

வடக்கு, கிழக்கு மாகாணங்கள் இன்னும் வழமைக்குத் திரும்பவில்லை. வட கிழக்கில் வாழ்கின்ற மக்களில் இயல்புநிலையில் மாற்றங்கள் எதுவும் ஏற்படவில்லை. மாற்றங்கள் ஏற்படுவதற்காக பல் வேறு விட்டுக்கொடுப்புகளையும், தியாகங்களையும் எமது இனம் சார்ந்த கட்சிகளும், மக்களும் செய்தபின்னரும் எதுவுமே நடைபெறவில்லை.

ஆயுதப்போராட்டம் அறவழிப்போராட்டமாகமாறிஅனைத்துத் தரப்பினரும் வீதியில் நாட்கணக்காக, மாதக் கணக்காக போராடும் நிலை உருவாகியுள்ளது. எதையும் யாரும் கண்டுகொள்வதாக இல்லை.

இத்தகைய நிலையில் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் உள்ள அனைத்துத் தரப்பினரும் ஒன்று சேர்ந்து முன்னெடுக்கும் இத்தகைய அறவழிப் போராட்டம் வெற்றியளிக்க வேண்டும்.

அதற்காக வடக்கு,கிழக்கில் வாழுகின்ற அனைத்து மக்களும் விசேடமாக கல்விப்புலம் சார்ந்த அனைவரும் ஒன்று சேர்ந்து நாளை வியாக்கிழமை நடைபெறும் முழு அடைப்புக்கு பூரண ஆதரவை வழங்குவதோடு இது போன்ற முனைப்புக்களைத்தொடர்ந் தும்எடுக்க வேண்டும் எனவும் கேட்டுக கொள் கின்றோம் என அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-3)

## வசந்தசேகரம் இடமாற்றம்



பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபையின் யாழ் மாவட்ட இணைப்பதிகாரி த.வசந்தசேகரம் திருகோணமலை மாவட்டத்துக்கு நேற்றைய தினம் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

இவர் கடந்த 3 வருடங்களாக யாழ்.மாவட்ட இணைப் பதிகாரியாக கடமையாற்றி வந்தார். இவருடைய வெற்றிடத்துக்கு யாரும் நியமிக்கப் படவில்லை என்பதும் குறிப் பிடத்தக்கது. (இ-9)

# நிதியமைச்சின் அதிகாரிகள் 125 பேர் அமெரிக்காவில்

அமெரிக்காவின் வோஷிங்டன் நருகரில் நடைபெறும் பொருளாதார கூட்டத்தில் கலந்துகொள்வதற்கு நிதி அமைச்சிலிருந்து அமைச்சின் அதிகாரிகள் 125 பேர் அமெரிக்கா சென்றுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இதற்கு முன்னர் நடைபெற்ற மாநாட்டில் பிரதி நிதியமைச்சரும் அதிகாரி யொருவருமே கலந்து கொண்டுள்ளதாக குறிப்பிடப்படுகின்றது.

இந்த மாநாட்டில் இம் முறை 125 பேர் கலந்து கொண்டுள்ளமை விசனத்துக் குரிய ஒன்று எனவும், இது குறித்து நிதி அமைச்சர் விசாரணை நடத்த வேண்டும் எனவும் அரசாங்கத்தின் உயர் அதிகாரியொருவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

இந்த பயணத்தின் போது தேவையான உணவு, தங்குமிடம், போக்குவரத்து உட்பட சகல வசதிகளும் அரசாங்கத்தினுடையது எனவும் மூன்று நாட்கள் நடைபெறும் இக்கூட்டத்துக்காக ஒருவார காலம் அந்த அதிகாரிகள் அமெரிக்காவில் தங்கியிருக்கப் போவதாகவும் கூறப்பட்டுள்ளது (இ-7)

## 'யுகதர்மம்' அறிமுக விழா

(யாழ்ப்பாணம்)

யாழ். பொது நூலக வாசகர் வட்டத்தின் யுகதர்மம் நாடகமும் பதிவுகளும் எனும் அறிமுக நிகழ்வு எதிர்வரும் 29 ஆம் திகதி சனிக்கிழமை பிற்பகல் 3.45 மணியளவில் நூலகக் கேட்போர் கூடத்தில் அ.யேசுராசா தலைமையில் இடம்பெறவுள்ளது. (இ)

# பேருந்து-லொறி விபத்து; 15 பேர் வைத்தியசாலையில்



(கொழும்பு)

காலி, பெந்தோட்டைப் பகுதியில் நேற்றுக்காலை இடம்பெற்ற விபத்தில் 15 பேர் காயமடைந்து பெந்தோட்டை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

பேருந்தும் லொறியொன்றும் காலி - கொழும்பு பிரதான வீதியில் நேற்று அதிகாலை நேருக்கு நேர் மோதியதால் இந்த விபத்து ஏற்பட்டுள்ளது.

விபத்தில் லொறியின் சாரதி கடும் காயங்களுக்கு உள்ளானார். (இ-7)

# ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியின் மேதினக் கூட்டத்தில் பங்கேற்க தமிழ், முஸ்லிம் கட்சிகளுக்கு அழைப்பு

(கொழும்பு)

ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியின் மேதின கூட்டத்தில் பங்கேற்குமாறு தமிழ், முஸ்லிம் கட்சிகளுக்கு அழைப்பு விடுக்கப்படும் என்று இராஜாங்க அமைச்சர் லக்ஷ்மன் யாப்பா அபேவர்த்தன தெரிவித்துள்ளார்.

பொருளாதார அரசியல் நிர்வாக துறைகளில் மாற்றங்களை மேற்கொள்வதற்காக எதிர்வரும் மே மாதத்தில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன கடுமையான தீர்மானங்களை எடுப்பார் என்று ராஜாங்க அமைச்சர் லக்ஷ்மன் யாப்பா அபேவர்த்தன தெரிவித்துள்ளார்.

கண்டி கட்டம்பே மைதானத்தில் இடம்பெறும் மேதின கூட்டத்தில் பங்கேற்குமாறு அனைத்து மக்கள் பிரதிநிதிகளுக்கும் எழுத்து மூலம் அறிவிக்க கட்சியின் மத்திய குழுக்கூட்டத்தில் நேற்று முன்தினம் தீர்மானிக்கப்பட்டது.

கட்சி உறுப்பினர்கள் ஏனைய மேதினக் கூட்டங்களில் பங்கேற்க வேண்டிய அவசியம் கிடையாதென்று அமைச்சர் வலியுறுத்தினார்.

நாட்டின் நாலா பாகங்களிலிருந்தும் தோட்டப் பகுதிகளிலிருந்தும் அதிகளவானோர் இதில் பங்கேற்கவுள்ளனர் என்று அவர் தெரிவித்தார்.

கூட்டுறவு துறை மீது விதிக்கப்பட்டுள்ள வரியை நீக்குதல், தனியார் துறை ஊழியர்களின் வயதெல்லையை 60 வரை அதிகரித்தல், மான்பவர் சேவை தொடர்பான நெருக்கடி என்பனவற்றை உள்ளடக்கிய பிரே [illegible] (இ-7)

# அமைச்சரின் வாகனம் மோதியதில் கர்ப்பிணி உட்பட நால்வர் படுகாயம்

கெப் ரக வாகனமொன்று, மோட்டார் சைக்கிளொன்றுடன் மோதியதில், கர்ப்பிணி உட்பட ஒரே குடும்பத்தைச் சேர்ந்த நால்வர் காயங்களுக்குள்ளாகியுள்ளனரென பொலிஸார் தெரிவித்தனர். இராஜாங்க அமைச்சர் ரங்கே பண்டாரவின் மகன் உள்ளிட்ட குழுவினர் பயணித்த கெப் ரக வாகனமே, குறித்த குடும்பத்தார் பயணித்த மோட்டார்சைக்கிளை மோதித் தள்ளியுள்ளதாக, பொலிஸ் [illegible] தெரிய [illegible] ஆனமடுவ மஹஉஸ்வெவ ஏரிக்கருகில் ஒரு கிலோமீற்றர் தூரத் திலுள்ள இகினிமிபிட்டிய பலுகொல்ல வீதியில், நேற்று முன்தினம் திங்கட்கிழமை இவ்விபத்து இடம்பெற்றுள்ளதாக, பொலிஸார் தெரிவித்தனர். இவ் விபத்தில் தந்தை, 6 மாதங்களையுடைய கர்ப்பிணித்தாய் மற்றும் பிள்ளைகள் இருவர் உள்ளிட்ட நால்வரையும் ஆனமடுவ வைத்தியசாலையில் அனுமதித்த பின்னர், இரு சிறுவர்களை, மேலதிக சிகிச்சைகளுக்காக குருநாகல் வைத்தியசாலையில் அனுமதித்துள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர். 7 வயதுடைய ஹிருணிகா சத்சர மற்றும் 4 வயதுடைய கயந்த இந்துனில் என்ற சிறுவர்களே, படுகாயங்களுக்குள்ளாகியுள்ளனர்.

இவ்விபத்து தொடர்பில் முன்னாள் பிரதேச சபை உறுப்பினர் அனுஷ்க பிரிய தர்சன என்பவர் பொலிஸில் சரணடைந்துள்ளார். மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (இ-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இளம் பாராளுமன்ற உறுப்பினர்களின் பிராந்தியக் கூட்டம் அங்குரார்ப்பணம்




ஆசிய- பசுபிக் வலய இளம் பாராளுமன்ற உறுப்பினர்களின் பிராந்திய கூட்டம் நேற்றுக் காலை ஆரம்பமானது.

அனைத்துப் பாராளுமன்றங் களினதும் ஒன்றியம். இலங்கை பாராளுமன்றம் மற்றும் ஐக்கிய நாடுகள் அபிவிருத்தித் திட்டம் ஆகியன இணைந்து இந்த கூட்டத் தொடரை ஏற்பாடு செய்துள்ளன.

இரண்டு நாட்கள் இடம் பெற வுள்ள இந்த நிகழ்வின் அங்கு ரார்ப்பண நிகழ்வு நேற்று காலை கொழும்பு ஹில்டன் ஹோட்டலில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க. சபாநாயகர் கரு ஜயசூரிய. அனைத்துப் பாராளு மன்றங்களினதும் ஒன்றிய தலை வர் சபர் சவுத்ரி மற்றும் ஐக்கிய நாடுகள் அபிவிருத்தித் திட்ட இல ங்கை வதிவிடப் பிரதிநிதி உனா மேக் கவ்லே ஆகியோர் கலந்து கொண்டனர். (இ-7)

# ஜனாதிபதி தலைமையில் நூல் வெளியீட்டு விழா



(கொழும்பு)

சிரேஷ்ட சமையற் கலை நிபு ணர் தேசபந்து கலாநிதி பப்ளிஸ் சில்வாவினால் எழுதப்பட்ட மகாசூ ப்வபங்ஸ என்ற சமையற்கலை நூல் வெளியீட்டு விழா ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் தலை மையில் நேற்று முன்தினம் பிற் பகல் கொழும்பு பண்டாரநா யக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது.

கலாநிதி பப்ளிஸ் சில்வா 40 ஆண்டுகளாக மேற்கொண்ட ஆரா ய்ச்சி மற்றும் ஆய்வுகளின் பெறு பேறாக உள்நாட்டு உணவின் சுவை யும் மருத்துவ குணமும் இந்த நூலில் வெளிப்படுத்தப்பட்டு ள்ளது.

ஆயிரம் பக்கங்களைக் கொண்ட இந்த நூலின் மூலம் நாட்டிற் கேயுரிய 1450 உணவுத்தாவரங்கள். பழங்கள். கிழங்குகள். மரக்கறிகள் அறிமுகப்படுத்தப்பட்டிருப்பது சிறப்ப ம்சமாகும். நூலின் முதற்பிரதி கலாநிதி பப்ளிஸ் சில்வாவினால் ஜனாதிபதியிடம் கையளிக்கப் பட்டது. (இ-7)

# மகிந்தவுக்கு அழைப்பு பங்கேற்காவிட்டால் கடும் நடவடிக்கையாம்



(கொழும்பு)

கண்டி மே தினக் கூட்டத்தில் பங்கேற்காத ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் உறுப்பினர்களுக்கு எதிராக கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும் என கட்சியின் பொதுச் செயலாளர் துமிந்த திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

கண்டி கட்டம்பே மைதானத்தில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் மே தினக் கூட்டம் நடத்தப்படவுள்ளது.

இந்தக் கூட்டத்தில் பங்கேற்காத கட்சி உறுப்பினர்கள் தண்டிக்கப்ப டுவர் என துமிந்த திஸாநாயக்க கொழும்பு ஊடகமொன்றுக்குத் தெரிவித்துள்ளார். கூட்டத்தில் பங் கேற்காத சகல உறுப்பினர்களும் தராதரம் பாராது தண்டிக்கப்படுவர்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி இம்முறை இரண்டு மே தினக் கூட்டங்களை நடத்தவில்லை. சுதந்திரக் கட்சி கண்டி கட்டம்பே மைதானத்தில் மட்டுமே மே தினக் கூட்டத்தை நடத்துகின்றது.

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ உள்ளிட்ட அனைத்து கட்சியின் உறுப்பினர்களும் மே தினக் கூட்டத்தில் பங்கேற்க வேண்டும்.

ஜனாதிபதி மைத்திரிபால சிறி சேன தலைமையில் அண்மையில் கட்சியின் மத்திய செயற்குழு நடத் திய கூட்டத்தில் இந்த தீர்மானம் எடுக்கப்பட்டது.

கட்சியின் மத்திய செயற்குழு எடுத்த தீர்மானத்தை எவரும் உதாசீனம் செய்துவிட முடியாது.

எவரேனும் கட்சியின் தீர்மா னத்தை புறந்தள்ளி வேறு கூட்ட மொன்றில் பங்கேற்றால் அவர்க ளுக்கு எதிராக கடுமையான நடவ டிக்கை எடுப்பதனைத் தவிர வேறு வழி எதுவும் கிடையாது என துமிந்த திஸாநாயக்க மேலும் தெரிவித்துள்ளார். (இ-7)

# கள்ளின் விலையைக் குறைக்க அரசிற்கு அமைச்சர் யோசனை



(கொழும்பு)

"கள்" வகை மதுபானத்துக்கான கட்டணத்தைக் குறைக்குமாறு அமைச்சர் டபிள்யூ. டி.ஜே. செனவிரத்ன அரசாங்கத்திடம் வேண்டு கோள் விடுத்துள்ளார்.

இரத்தினபுரியில் நேற்று முன் தினம் நடைபெற்ற மாவட்ட இணைப் பாளர்களுக்கான கூட்டத்தில். சமூக நல மற்றும் தொழில் துறை அமைச்சர் இந்த யோசனையை முன்வைத்துள்ளார்.

அரசாங்கத்துக்கு வருமானம் குறைந்தாலும். சமூகத்தில் அதி கமானோர் பயன்படுத்தும் இந்த "கள்" வகை மதுபானத்துக்கான விலையைக் குறைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் அமை ச்சர் கூறியுள்ளார்.

ஸ்ரீல.சு.கயின் அமைச் சரி னால் முன்வைக்கப்பட்ட இந்த யோசனைக்கு. இரத்தினபுரி மாவ ட்ட ஐ.தே.கயின் பாராளுமன்ற உறுப்பினர் ஏ.ஏ. விஜேதுங்க மற்றும் அக்கட்சியின் மாகாண சபை உறுப்பினர் சிறிபால கிரிஎல்ல ஆகியோரும் ஆதரவாக கருத்துத் தெரிவித்துள்ளனர். (இ-7)

# வெசாக் தினத்தை பயன்படுத்தி சர்வதேசத்திற்கு சிறப்பு செய்தி

## பிரதமர் ரணில் கூறுகிறார்



சர்வதேச சமூகத்திற்கு சிறப்பு செய்தியை வழங்க இம்முறை வெசாக் நிகழ்வு வாய்ப்பாக அமை ந்துள்ளது என்று பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

கொழும்பு மாநகர எல்லைப் பகுதியில் அமைந்துள்ள 100 விகா ரைகளுக்கு50 ஆயிரம் ரூபா வீதம் நிதியுதவிகளை வழங்கும் நிகழ்வு பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தலைமையில் நேற்று முன்தினம் அலரி மாளிகையில் இடம்பெற்றது. இதில் உரையாற்றுகையிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

கொழும்பு மாநகர சபை வரு டாந்தம் இந்த நிகழ்வை ஒழுங்கு செய்கிறது.

வெசாக் நிக்ழ்விற்கு அமை வாக இது ஒழுங்கு செய் யப்பட்டி ருந்தது. மகா சங்கத்தினர் உட்பட பல பிரமுகர்களும் இதில் கலந்து கொண்டனர். (இ-7)

# வடக்கு- கிழக்கு திரையரங்குகளில் தந்தை செல்வாவின் இறுதி ஊர்வலம்



தந்தை செல்வாவின் 40 ஆவது ஆண்டு நினைவு தினத்தை முன் னிட்டு அவரது இறுதி ஊர்வலம் வடக்கு-கிழக்கிலுள்ள எஸ்.ரி.ஆர் பிலிம்ஸ் நிறுவனத்தினருடைய 4 திரையரங்குகளில் திரையிடப் படவுள்ளது.

இன்று 26 ஆம் திகதி புதன் கிழமை யாழ்ப்பாணம் ராஜா 1. 2. வவுனியா வசந்தி. திருகோண மலை சரஸ்வதி. மட்டக்களப்பு சாந்தி ஆகிய திரையரங்குகளின் படக்காட்சிகளின் போது காண்பிக் கப்படும் என எஸ்.ரி.ஆர். பிலிம்ஸ் [illegible] தெரிவித்துள்ளார். (இ-3)

# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல் வேலி | நெல்லியடி | கொடிகாமம் | சுன்னாகம் | சாவகச்சேரி | கிளிநொச்சி | மருதனார் மடம் |
|---|---|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 60 | 50 | 50 | 60 | 50 | 80 | 60 |
| உருளைக்கிழங்கு | 100 | 120 | 90 | 120 | 110 | 120 | 100 |
| பச்சைமிளகாய் | 100 | 100 | 80 | 100 | 120 | 120 | 120 |
| தக்காளி | 100 | 100 | 60 | 100 | 90 | 120 | 100 |
| மரவள்ளிக்கிழங்கு | 70 | 80 | 50 | 70 | 80 | 80 | 60 |
| கோவா | 120 | 160 | 80 | 100 | 100 | 120 | 100 |
| கரட் | 130 | 140 | 80 | 120 | 110 | 200 | 120 |
| பூசணி | 50 | 60 | 30 | 50 | 40 | 60 | 60 |
| புடோல் | 60 | 100 | 50 | 80 | 70 | 80 | 80 |
| வாழைக்காய் | 50 | 60 | 40 | 50 | 30 | 60 | 50 |
| சின்ன வெங்காயம் | 200 | 200 | 140 | 200 | 180 | 200 | 200 |
| பெரிய வெங்காயம் | 100 | 120 | 90 | 100 | 100 | 100 | 120 |
| பாகற்காய் | 120 | 200 | 60 | 160 | 90 | 120 | 160 |
| வெண்டிக்காய் | 100 | 100 | 50 | 80 | 80 | 120 | 80 |
| கருணைக்கிழங்கு | 50 | 100 | — | 100 | — | 100 | 80 |
| பயற்றங்காய் | 50 | 100 | 50 | 60 | 50 | 50 | 70 |
| லீக்ஸ் | 60 | 100 | 60 | 120 | 80 | 100 | 80 |
| பீற்றூட் | 120 | 100 | 100 | 160 | 140 | 160 | 140 |
| கறிமிளகாய் | 100 | 200 | 90 | 200 | 140 | 160 | 400 |
| முருங்கைக்காய் | 200 | 200 | 150 | 200 | 150 | 300 | 180 |
| போஞ்சி | 160 | 200 | 100 | 160 | 140 | 160 | 60 |
| கத்தரிதம்பள்ள | 40 | 30 | 30 | 60 | — | 50 | 15 |
| கீரை - 1பிடி | 20 | 20 | 15 | 30 | 30 | 30 | 80 |
| தேசிக்காய் | 50 | 30 | 40 | 80 | 50 | 50 | 70 |
| தேங்காய் (ஒன்று) | 70 | 80 | 60 | 70 | 60 | 50-60 | 70 |
| இராசவள்ளி | 200 | 100 | 150 | 200 | 200 | 150 | 200 |
| வெங்காயப்பூ | 250 | — | — | — | — | — | 280 |
| முள்ளங்கி | 60 | 120 | — | 60 | 60 | 80 | 70 |
| பொன்னாங்காணி | 30 | 60 | 10 | 30 | 30 | 40 | 25 |
| வல்லாரை | 10 | 20 | 10 | 10 | 20 | 20 | 20 |
| ஊரப்பலா | — | 60 | — | — | 60 | — | — |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரார்த்தனையின் கதவுகள் மூடிக்கிடந்த போதிலும் கண்ணீர்க் கதவுகள் திறந்துதான் இருக்கின்றன.
- ஹீப்ரு பழமொழி

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## காணாமல்போனவர்களின் உறவுகள் படும் துயர் பாரீரோ!

காணாமல்போன எங்கள் பிள்ளைகள், உறவுகள் எங்கே? அவர்களை மீட்டுத் தாருங்கள் என்று கெஞ்சி அழுகின்றவர்களைப் பார்க்கும் போதெல்லாம் வயிறு பற்றி எரியும்.

அந்தளவுக்கு அவர்கள் படும் பரிதவிப்பு தாங்க முடியாதது.

இருந்தும் இத்துயர் குறித்து ஆட்சித் தலைவர்களோ படைத் தரப்பினரோ இன்னமும் மௌனமாக இருப்பது ஏன் என்பது புரியாமலே உள்ளது.

என் மகன் வருவான் என்று ஏங்கி அழும் தாயின் பரிதாப நிலையை உணர்ந்து கொள்வதற்கு இந்த நாட்டில் எவரும் இல்லை என்றாயிற்று.

காணாமல்போன பிள்ளையின் - தந்தையின் - குடும்பத் தலைவனின் புகைப்படங்களை ஏந்தியவாறு நம் உறவுகள் கண்ணீர் விடுகின்ற துன்பம் இந்த நாட்டை நிர்மூலமாக்க வல்லது.

எனினும் இதுபற்றி எவரும் உணராமல் தங்களுக்கும் இதற்கும் எந்தத் தொடர்பும் இல்லாதது போல நடந்து கொள்கின்றனர்.

வருடக் கணக்காக கண்ணீர் விட்டு தங்கள் உறவுகளைத் தேடியழும் மக்கள் இனியும் பொறுக்க முடியாது என்ற கட்டத்தில் தங்களை வருத்தி தொடர் போராட்டம் நடத்துவதே ஒரே வழி என முடிவு செய்தனர்.

ஐம்பது நாட்கள், அறுபது நாட்கள், எழுபது நாட்கள் என தொடர் போராட்டம் நீடிக்கிறது. இருந்தும் ஜனநாயக போராட்டத்தை மதித்து அந்த மக்களைச் சந்தித்து அவர்களின் துயருக்கு முடிவு கட்ட ஆட்சியாளர்கள் மனம் கொள்ளவில்லை.

நீங்கள் தமிழர்கள், சிறுபான்மை இனத்தவர்கள் உங்களுக்கு ஏற்படுகின்ற இழப்புக்கள் இழப்புக்களே அல்ல.

எங்களுக்கு இழப்பு ஏற்பட்டால்தான் அது இழப்பு என்பதாக ஆட்சிப் பீடம் கருதுகிறது.

இத்தகைய நிலையில் காணாமல்போன உறவுகளுக்கு நாங்கள் உறவுகள், ஆகையால் காணாமல்போனவர்கள் எங்கள் உறவுகள்.

எனவே அவர்களின் மீட்புக்காக; அவர்கள் பற்றிய தகவலை அறிவதற்காக நாங்களும் போராட்டத்தில் பங்கெடுக்கிறோம் என்பதாக, ஒட்டுமொத்த தமிழ் மக்களும் தமது பூரண ஆதரவை வழங்க வேண்டும்.

இவை யாவற்றுக்கும் மேலாக காணாமல் போனவர்களுக்கு நடந்தது என்ன என்பது பற்றி அரசு விளக்கம் கொடுக்க வேண்டும்.

காணாமல்போனவர்களைக் கண்டறிதல் என்ற தனது தார்மீகக் கடமையை அரசு மேற்கொள்ள வேண்டும் என்ற கோரிக்கையை முன்வைத்து சிங்கள, முஸ்லிம் சகோதரர்களும் தங்களின் ஆதரவை மனிதாபிமான அடிப்படையில் வழங்க வேண்டும்.

தான் பெற்ற பிள்ளையை காணவில்லை என்று ஆற்றாது அழுது கண்ணீர் விடும் ஒரு தாயிடம் இனம், மதம், மொழி என்ற அடையாளங்கள் தெரிவதில்லை. அங்கு தாய்ப் பாசம் மட்டுமே வெளிப்படும்.

எனவே இலங்கை வாழ் சிங்கள முஸ்லிம் சகோதரர்கள் தமிழ் மக்கள் படும் அவலத்தை மனிதநேயத்தோடு பார்க்க வேண்டும் - நோக்க வேண்டும்.

அவர்களின் நியாயபூர்வமான போராட்டத்துக்கு உங்கள் பங்களிப்பை வழங்க வேண்டும்.

அதேநேரம் காணாமல்போன உறவுகளின் அவலத்தை சர்வதேச சமூகம் ஒருகணம் திரும்பிப் பார்க்கும் வண்ணம் ஒட்டுமொத்த மக்கள் ஆதரவு பெருக வேண்டும்.

# புதிய அரசியலமைப்பு குறித்த வாக்கெடுப்பே முதல் தேர்தல்

### அமைச்சர் ராஜித தெரிவிப்பு

அரசாங்கம் 2017பம் ஆண்டு முகம்கொடுக்கும் முதல் தேர்தல் புதிய அரசியலமைப்பு குறித்த பொது வாக்கெடுப்பே என, அமைச்சர் ராஜித சேனாரட்ன தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட பின்னர், குறித்த பொது வாக்கெடுப்பு நடத்தப்படவுள்ளதாக சுட்டிக்காட்டியுள்ள அவர், தற்போது புதிய அரசியலமைப்பை உருவாக்க குழுவொன்று அமைக்கப்பட்டுள்ளதாகவும், மக்களுக்கு தெளிவுபடுத்தும் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார்.

இதற்கமைய விரைவில் புதிய அரசியலமைப்பு வெளியிடப்படவுள்ளதாகவும் ராஜித சேனாரட்ன மேலும் தெரிவித்துள்ளார்.

சுகாதார அமைச்சில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் மேற்கண்டவாறு கருத்து வெளியிட்டுள்ளார்.

இதேவேளை, மக்கள் வாக்கெடுப்பின் பின்னர் உள்ளூராட்சி மன்றங்கள் மற்றும் மாகாண சபைக்கு தேர்தல் நடத்தப்படும் எனவும் அவர் தெரிவித்தார்.(இ-7)

# இளைஞர் திறன் விருத்தி ஆதரவு

(பரந்தன்)

பூரண ஹர்த்தாலுக்கும் போராட்டத்திற்கும் மூவின சமூகத்தினரும் ஒத்துழைப்பு வழங்க இளைஞர திறன் விருத்தி அமையம் அழைப்பு விடுத்துள்ளது.

தமிழ்பேசும் மக்களின் தாயகமான வடக்கு - கிழக்கு மாகாணங்களில் நாளைய தினம் நடைபெறவுள்ள பூரண ஹர்த்தாலுக்கு கிளிநொச்சி மாவட்ட இளைஞர் திறன் விருத்தி அமைப்பு தனது ஆதரவைத் தெரிவிப்பதோடு இலங்கையின் மூவின சமூகத்தினரையும் ஒத்துழைப்பு வழங்க அழைப்பு விடுத்துள்ளது

காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்கு நீதி கோரி நடைபெறும் இந்தக் ஹர்த்தால் வெற்றி பெற அனைத்துத் தரப்பினரும் ஒத்துழைப்பு வழங்க வேண்டும். இந்தப் போராட்டம் சர்வதேச சமூகத்தின் கவனத்தை ஈர்க்க வேண்டும் என்பதுடன் தாயகம் பூராகவும் மிகவும் உணர்வெழுச்சியுடனும் இடம் பெறவேண்டும் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்களின் உணர்வுகளை நியாயமான கோரிக்கைகளை நாம் மதிக்கின்றோம்.

இவர்கள் வடக்கு கிழக்கில் தொடர்ந்து முன்னெடுத்து வரும் அறவழிப்போராட்டங்களுக்கு சரியான ஒரு நீதி வழங்கப்பட வேண்டும். அதுவரை எம் உறவுகளால் முன்னெடுக்கப்படும் போராட்டத்திற்கு பூரண ஆதரவினை வழங்குவோம்.

அத்துடன் எதிர்வரும் வியாழக்கிழமை நடைபெறும் பூரண ஹர்த்தால் போராட்டத்திற்கு மூவின சமூகத்தினரும் தமது ஒத்துழைப்புக்களை வழங்க வேண்டும் என வேண்டிக் கொள்வதுடன் வர்த்தக நிலையங்கள், வங்கிகள் தனியார் நிறுவனங்கள் சமய ஸ்தாபனங்கள், பாடசாலைகள் அனைத்தையும் மூடி தங்கள் பூரண ஆதரவை வழங்குமாறு வேண்டிக கொள்கின்றோம் எனக் கேட்டுக் கொண்டுள்ளனர். (செ-312)

## சாஸ்திரங்கள்

✦ பிறர் மனைவியை நேசிப்பவர்கள், பிறர் பொருள் மீது பற்று வைத்திருப்போர் மீது தண்டாயுதங்களால் எம்படர் தாக்குவது.

-தாமிஸ்ரம் (கருடபுராணம்)



## திருப்பதி மலை வாழும் வெங்கடேசா

திருமலைக்கு வேங்கடேசன் வந்தது எவ்விதம் என அவர் தனது ஞானதிருஷ்டி மூலம் கண்டறிந்து தமது பாசுரங்கள் மூலம் உலக மக்களுக்கு உரைக்கிறார்.

ஆண்டவன் அடியார்களிடம் அளப்பரிய அன்பு கொண்டவன்.

வாய்பேச முடியாத கன்றுகளும் ஏனைய கால்நடைகளும் அவற்றோடு மக்களும் பேய் மழையில் சிக்கித் தவித்த போது அவர்களைக் காக்கும் விதமாக ஸ்ரீகிருஷ்ணன் கோவர்த்தனகிரியைத் தன் சுண்டுவிரலால் குடையாய் உயர்த்திப் பிடித்தான்.

மகாபலிச் சக்கரவர்த்தி ஆண்டவன் மேல் அடாத பக்தி உள்ளவன். வலிமை மிகுந்தவன். உலகை வென்று தன் குடைக்குக் கீழே கொண்டுவந்த கொற்றவன்.(தொடரும்)

## பகவான் ஸ்ரீ ராமகிருஷ்ணரின் சிந்தனைச் செல்வம்

### கடவுளைத் தேடுங்கள்



✦ பூமியின் நான்கு திசையிலும் தேடிச் சென்றாலும் ஒரு இடத்திலும் கடவுளைக் காண முடியாது. அவர் உள்ளத்தின் ஆழத்தில் உறைந்திருக்கிறார்.

✦ பிறருடைய குற்றத்தைப் பற்றிப் பேசுபவன் காலத்தை வீணாகக் கழிக்கிறான். அதனால், அவன் தன் நிலையிலிருந்து தாழ்ந்து விடுகிறான்.

✦ கடின உழைப்பும், விடாமுயற்சியும் கொண்டவனுக்கு எல்லாம் உண்டாகும். அது இல்லாதவனுக்கு ஒன்றும் கிடைக்காது.

✦ பழுங்கள் நிறைந்த மரம் எப்போதும் கனத்தினால் தாழ்ந்து வளையும். அதுபோல, பெருமைப்பட வாழ வேண்டுமானால் அடக்கமும், பணிவும் கொண்டிருங்கள்.

✦ வாழ்வில் முதலில் கடவுளைத் தேடுங்கள். பிறகு பொருளைச் சம்பாதியுங்கள். இதனைப் பின்பற்றினால் நிம்மதியை அடையலாம்.

# தந்தை செல்வா அவர்களின் 40 ஆவது ஆண்டு நினைவு

தந்தை செல்வா அவர்களின் 40ஆவது ஆண்டு நினைவு தினத்தை முன்னிட்டு தமிழர் விடுதலைக் கூட்டணி அலுவலகத்தில் இன்று புதன்கிழமை மாலை 5 மணியளவில் தந்தை செல்வா அவர்களின் உருவச் சிலைக்கு மலர்மாலை அணிவித்து அஞ்சலி செலுத்தப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (இ)

# மின் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக காலை 8மணியிலிருந்து மாலை 6.30 மணி வரை வவுனியா பிரதேசத்தில் தேக்கவத்தை பிரதேசத்திலும் மன்னார் பிரதேசத்தில உமணகிரி, நறுவிலிக்குளம், ஆவனம் வஞ்சியங்குளம் ஆகிய பிரதேசங்களிலும் மின் தடைப்படும்.(இ-9)

## அன்றாட வாழ்வில் ஐஸ்வர்யம் அதிகரிப்பதற்கான ஆசாரங்கள்

**தூங்குவதன் நோக்கம் என்ன?**

தூக்கம் உடல் ஆரோக்கியத்திற்கு மிக அவசியமாகும். இரவுப் பொழுதுதான் மனிதனுக்கு தூங்குவதற்காக விதிக்கப்பட்ட நேரம் ஆகும். உடல் ரீதியாகவும் மன ரீதியாகவும் சிந்தனை வாயிலாகவும் பகல் முழுவதும் மனிதன் செயறபட்டுக் கொண்டிருப்பதால் ஏற்படும் சோர்வைப் போக்குவதற்கு நித்திரை ஒரு பரிகாரமாகும்.

சோர்வடைந்த பின்பு சிறிது நேரம் உறங்குவதால் சோம்பல் தீர்ந்து புத்துணர்வு கிடைத்து மீண்டும் செயற்பட முடிகிறது. நல்ல ஆரோக்கியமுள்ள மனிதன் ஐந்து அல்லது ஆறு மணி நேரம் உறங்க வேண்டும். நோயாளிகளும் முதியவர்களும் எட்டு மணி நேரம் உறங்கவேண்டும்.




குழந்தைகளும் தள்ளாத வயதினரும் பகலில் தூங்கலாம். அதிக அளவில் தூக்கம் விழிப்பது உடல் ஆரோக்கியத்திற்குத் தீங்காகும். எனவே மனிதன் சிறிது நேரமாவது உறங்க வேண்டும்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கே.சி.சி.சி.வெற்றிக் கிண்ணம் - 2017
## அரியாலை சென்றல் கால் இறுதிக்கு தெரிவு



கே.சி.சி.சி. வெற்றிக் கிண்ணத் திற்காக கே.சி. சி.சி.. விளையாட்டுக் கழகம் வருடாவருடம் நடத்தும் மட் டுப்படுத்தப்பட்ட ஓவர்களைக் கொண்ட துடுப்பாட்ட சுற்றுப் போட்டி யின் 11ஆவது போட்டியில் அரி யாலை சென்றல் அணி, பற்றீசி யன்ஸ் அணியை 2 ஓட்டங்களால் வெற்றி பெற்று கால் இறுதிக்கு தெரிவு செய்யப்பட்டது.

அண்மையில் நடைபெற்ற போட்டியில் முதலில் துடுப்பெடுத் தாடிய அரியாலை சென்றல் அணி 27 ஓவர்களில் சகல இலக்குகளை யும் இழந்து 111 ஓட்டங்களை பெற் றது.

நிரோஸன் - 10, சரவணன் - 34, விசாகன் ஆட்டமிழக்காது 36 ஓட்டங்களை பெற்றனர்.


பந்து வீச்சில் அஜித் - 02, ரதீ ஸன் - 03, நிதர்சன் - 01, றோபேட் - 02, கவஸ்கர் - 01, இலக்கினை கைப்பற்றினர்.

பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய பற்றீசியன்ஸ் அணி 27 ஓவர்களில் சகல இலக்குகளையும் இழந்து 109 ஓட்டங்களைப் பெற்றது.

தனுஸன் - 49, றோபேட் - 14, சுபனேஸ் - 12 ஓட்டங்களைப் பெற்ற னர்.

பந்துவீச்சில் சதீஸ் - 03, சுகநந் தன் - 02, டிசான் - 01, கஜின்தன் - 02, ஜெகன் - 02 இலக்குகளை கைப்பற்றி னர். (க)

# தேசிய மெய்வல்லுநர் போட்டி
## சாவகச்சேரி இந்துக் கல்லூரி மாணவிகள் இருவர் பதக்கம்



தேசிய மட்ட கனிஷ்ட மெய்வல் லுநர் போட்டியில் சாவகச்சேரி இந்துக்கல்லூரி மாணவிகள் இரு வர் பதக்கங்களைப் பெற்று சாதனை படைத்துள்ளனர்.

அண்மையில் கொழும்பு திய கம மகிந்த ராஜபக்ஷ விளையாட் டரங்கில் நடைபெற்ற ஈட்டி எறிதல் போட்டியில் 18 வயது பெண்கள் பிரிவில் ச.சாங்கவி 33.05M எறிந்து முதலாமிடத்தினை பெற்று தங்கப் பதக்கத்தினையும்,

20 வயது பெண்கள் பிரிவு கோலூன்றி பாய்தல் போட்டியில் பா.கிரிஜா 2.90M பாய்ந்து மூன்றா மிடத்தினை பெற்று வெண்கலப் பதக்கத்தினையும் பெற்று சாதனை படைத்துள்ளனர். (க-89)

# அஜய்குமார் ஹெற்றிக்கோல்
## Young Star அணி அசத்தல் வெற்றி





யங்கம்பன்ஸ் பிறிமியர் லீக் உதைபந்தாட்டத்தில் கடந்த 21 ஆம் திகதி அன்று இடம்பெற்ற இரண்டாவது போட்டியில் Jolly Boys அணியை எதிர்த்து Young Star அணி மோதிக் கொண்டது.

இறுதியாட்ட நேர முடிவில் 05:01 என்ற ரீதியில் jolly boys அணியை வெற்றியீட்டியது young star அணி.

young star அணி சார்பாக. அஜய்குமார் - 03, ரதன் - 01, விது - 01 கோல் போட்டனர்.

Jolly Boys அணி சார்பாக பிரகாஷ் ஒரு கோல் போட்டார்.

ஆட்டநாயகனாக Young Star அணியின் இளம் வீரர் அஜய் குமார் தெரிவு செய்யப்பட்டார். (க)

# கோப்பாய் அணியை வீழ்த்தி சம்பியனானது தெல்லிப்பழை பிரதேச தெரிவு அணி



இளைஞர் கழகங்களுக்கிடை யிலான மாவட்ட மட்ட விளையாட்டு நிகழ்வில் கரப்பந்தாட்ட ஆண்கள் பிரிவில் கோப்பாய் பிரதேச செயலக அணி மற்றும் தெல்லிப்பழை பிரதேச் தெரிவு இளைஞர் அணி கள் அண்மையில் மோதின.

இதில் கோப்பாய் தெரிவு அணியை வெற்றி கொண்டு மாவட்ட மட்டத் தில் சம்பியனான தெல்லிப்பழை பிரதேச தெரிவு இளைஞர் அணி கோப்பாய் தெரிவு அணியில் வடக் கின் பலம்மிக்க அணிகளான ஆவரங்கால் இந்து, ஆவரங்கால் மத்தி மற்றும் புத்தூர் கலைமதி அணியை பிரதிநிதித்துவப்படுத் தும் இளையோர் பங்கெடுத்ததுடன்,

தெல்லிப்பழை சார்பில் இள வாலை மத்தியை பிரதிநிதித் துவப்படுத்தும் இளையோர் அதிக மாக பங்கெடுத்தமை குறிப்பிடத்தக் கது. (க)

# புதிய விடியல் உதைபந்தாட்டம்
## குருநகர் பாடும்மீனை வீழ்த்தி இறுதிக்குள் நுழைந்தது ஞானமுருகன்

யாழ்ப்பாணம், வலிகாமம், பருத்தித்துறை, வடமராட்சி, தீவக லீக்குகளின் அனுமதியுடன் நடை பெற்ற "புதிய விடியல்-2017" உதைபந்தாட்டத் தொடரில் கடந்த 22 ஆம் திகதி அன்று நடைபெற்ற அரை இறுதியாட்டத்தில் குருநகர் பாடும்மீன் அணியை 2-1 என்ற கோல்கணக்கில் வெற்றி பெற்று இறுதியாட்டத்திற்குள் நுழைந்தது ஞானமுருகன் அணி.



போட்டியின் முதற்பாதியில் கிடைத்த நேர்உதை வாய்ப்பை அற்புதமாக பயன்படுத்தி கோலாக்கி 0-1 என பாடும்மீன் அணி முன் னிலை பெற்றபோதும் தமது ஆட் டத்தை வேகப்படுத்திய ஞான முருகன்அணியினர்ஒருகோலினைப் போட முதற்பாதி 1-1 என சம நிலையில் முடிவுற்றது.

தொடர்ந்த இரண்டாம் பாதி மேலதிக கோல்கள் எதுவும் பெறாத நிலையில் முடிவுற, தொடர்ந்து வழங்கப்பட்ட மேலதிக நேரத்தில் ஞானமுருகன் அணி ஒரு கோலைப் போட இறுதியில் 2-1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று இறுதி யாட்டத்திற்கு தகுதி பெற்றது ஞான முருகன் அணி.

அணி சார்பாக ஜெகன், [illegible] தலா ஒவ்வொரு கோலினையும் போட்டனர்.

நீண்ட இடைவெளிக்குப் பிறகு ஊரெழு றோயல் அணியுடன் ஒரு இறுதியாட்டத்தில் மோதவுள்ளது ஞானமுருகன் அணி. (க)

# சிறிலங்கா கிரிக்கெட் பிரிவு III - 2017
## ஓல்ட்கோல்ஸ் 159 ஓட்டங்களால் வெற்றி

சிறிலங்கா கிரிக்கெட் சுற்றுப் போட்டியில் இருந்து யாழ்.நகரில் இரு அணிகளை தெரிவு செய் வதற்கான தொடரில் ஓல்ட்கோல்ஸ் அணி, கே.சி.சி.சி. அணியை 159 ஓட்டங்களால் வெற்றி பெற்றுள்ளது.

முதலில் துடுப்பெடுத்தாடிய ஓல்ட்கோல்ஸ் அணி 47.5 ஓவர் களில் சகல இலக்குகளையும் இழந்து 275 ஓட்டங்களை பெற்றது.

திலீபன் - 10, மதூஸன் - 46, பிரியலக்ஸன் - 34, சிறிகுகன் - 59, குகன் - 31, சீரானன் - 28, மயூரன் - 17 ஓட்டங்களை பெற்றனர்.

நிரூஸ்யன் - 02, உமாநாத் - 02, ஜெயரூபன் - 01, சாம்பவன் - 01, பவிதரன் - 03, சத்யன் - 01 இலக்குகளை கைப்பற்றினர்.



பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய கே.சி.சி.சி. அணி 23 ஓவர்களில் சகல இலக்குகளையும் இழந்து 119 ஓட்டங்களை பெற்றனர்.

பானுஜன் - 16, ஜெயரூபன் - 14, சபானன் - 16, ஜனுதாஸ் - 16 உமாநாத் - 25,பந்துவீச்சில் திலீபன் - 03, பிரியதர்ஸன் - 01, டிலக்ஸன் - 02, சிறிகுகன் - 02 இலக்குகளை கைப்பற்றினர். (க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆசிரியர் சங்கம்...

இது தொடர்பில் அச்சங்கம் நேற்று விடுத்த ஊடக அறிக்கை வருமாறு,

கடந்த மூன்று தசாப்த காலங்களுக்கு மேலாக இடம்பெற்ற விடுதலை போராட்ட காலப்பகுதியில் நீதிக்குப்புறம்பான முறையில் வலிந்து காணாமல் போகச் செய்யப்பட்ட சம்பவங்கள் வடக்கு கிழக்கு மற்றும் இதர பிரதேசங்களில் இடம்பெற்றமை நாம் யாவரும் அறிந்தவையே.

காணாமல் ஆக்கப்பட்டோர் தொடர்பில் எவ்விதமான முன்னேற்றங்களும், தகவல்களும் இன்றி இதுவரை காலமும் காத்திருந்த அவர்களின் உறவுகளுக்கு ஏமாற்றம் மட்டுமே மிகுதியாக இருந்து வருகின்றது.

காணாமல் ஆக்கப்பட்டோர் தொடர்பில் இதுவரையில் மேற்கொள்ளப்பட்டு வந்த நியாயபூர்வமான போராட்டங்கள் மற்றும் வேண்டுகோள்கள் எவற்றிற்கும் அரசாங்கம் இன்றுவரை உரிய காத்திரமான பதில்களைத் தந்திருக்கவில்லை. அவர்களது உறவுகள் சுமார் இரு மாதங்களுக்கு மேலாக தற்சமயம் மேற்கொண்டிருக்கும் தொடர் போராட்டங்கள் கூட இதுவரையில் உரிய தரப்பினால் கண்டுகொள்ளப்படவில்லை என்பது எமக்கு மிகுந்த ஏமாற்றத்தையும், கவலையையும் விசனத்தையும் ஏற்படுத்துகின்றது.

காணாமல் ஆக்கப்பட்டவர்களது உறவுகள் மாவட்டங்கள் தோறும் போராடிவருகின்றார்கள். அதன் ஒரு அங்கமாக எதிர்வரும் வியாழக்கிழமை அன்று வடக்கு, கிழக்கு தழுவிய கடையடைப்பு மற்றும் நிர்வாக முடக்கத்திற்கு கோரியிருக்கின்றார்கள். அவர்களது இப்பூரண கடையடைப்பு போராட்டத்திற்கு பல்கலைக்கழக சமூகமாக யாழ்ப்பாணப் பல்கலைக்கழக ஆசிரியர் சங்கம் பூரணமாக ஆதரவினையும் ஒத்துழைப்பினையும் வழங்குகின்றது. இதேபோன்று ஏனைய பொது மக்கள் அமைப்புக்கள், நிறுவனங்கள், வர்த்தக நிறுவனங்கள் போன்ற இதர அமைப்புக்களையும் இப்போராட்டத்தில் உரிமையுடன் அவர்களோடு இணைந்து கொள்ளுமாறு யாழ்ப்பாணப் பல்கலைக்கழக ஆசிரியர் சங்கம் அன்புரிமையுடன் வேண்டுகோள் விடுக்கின்றது. அத்துடன் இவ்வாறான அறவழிப்போராட்டத்தின் போது வீதிகளில் ரயர் எரிப்பது, வீதித்தடைகளை ஏற்படுத்துவது மற்றும் பொதுமக்களுக்கு அசௌகரியங்களை ஏற்படுத்துவது போன்ற வன்முறைகளை முழுமையாகத் தவிர்த்துக்கொள்ளுமாறும் உங்களை அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

நீண்டகாலமாக தீர்க்கப்படாதிருக்கும் காணாமல் ஆக்கப்பட்டவர்கள் தொடர்பில் விரைந்து தீர்வு காணவேண்டும் என்பதனையும் வலியுறுத்துவதோடு அவர்கள் சார்ந்திருக்கின்ற குடும்பங்களுக்கு வாழ்வாதார உதவிகள் மற்றும் மாதாந்த உதவுதொகை தொர்டர்பில் சம்பந்தப்பட்ட தரப்பினர் கரிசனை கொள்ள வேண்டும் என்பதையும் ஆசிரியர் சங்கம் வலியுறுத்துகின்றது.

சகலரும் இந்த போராட்டத்தில் அக்கறையுடன் இணைந்து கொண்டு எமது பேராதரவினை வழங்குவதன் மூலம் அழுத்தம் ஒன்றைக் கொடுத்து காணாமல் ஆக்கப்பட்டோர் தொடர்பில் ஓர் தீர்வினை விரைந்து எட்டுவதற்கு ஒத்துழைப்போம் என பல்கலைக்கழக ஆசிரியர் சங்கம் தனது அறிக்கையில் குறிப்பிட்டுள்ளது. (செ-11)

## ஊழியர் சங்கம்...

சர்வதேசத்தின் கவனத்தையும் ஈர்க்குமுகமாக நாளை 27ஆம் திகதி வியாழக்கிழமை வடக்கு-கிழக்கு தழுவிய முழு அடைப்புக்கு போராடும் மக்களிடமிருந்து அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

எனவே அவர்களின் கோரிக்கைக்கு பல்கலைக்கழக ஊழியர் சங்கத்தினராகிய நாமும் எமது முழு ஆதரவினையும் வழங்குகின்றோம் என அந்த சங்கத்தின் செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (செ)

## மாணவர் ஒன்றியம்...

இன்றுவரை எவ்விதமான உரிய நடவடிக்கையோ அல்லது அவர்களது உறவினர்களுக்குரிய பதிலையோ வழங்கவில்லை.

மேலும் அவர்களது உறவுகள் சுமார் இரு மாதங்களுக்கு மேலாக மேற்கொண்டிருக்கும் போராட்டத்திற்கு அரச தரப்பிலிருந்து சாதகமான பதில் எதுவும் கிடைக்கவில்லை. அதன் விளைவாக பலம்மிக்க ஒரு போராட்டம் நடைபெறவேண்டிய தேவை ஏற்பட்டுள்ளது.

எதிர்வரும் வியாழக்கிழமை அன்று வடக்கு, கிழக்கு தழுவிய கடையடைப்பு மற்றும் நிர்வாக முடக்கத்திற்கு பாதிக்கப்பட்ட மக்கள் கோரியிருக்கிறார்கள். அவர்களது இக் கோரிக்கைக்கு யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியமானது பூரண ஆதரவினையும் ஒத்துழைப்பினையும் வழங்குகின்றது என அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (செ)

## போராட்டத்துக்கு...

யாழ்.மாவட்டத்தில் காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளை மீட்பதற்காக போராட்டம் கடந்த மாதம் 15ஆம் திகதி ஆரம்பமாகி தொடர்ந்து நடைபெற்று வருகின்றது.

இந்நிலையில் நாளை நடைபெறவுள்ள கதவடைப்புப் போராட்டத்திற்கு யாழ்.மாவட்டத்தில் உள்ள பொது அமைப்புக்கள் நிறுவனங்கள் ஆதரவளித்து தமது போராட்டத்தில் கலந்து கொள்ளுமாறு வடமராட்சி கிழக்கு மருதங்கேணியில் உள்ள காணாமல் ஆக்கப்பட்டவர்களை தேடியறியும் அமைப்பு கோரிக்கை விடுத்துள்ளது. (செ-60)

## பலம் மிக்க...

இழந்த மக்களும்.தமது கோரிக்கைகளுக்கு அழுத்தம் கொடுக்கும் விதமாகவும் தமது கோரிக்கைகளை வெளியுலகுக்கு வெளிபடுத்தவும், வடக்கு கிழக்கெங்கும் தொடர்ச்சியாக போராட்டங்களை முன்னெடுத்து வருகின்றனர்.

மக்கள் அணிதிரள்வுப்போராட்டங்கள், எமக்கான நீதிக்கான ஒரு காத்திரமான செயன்முறை என்பதில் தமிழ் மக்கள் பேரவை ஆழமான நம்பிக்கை கொண்டுள்ளதுடன் அதனை வலியுறுத்தியும் வந்துள்ளது.

காலாகாலமாக, வாழ்வின் அடிப்படை உரிமைகளுக்காக போராடிவரும் இந்த மக்களின் கோரிக்கைகளுக்கும் போராட்டங்களுக்கும் தமிழ் மக்கள் பேரவை தனது பூரண ஆதரவை வழங்குகிறது.

அத்தோடு இந்த மக்களின் தன்னெழுச்சியான போராட்டங்களுக்கு அனைத்து மக்கள் அமைப்புகளும் ஆதரவு தெரிவிக்கவேண்டும் எனவும் தமிழ் மக்கள் பேரவை கோரிக்கை விடுக்கிறது.

தொடர்ச்சியாக, பல தரப்புகளாலும் ஏமாற்றத்தை சந்தித்து வந்த மக்கள், தமக்கான குரலை தாமே எழுப்ப முன்வந்திருப்பதும், தமது கோரிக்கைளில் மிகத்தெளிவாகவும் உறுதியாகவும் இருந்து போராடுவதும் எம் அனைவருக்கும் ஒரு முன்னுதாரணமானதாகும்:

எனினும் இந்த மக்களின் தொடர்ச்சியான போராட்டமானது, தனியே இந்த மக்களுக்கானது மட்டுமல்ல. மாறாக அரச அடக்குமுறைகளால் அநீதிக்குட்படுத்தப்பட்ட எங்கள் அனைவரினதும் ஒட்டுமொத்த குறியீட்டுக் குரலாகவே நாம் இதனை கருத வேண்டும். நேரடியாக பாதிக்கப்பட்ட மக்கள் மட்டுமே தொடர்ச்சியாக போராடுவது என்பது, எமக்கான சமூகப்பொறுப்புணர்வை கேள்விக்குட்படுத்துகின்றது .

இம்மக்களின் போராட்டத்திற்கு அனைத்து மக்களும் தம்மாலான பங்களிப்பை வழங்கி, எம் மக்களின் நீதிக்கான குரல் மேலும் உறுதிப்படவும், சர்வதேசத்தின் காதுகளை எட்டவும் நாம் செயற்படவேண்டும்.

காணாமல் போகச்செய்யப்பட்டவர்களின் உறவுகள், உடல், உள சமூக மற்றும் வாழ்வாதார ரீதியில் எதிர்நோக்குகின்ற பிரச்சினைகளும் அழுத்தங்களும் மிகக்கொடூரமானவை. இவர்களுக்கான பொறுப்புக்கூறல் கால தாமதமின்றி செய்யப்பட வேண்டும். தடுத்து வைக்கப்பட்டவர்களின் பட்டியலை உடனடியாக வெளியிடுதல் உட்பட இந்த மக்களின் கோரிக்கைகள் அனைத்தையும் தமிழ் மக்கள் பேரவை ஏற்றுக்கொண்டு மீள வலியுறுத்துகின்றது.

அது போலவே, ஒரு மனிதனின் அடிப்படை உரிமைகளுள் ஒன்றான வாழ்விடத்தை வன்முறையினூடு ஆக்கிரமித்து வைத்திருந்து கொண்டு, நிலத்தின் உரிமையாளர்களை தொடர்ந்தும் வீதிகளில் விட்டிருக்கும் அநீதியும் நல்லாட்சி என கூறப்படும் இந்த அரசாங்கத்திலும் தொடர்கிறது.

இந்த நாட்டின் அனைத்து நிர்வாகங்களும் பொறுப்பான இலங்கை அரச உயர்பீடமானது, ஆக்கிரமிக்கப்பட்ட மக்கள் காணிகளை விடுவிப்பதற்கான பொறுப்பை தட்டிக்கழித்து, அதனை இராணுவத்தின் பொறுப்பாக காட்ட முயற்சித்திருப்பதும், பாதிக்கப்பட்ட மக்களை, இராணுவத்தினருடன் பேச்சுவார்த்தை நடத்த நிர்ப்பந்திப்பதும், எமது பிரச்சினையின் பரிமாணத்தை மேலும் தரமிறக்கியிருக்கிறது.

காணிவிடுவிப்பு குறித்து முடிவெடுக்க வேண்டிய அரசாங்கத்துக்குரிய நிறைவேற்றதிகாரத்தை இராணுவத்துக்கு வழங்கி, அதிலும் இனப்படுகொலை புரிந்தவர்கள் என குற்றம் சுமத்தப்பட்டிருக்கும் இராணுவக்கட்டமைப்புக்கு ஒரு சிவில் நிர்வாக அங்கீகாரத்தை கொடுத்து பாதிக்கப்பட்ட மக்களை இராணுவத்தோடு கலந்து பேசி அவர்கள் தருவதை பெறுமாறு கூறியிருப்பது நீண்டகால நோக்கில் மிக அபாயகரமான திட்டத்தின் ஒரு பகுதியேயாகும்.சிவில் நிர்வாகத்தின் பிரிக்க முடியாத ஒரு கட்டமைப்புத்தான் இராணுவம் என்பதனை இதன்மூலம் எம்மை ஏற்க வைக்கும் முயற்சியில் அரசு ஈடுபட்டுள்ளது.

இராணுவத்தை தமிழர் தாயகத்தின் பொதுக்காணிகளில் நிரந்தரமாக குடியமர்த்தும் செயலுக்கு சம்மதித்தாலே , வன்முறை மூலம் ஆக்கிரமிக்கப்பட்ட தமது சொந்த காணிகளை மீளப்பெறமுடியும் எனும் மிக கேவலமான பேரத்துக்கு தமிழ் மக்களை இலங்கை அரசு தள்ளியுள்ளது.

காணி தொடர்பான மக்களின் உணர்வுகளை பேரத்துக்குள்ளாக்கி, தமிழர் தாயகத்தில் இராணுவத்தின் நிரந்தர இருப்பை உறுதி செய்ய, அதுவும் எமது மக்களின்மீள் குடியேற்றத்துக்கென ஒதுக்கப்பட்ட பணத்திலேயே, ஆக்கிரமிப்பு இராணுவத்தை குடியமர்த்துவதற்கான அடிப்படைவசதிகளை செய்வது என்பது அர்த்தமுள்ள இராணுவமய நீக்கல் எனும் கோரிக்கையை அர்த்தமற்றதாக்கிறது.

தனியார் காணிகளில் இருந்து விலகிய இராணுவம் தமிழர் தாயகத்தின் பொதுக்காணிகளில் நிரந்தமரமாக குடியமர்வது என்பது, எமது மக்களின் இயல்புவாழ்க்கையை தொடர்ந்தும் அச்சுறுத்தலுக்குள்ளேயே வைத்திருக்கும்.

எனவே, தமிழர் தாயகத்தில் ஆக்கிரமிக்கப்பட்ட காணிகள் அம்மக்களிடமேயே விரைவில் மீளளிக்கப்பட்டு, இராணுவமயமாக்கல் நீக்கப்பட்டு, உண்மையான சிவில்வெளி வழங்கப்படவேண்டும் என தமிழ் மக்கள் பேரவை வலியுறுத்துகிறது.

காணாமல் ஆக்கப்பட்ட தம் உறவுகளுக்காகவும் ஆக்கிரமிக்கப்பட்ட தம் நிலங்களுக்காகவும் போராட்டத்தில் ஈடுபட்டிருக்கும் மக்களின் கோரிக்கைகள் நிறைவேறும் வரை, அம்மக்களுக்கு இடைகால நிவாரணமாக வாழ்வாதார உதவிகள் வழங்கப்பட வேண்டும் எனும் கோரிக்கையையும் நாம் இலங்கை அரசிடமும் சர்வதேச நாடுகளிடமும புலம்பெயர்ந்த எம் மக்களிடமும் முன்வைக்கிறோம்.

இப்போராடடங்கள் அனைத்தும் தனித்தனி பிரச்சினைகளுக்கான பிரத்தியேக குரல்களாக கருதப்படமுடியாதவை. எம்மீதான அடக்கு முறைகளின் விளைவுகளுக் கெதிரான ஒட்டுமொத்தகுரலாகவே இவற்றை நாம் கருதவேண்டும்.

எனவே, தமிழர் தாயகமெங்கும் இந்தப் போராட்டங்கள் அனைத்தும் ஒருங்கிணைக்கப்பட்டு, ஒருமித்த குரலாக ஒலிப்பதுவே எம் கோரிக்கைகளின் வலுவை அதிகரித்து எமக்கு சாதகமான விளைவுகளையும் விரைவுபடுத்தும்.

எனவே, இந்த மக்களின் போராட்டக்குரல்கள் வடக்கு கிழக்கு தழுவியதாக ஒருங்கிணைக்கப்பட்டு பலம்மிக்க ஒரு குரலாக பரிணமிக்க வேண்டும் என நாம் வேண்டுகிறோம் என தமிழ் மக்கள் பேரவை தனது அறிக்கையில் குறிப்பிட்டுள்ளது. (செ-11)

## பொது வேலை நிறுத்தம்...

முடிவுற்ற காலத்திலும் இராணுவத்தை எதிர்த்து போராடிய இளைஞர், யுவதிகள், குடும்பத் தலைவர்கள் ஆயிரக்கணக்கில் இராணுவத்திடம் சரணடைந்தார்கள். இராணுவம் சரணடையுமாறு பகிரங்கமாக அறிவித்தது. போர்க் காலத்தில் அவ்வாறான போராளிகளும் பொதுமக்களும் கூட இராணுவத்தினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

போர் முடிந்தது என்று 2009-ல் அறிவிப்புக்கள் வெளியாகியும் காணாமல் ஆக்கப்பட்டவர்கள் என்ன ஆனார்கள் என்று தெரியவில்லை. அவர்கள் இன்னும் இரகசிய இராணுவ முகாம்களில் வைக்கப்பட்டுள்ளார்கள் என காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகள் நம்புகிறார்கள். தாய்மார் இறுதியாகத் தெருவோரங்களில் சுட்டெரிக்கும் வெய்யிலில் இரண்டு மாதங்களுக்கு மேலாக அறவழிப் போராட்டங்களில் ஈடுபட்டு வருகிறார்கள்.

அதே போலவே இராணுவ ஆக்கிரமிப்பிலுள்ள மக்களின் நிலங்களை விடுவிப்போம என ஜனாதிபதியும் அரசும் வாக்குறுதி வழங்கியும் முழுமையாக ஆக்கிரமிக்கப்பட்ட நிலங்கள் விடுவிக்கப்படவில்லை. அந்த நிலங்களையும் விடுவிக்கவேண்டுமென மக்களும் நிலச் சொந்தக்காரர்களும் போராடி வருகின்றனர்.

இவ்வாறு போராடுகின்ற மக்கள் நாளை வியாழக்கிழமை அன்று பொது வேலை நிறுத்தத்திற்கு அழைப்பு விடுத்துள்ளார்கள். அந்த வகையில் இப் போராட்டங்களை நாம் ஆதரிக்க கடமைப்பட்டுள்ளோம் என மாவை எம்.பி தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார். (செ)

## சம்பந்தன்-இஷா...

எதிர்க்கட்சித் தலைவரும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவருமான இரா. சம்பந்தனை, மலேசிய நாடாளுமன்ற உறுப்பினரும், மலேசியாவின் முன்னாள் எதிர்க்கட்சித் தலைவர் அன்வர் இப்ராஹிமின் புதல்வியுமான நூர் இஷா அன்வர் நேற்று சந்தித்துப் பேச்சு நடத்தினார்.

கொழும்பில் நேற்று நடைபெற்ற இச் சந்திப்பு தொடர்பாக ஊடகவியலாளர்களிடம் கருத்துத் தெரிவித்த எதிர்க்கட்சித் தலைவர் சம்பந்தன், யுத்தத்திற்குப் பின்னரான காலப்பகுதியில் தமிழர் தரப்பினது நிலைகள் பற்றியும் மீள்குடியேற்றத்தில் காணப்படும் பிரச்சினைகள் குறித்தும் மலேசிய நாடாளுமன்ற உறுப்பினருடன் விரிவாக கலந்துரையாடப்பட்டது. மக்களது காணிகளை இராணுவத்தினர ஆக்கிரமித்துள்ளமை தொடர்பாக ஆர்வத்துடன் கேட்டறிந்து கொண்டார். மீள்குடியேற்றத்தில் நிலவும் குறைபாடுகள் குறித்து அரசாங்கத்திற்கு அழுத்தங்களை வழங்குவதற்கு நடவடிக்கைகளை எடுப்பதாகவும் அவர் குறிப்பிட்டார் என தெரிவித்தார். (செ-11)

## ஒன்றிணைவோம்...

முழுமையை அனைவரும் ஒத்துழைக்க வேண்டும் எனவும் கேட்டுக்கொண்டுள்ளது.

மேலும் இப்போராட்டத்திற்கு சகல பொது மக்களும் போக்குவரத்து தரப்பினரும் வர்த்தக சங்கங்கள், மாணவர்கள், உத்தியோகத்தர்கள், பொது அமைப்பினரும் பூரண ஒத்துழைப்பை வழங்க முன்வர வேண்டும் எனவும் சங்கத்தின் பொதுச் செயலாளர் செல்வராஜா கஜேந்திரன் கேட்டுக்கொண்டுள்ளார். (செ)

## உணவகத்தில்...

ள்ளாகியுள்ளது.

வைத்தியசாலைக்கு முன்பாக உள்ள உணவகத்தில் திடீரென தீப்பற்றியுள்ளது. இதன் காரணமாக கடையின் முன் பகுதியில் அதிகளவான தீ பரவிய நிலையில் அப்பகுதியில் இருந்த இளைஞர்கள் ஒன்றுதிரண்டு தீயை கட்டுப்படுத்தியிருந்தனர்.

இத் தீவிபத்துக்கு எரிவாயு கசிவே காரணம் என சந்தேகிக்கப்படுகின்ற நிலையில் இது தொடர்பில் செட்டிக்குளம் பொலிஸாருக்கும் தகவல் தெரிவிக்கப்பட்டிருக்கின்றது.(செ-250)

## வவுனியா வர்த்தக...

களை கடக்கின்றன. அந்த மக்களின் போராட்டங்களையும், அவர்களின் உணர்வுகளையும் வர்த்தக சமூகமாகிய நாமும் மதிக்கின்றோம். அவர்களது கோரிக்கைகள் நிறைவேற்றப்பட வேண்டும் என்பதும் எமது விருப்பமாகும்.

வவுனியா மற்றும் கிளிநொச்சியில் போராட்டத்தில் ஈடுபட்டுள்ள காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் கோரிக்கைக்கு அமைவாக எமது வர்த்தசங்க நிர்வாக கூட்டம் நேற்றிரவு நடைபெற்றது.

அதற்கமைவாக வவுனியா வர்த்தகர்கள் அனைவரும் தங்களது வர்த்தக நிலையங்களை நாளை 27ஆம் திகதி பூட்டி ஒத்துழைப்பு வழங்குமாறு வவுனியா வர்த்தக சங்கத்தின் தலைவர் ரி.கே.இராஜலிங்கம் மேலும் தெரிவித்தார். (செ-250)

## முல்லை வர்த்த...

நேற்றும் தொடர்ந்து இடம்பெற்று வருகின்றது.

இந்நிலையில் நாளை 27ஆம் திகதி வடக்கு கிழக்கின் பல்வேறு பகுதிகளிலும் நடைபெறும் ஹர்த்தால் போராட்டத்துக்கு இணைவாக முல்லைத்தீவிலும் கடையடைப்பு போராட்டமொன்றை நிகழ்த்தவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது


இதற்கமைய முல்லைத்தீவின் புதுக்குடியிருப்பு வர்த்தக சங்கத்தினர் தமது கடைகளை அடைத்து மக்களுக்கு தமது ஆதரவை வழங்கவுள்ளதாக அறிவித்துள்ள நிலையில்,

முல்லைத்தீவின் உடையார்கட்டு வர்த்தக சங்கத்தினர், விசுவமடு வர்த்தக சங்கத்தினர், ஒட்டுசுட்டான் வர்த்தக சங்கத்தினர், மாங்குளம் வர்த்தக சங்கத்தினர், மல்லாவி வர்த்தக சங்கத்தினர் அனைவரும் தமது கடைகளை அடைத்து மக்களுக்கு தமது ஆதரவை வழங்கவுள்ளதாக தெரிவித்துள்ளனர்.

அதேவேளை முல்லைத்தீவு வர்த்தக சங்கத்தினர் மற்றும் முள்ளியவளை வர்த்தக சங்கத்தினர் ஆகியோர் நேற்றிரவு வரை தீர்மானம் மேற்கொள்ளவில்லை எனவும் இன்று காலையில் கூட்டம் கூடி தீர்மானம் எடுக்கவுள்ளதாகவும் தெரிவித்தனர். (செ-281)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடலில் மூழ்கி...



ள்ளார்.

உரும்பிராய் தெற்கைச் சேர்ந்த செல்லையா மகாதேவன் (வயது 81) என்பவரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

சில நாட்களாக கீரிமலை சிவன் ஆலயத்துக்கு செல்லும் வழக்கத்தை கொண்டிருந்த குறித்த முதியவர் நேற்றைய தினமும் சென்றிருந்த நிலையில் அங்கு கடலில் நீராடிய வேளை நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளதாக தெரியவந்துள்ளது.

கீரிமலைக் கடற்பரப்பில் சடலம் ஒன்று இருப்பதாக காங்கேசன்துறைப் பொலிஸாருக்கு தகவல் கிடைத்ததனையடுத்து சம்பவ இடத்துக்கு சென்ற பொலிஸார் விசாரணையை மேற்கொண்டதோடு சடலத்தை மீட்டு பிரேத பரிசோதனைக்காக தெல்லிப்பழை வைத்திய சாலையில் ஒப்படைக்கப்பட்டு பின்னர் மரண விசாரணை யாழ்.போதனா வைத்தியசாலையில் இடம்பெற்று சடலம் உறவினர்களிடம் கையளிக்கப்பட்டுள்ளது.

இச்சம்பவம் தொடர்பில் காங்கேசன்துறைப் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

(செ-9-30-60-87)

# வவுனியா இ.போ..

மாகாணம் தழுவியதாக நடைபெறவுள்ள ஹர்த்தாலுக்கு இலங்கை போக்குவரத்து சபையின் வவுனியா சாலை தொழிற்சங்கம் தனது ஆதரவினை வழங்கியுள்ளது.

இரண்டு மாதங்களைக் கடந்த நிலையிலும் தொடர்ந்து போராடிவரும் காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகளுக்கு நீதி வழங்கப்பட வேண்டும் அந்த உறவுகளுக்கு அரசு உரிய பதிலை வழங்க வேண்டும் என்பவற்றை வலியுறுத்தி வடக்கு, கிழக்கு மாகாணங்களில் இன.மத.மொழி பேதங்களைக் கடந்து நடைபெறவுள்ள ஹர்த்தால் போராட்டத்திற்கு நாமும் ஆதரவு வழங்குகின்றோம்.

அன்றைய தினம் நாமும் எமது செயற்பாடுகளை முடக்கி பாதிக்கப்பட்ட அவர்களுக்காக குரல் கொடுப்போம் என அத் தொழிற்சங்கம் தெரிவித்துள்ளது.(செ-250)


மேல்மாகாண பிரபல ஆசிரியரின் வழிகாட்டலில்
IELTS (ACADEMIC/GENERAL) வகுப்புக்கள் மற்றும்
திருமணம் முடித்து SPONSOR VISA இல் UK செல்பவர்களுக்கு IELTS Life skills A1 EXAM இற்குரிய வகுப்புக்கள் நடைபெறுகின்றன.
STUDY in UK & EUROPE
நேரில் வந்து இலவச சட்ட ஆலோசனைகளை கேட்டு, வளமான எதிர்காலத்தை எட்டிப்பிடிக்க...
IELTS EXAM REG. CENTRE
WORLD EDUCATION CONSULTANCY
A9 வீதி, சாவகச்சேரி
0779265447, 0217200989
புதிய உயர் கல்லூரி வளாகம்
ஆரியகுளம், யாழ்ப்பாணம்

## விற்பனைக்கு

பெரிய மற்றும் சிறிய கண்ணாடி அலுமாரிகள் மற்றும் றாக்கைகள் 30, நீர்வேலியில் விற்பனைக்கு உண்டு. புடைவைக்கடை மற்றும் பான்சிக் கடைகளுக்கு உகந்தது.
தொடர்பு: 077 666 0211
(சி-8262)

## விரைவு பொதிகள் சேவை, விமான பயணச்சீட்டுகள் விசா சேவைகள்

- அனைத்து சேவைகளும் மிக குறைந்த கட்டணத்தில்
- மேலதிக கட்டணமின்றி பொதிகள் வீடுகளில் வந்தே பெற்றுக்கொள்ளப்படும்.
- விடுமுறை நாட்களிலும் ஞாயிற்றுக்கிழமைகளிலும் அலுவலகங்கள் உண்டு.
- எம்மிடம் சேவைகளை பெற்றுக்கொள்பவர்களுக்கு தங்கப்பவுண், மோட்டார் சைக்கிள்கள் வெல்லும் வாய்ப்பு

UK-550/=Kg
மற்றும் அனைத்து நாடுகளுக்கும் குறைந்த விலையில்
DELIVERY IN 3 - 5 DAYS
V2 TRAVELS-0768226240
● யாழ்ப்பாணம் ● கிளிநொச்சி ● நெல்லியடி ● பருத்தித்துறை ● வல்வெட்டித்துறை
(சி-8229)

## வேலைவாய்ப்பு

எமது நிறுவனத்தில் நிரந்தரமாக பணிபுரியக் கூடிய கணனி அறிவுள்ள, ரைப்பிங் செய்யத் தெரிந்த, நல்லொழுக்கம், நற்பண்புள்ள பெண் பணியாட்கள் தேவை. தகுதியானவர்கள் மேலதிக விடரங்களுக்கு நேரில்வருகை தரவும்.
செல்வா கொமினிக்கேசன்
124, கோயில் வீதி, யாழ்ப்பாணம்.
(பொஸ்கோ பாடசாலை சந்தி)
(8826)

## எக்ஸ்பிறஸ் பொதி விநியோக சேவை

உலகின் முதல் தர கூரியர் நிறுவனத்தின் ஊடாக உங்கள் வீட்டில் இருந்தவாறே உள்நாட்டு, வெளிநாட்டு முக்கிய ஆவணங்கள் பொதிகளை துரித கதியில் அனுப்பிட நாடுங்கள்.



CNR World Wide Express
இல.401. மணிக்கூண்டு கோபுர வீதி, (பெருமாள் கோவில் அருகாமை) யாழ்ப்பாணம்.
தொடர்புகளுக்கு: 021 5674145, 077 2931062
follow us : cnrworldwideexpress
(சி-8258)

## வேலைவாய்ப்பு

- Distributor's
- Training Administrators
- A.S.M
- Managers

ஆகிய துறைகளில் வடக்கு கிழக்கு மாகாணங்களில் இயங்கிவரும் Dynamic கிளைகளுக்கு பதவி வெற்றிடங்கள் உள்ளதால் தாங்களும் O/L, A/L தகைமை இருப்பின் விண்ணப்பிக்கவும்.
- 20 பேர் மட்டும் தேவை.
- வயதெல்லை 18 -35

தொடர்பு :
0766781042, 0766668385
(8842)

## வெளிநாடுகளுக்கான துரித தபால்கள், பொதிகள் சேவை

- 220க்கு மேற்பட்ட நாடுகளுக்கான சேவைகள்
ஞாயிறு, விடுமுறை தினங்களிலும் சேவையினைப் பெற்றுக் கொள்ளலாம்
- உணவுப் பொருட்கள், உடைகள், அன்பளிப்புப் பொருட்கள், கடல் உணவுகள், மருந்துப் பொருட்கள் என்பன ஏற்றுக் கொள்ளப்படும்.

11kg க்கு மேற்பட்ட பொதிகளுக்கு 1kgற்கான விசேட சலுகைக் கட்டணம்
லண்டன் 500/-, ஜேர்மன் 600/-, பிரான்ஸ் 650/-, சுவிஸ் 800/-, கனடா 950/- ஏனைய நாடுகளுக்கும் விசேட ச்லுகைகள்
குறித்த முகவரியில் ஒப்படைக்கப்படும்

திருமுருகன் கொம்நெற் (pvt) Ltd
271A, K.K.S, வீதி, யாழ்ப்பாணம். தொ.இல. 021 222 7835, 077 755 4528
கிளைகள்
No. 46, ஆடியபாதம் றோட், திருநெல்வேலி.
No. 18, பிரதான வீதி, நெல்லியடி.
பிரதான வீதி, சங்கானை.
பிரதான வீதி, பருத்தித்துறை.
57, புகையிரத நிலைய வீதி, கிளிநொச்சி.
(8841)

ஓம் விராட் விஸ்வப் பிரம்மனே நமஹ

Rube Since 1982 Jewellery

ரூபி ஜுவல்லறி இன் அக்ஷய திருதியைக் கொண்டாட்டம்

# ரூபி ஜுவல்லறி

தங்கநகை உலகில் 34 வருடம் அனுபவம் வாய்ந்த நாங்கள் உலகின் பல பாகங்களிலும் இருக்கும் எமது வாடிக்கையாளர்களுக்கு சிறந்த சேவையினை வழங்கிக் கொண்டிருக்கின்றோம் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கின்றோம்.

நம்பிக்கை, கைராசி மற்றும் தரம்குன்றா

சிங்கப்பூர் தரத்திலான தங்க நகைகளை உத்தரவாதத்துடன் பெற்றுக்கொள்ளலாம்.



எம்மிடம் கடன் அட்டைகள் மூலம் கொள்வனவு செய்யும் வசதியும் உண்டு.

ரூபியின் தங்கக் காசு மழை
24.04.2017 - 01.05.2017 வரை
எமது ஜுவல்லறியில் தங்கத்தினை கொள்வனவு செய்யும் 10 வாடிக்கையாளர்களுக்கு குலுக்கல் முறை மூலம் தெரிவு செய்யப்பட்டு தங்கக் காசு வழங்கப்படும்.

இவ் அரிய சந்தர்ப்பத்தை தவறவிடாதீர்கள்.






வாடிக்கையாளர்கள் முற்கூட்டியே தங்களுக்கு விரும்பிய நகைகளை ஓடர் செய்து சிரமத்தை தவிர்த்துக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

இல: 227 - 229,
கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
021 221 6919
0777 344 074
(சி-726)


இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 26.04.2017 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org